REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
தினகரன்

2023 செப்டெம்பர் 1 வெள்ளிக்கிழமை

வரு. 91 இல. 207 | Friday 01, September, 2023 | 24 பக்கங்கள் | 50/-

## உள்ளூர் சந்தையில் முட்டை விலை குறைந்துள்ளது

### களுத்துறையில் ரூ.35க்கு விற்பனை



களுத்துறை மாவட்டத்திலுள்ள ச.தொ.ச. நிலையங்களில் 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் முட்டையின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், சாதாரண கடைகளில் முட்டையின் விலை

06

### எசல பெரஹறாவின் நிறைவு ஜனாதிபதிக்கு அறிவிப்பு



கண்டி, தலதா மாளிகையின் எசல பெரஹறா இனிதே நடந்தேறியதை ஜனாதிபதிக்கு அறிவிக்கும் நிகழ்வு நேற்று கண்டி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெல, உத்தியோகபூர்வ பத்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தபோது...

வேதன முறைக்கு பதிலாக உற்பத்தியில் பங்குதாரர்கள்;

## அரச அங்கீகாரத்துடன் விரைவில் தொழிலாளர்களுக்கு காப்புறுதி

### அமைச்சர்கள் மனுஷ – ஜீவன் சந்திப்பில் இணக்கப்பாடு





மலையக பெருந்தோட்டத்துறையில் நாள் வேதன முறைமைக்கு பதிலாக இலாப பங்கீட்டு முறையை உருவாக்கி தொழிலாளர்களை உற்பத்தி பங்குதாரர்களாக மாற்றுவதே தமது நோக்கமாக உள்ளதென, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட

06

## மத்தேகொடவில் முதலாவது 'சினோபெக்' எரிபொருள் நிலையம்

### டீசல், பெற்றோல் லீற்றருக்கு ரூ. 03 விலைக்கழிவுடன் ஆரம்பம்



சினோபெக் எனர்ஜி லங்கா – சினோபெக் குழுமத்தின் செயற்பாட்டு நிறுவனம் உத்தியோகபூர்வமான வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன், கொழும்பிலுள்ள மத்தேகொடவில் தனது முதலாவது

06

2048ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையே இலக்கு

# நாட்டில் 100 பாடசாலைகளில் மூலதனச் சந்தை சங்கங்கள்

### எதிர்கால சந்ததியினரின் நவீன தொழில்நுட்ப, நிதி அறிவாற்றலை மேம்படுத்த திட்டம்

### அடுத்த ஆண்டு முதல் மத்திய வங்கியின் அறிக்கை தொடர்பாக பாடசாலைகளில் ஆராயவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



நவீன தொழில்நுட்பம் மற்றும் நிதி அறிவாற்றலினூடாக எதிர்கால சந்ததியினர் வலுவூட்டப்படுவார்களென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிய பொருளாதார முறைகளுடன் 2048ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையை நோக்கிய பயணத்தில் இது அத்தியாவசியமானதெனவும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அடுத்த வருடம் முதல் பாடசாலைகளில் மத்திய வங்கி அறிக்கை தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாகவும் அதற்காக ஆசிரியர்கள் மற்றும் மாணவத் தலைவர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கும் வேலைத்திட்டத்தை இலங்கை மத்திய வங்கி நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

06

இந்தியாவுடனான பேச்சுவார்த்தை வெற்றி பெற்றால்

## மட்டக்களப்பிலிருந்து யாழுக்கு புதிய ரயில் சேவைக்கு ஏற்பாடு

### மட்டு. செயலக கூட்டத்தில் அமைச்சர் பந்துல உறுதியளிப்பு




லோரன்ஸ் செல்வநாயகம்

இந்தியாவிலிருந்து ரயில்களை கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுவதுடன், அது வெற்றிகரமாக முடிவுற்றால் அடுத்த வருடத்தில் மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புதிய ரயில் சேவையை நடத்த முடியுமென, அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

06

## மே 09 வன்முறை குறித்து புதிய விசாரணைகள் ஆரம்பம்

### CIDயினர் ஆரம்பித்துள்ளதாக டிரான் அலஸ் தெரிவிப்பு



கடந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவினர் புதிய விசாரணையை ஆரம்பித்துள்ளதாக, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற வன்முறைகளை தடுக்கத் தவறியதாகக் கூறி அப்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, பொலிஸ் மாஅதிபர்

06

வலியையும் வேதனையையும் கொச்சைப்படுத்த வேண்டாம்;

## காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளுக்கு தீர்வு கிட்டும்

### அவர்களது கண்ணீரை அரசு நன்கு அறியும் – நீதியமைச்சர்



காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வலியும் வேதனையும் அரசுக்கு தெரியும். கொடூர வேதனையில் துடிக்கும் அந்த உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமென, நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையிட்டு

06

## A/L பரீட்சை முடிவுகள் இவ்வாரம் வெளியாகும்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு



க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை செப்டெம்பர் முதல் வாரத்தில் வெளியிட முடியுமென, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித ஜயசுந்தர தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை திருத்தும் பணி இறுதிக்கட்டத்தில் இருப்பதால் விரைவில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்த உயர்தரப் பரீட்சைக்கு 2,78,196

06

## வாகன இறக்குமதி தடைக்கு பின் 6,900 வாகனங்கள் இறக்குமதி!

### அவசர தேவைகளுக்காகவே அரசு அனுமதி வழங்கியது



லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கம் வாகன இறக்குமதிகளுக்கு தடை விதித்ததன் பின்னர், விசேட நடவடிக்கைகளுக்கான தேவைகளுக்காக மாத்திரம் 6,900 வாகனங்களை நாட்டுக்கு கொள்வனவு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர்,

06



### பௌத்த மதம், சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல நாம்

உதய கம்மன்பிலவுக்கு கஜேந்திரகுமார் பதில்

03



### வசந்த முதலிகே உள்ளிட்ட மூவருக்கு பிடியாணை

வழக்கு ஒன்றில் ஆஜராகாமையால் உத்தரவு

03



5,000க்கும் அதிகமான முறைப்பாடுகள்;

### சிறுவர் துஷ்பிரயோகம் பன்மடங்கு அதிகரிப்பு

தேசிய சிறுவர் பாதுகாப்பு சபை

03

குறைபாடுகளை கண்டறிந்து செயற்பட

## மருந்து கொள்வனவு குறித்து மக்களின் கருத்தறிய முடிவு

### புதிதாக நியமித்த குழு தீர்மானம்




நாட்டின் மருந்துக் கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களின் கருத்துகளை பெறுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தரமான மருந்துகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதிலுள்ள பிரச்சினைகளை கண்டறிதல் உள்ளிட்ட விடயங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

06

## தென்மேற்கு பருவ மழையின் தாக்கம் இன்று முதல்!

### கண்டி உட்பட 10 மாவட்டங்களில் கடும் மழை

லோரன்ஸ் செல்வநாயகம்



தென்மேற்கு பருவ மழையின் தீவிரம் காரணமாக தென்மேற்கு பகுதியில் நிலவும் மழை நிலைமை அதிகரித்துள்ளதாக, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. கண்டி உட்பட 10 மாவட்டங்களில் கடும் மழை பெய்யுமெனவும், வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. தென்மேற்கு பருவ மழையின் தீவிரம் காரணமாக நாடு முழுவதும்

06

24 மணிநேரம் தொடர்ச்சியாக நடனமாடி

## ஹட்டன் டான்ஸ் ஸ்டார் அணி உலக சாதனை

ஹட்டன் சுழற்சி நிருபர்



இடைவிடாது தொடர்ச்சியாக 24 மணிநேரம் நடனமாடி, சோழன் உலக சாதனை புத்தகத்தில் மலையக பெருந்தோட்டசமூகத்தைச்சார்ந்த 7 இளைஞர்களும் 2 யுவதிகளும் இடம்பிடித்துள்ளனர்.

06

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு செப். 05 இல்

மாங்குளம் குறூப் நிருபர்



முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகளை எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனித புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணை தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்ட நீதவான்

06




# இறுதி ரந்தோலி பெரஹராவைக் கண்டுகளித்த ஜனாதிபதி



கண்டி வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகையின் எசல பெரஹராவின் இறுதி ரந்தோலி பெரஹராவைக் காண ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இணைந்துகொண்டார்.

பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்க, அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்த், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க செனட் சபை உறுப்பினர் கிறிஸ் வென் ஹொலனும் (Chris Van Hollen), இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் (Julie Chung) ஆகியோரும் ஜனாதிபதியுடன் இணைந்து பெரஹராவைக் கண்டுகளித்தனர். நேற்று முன்தினம் (30) இரவு 7.03 சுப நேரத்தில் ஸ்ரீ தலதா மாளிகையின் முன்பாக வடக்கு திசையை நோக்கிப் பயணித்த எசல பெரஹரா, தலதா வீதி, யட்டிநுவர வீதி, கந்த வீதி, டி.எஸ். சேனாநாயக்க வீதி ஊடாக பயணித்து ரஜ வீதியூடாகச் சென்றது.வரலாற்று சிறப்புமிக்க எசல பெரஹராவின் இறுதி ரந்தோலி பெரஹராவைக் காண, பாதையின் இருபுறமும் பெருமளவில் மக்கள் திரண்டிருந்தனர்.

## மதத் தலைவர்கள் ஆட்சியாளர்களுக்கு அறிவுரை வழங்க வேண்டுமே தவிர அரசியல் செய்யக்கூடாது

**பிரபா கணேசன்**



ஆஷ்ரப் ஏ சமத்



மதத்தலைவர்கள் அரசியல்வாதிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டுமே தவிர அரசியல் செய்யகூடாது. அவ்வாறு அரசியல் நடவடிக்கைகளில் தலையிட்டு தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அது நாட்டை பாரிய அழிவுக்கு இட்டுச்செல்லும்.

வீழ்ச்சியடைந்திருந்த நாடு மீண்டும் கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில் நாம் அனைவரும் மத, கட்சி பேதமின்றி பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேஷன் தெரிவித்தார்.

கொழும்பு, ஜிந்துபிட்டி பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நாம் அதிகாரத்திலிருந்த போது எமது மக்களுக்கு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்தோம். குறிப்பாக மாணவர்களின் கல்விக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கி அதன் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தினோம்.கல்வியின் மூலமே சிறந்த எதிர்கால சமூகத்தை உருவாக்க முடியும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

இருப்பினும் இன்றைய தலைவர்கள் மக்களிடத்தில் நேரடியாக கலந்துரையாடுவதனை விட்டு விட்டு தொலைக்காட்சிகளிலும், முகப் புத்தகங்களிலும் உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.



நாங்கள் அவ்வாறு இல்லை. நேரடியாக மக்களிடத்திற்கு சென்று அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிவோம்.ஆட்சியாளர்களிடத்தில் நேர்மை காணப்பட வேண்டும். அதன் மூலமே சிறந்த சேவையை மக்களுக்கு வழங்க முடியும்.

நாம் அவ்வாறே இருந்தோம். இனியும் இருப்போம்.

எதிர்காலத்தில் அதிகளவிலான இளைஞர்களை அரசியலுக்குள் உள்வாங்க வேண்டும். இதன் மூலம் அரசியலில் புதிய மாற்றமொன்றை உருவாக்க முடியும் என்றார்.

## லேக்ஹவுஸ் நிறுவன முன்னாள் ஊழியர் காலமானார்



லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தேசிய விநியோகப் பிரிவின் (Dispatch) முன்னாள் முகாமையாளர் ஜே.ஏ. எஸ்.சி. பெரேரா (சுமித்) அகால மரணமானார். அவரின் இறுதிக் கிரியைகள் இன்று 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு ஹொரண, ஹெடிகம பொது மயானத்தில் நடைபெறும்.

## கண்டி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் முப்பெரும் விழா

### கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலில் ஞாயிற்றுக்கிழமை நிகழ்வு

*மாவத்தகம தினகரன் நிருபர்*

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நூற்றாண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபை மற்றும் அதன் அபிவிருத்தி சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் முப்பெரும் விழா ஞாயிற்றுக்கிழமை கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலில் காலை. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் எம். ஐ. எம். ரிஸ்வி முப்தியின் சேவை நலன் பாராட்டு விழாவும் கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் எச். உமர்தீன் தலைமையில் நடைபெறவுள்ளதாக கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபையின் செயலாளர் ஏ. எல். அப்துல் கப்பார் (தீனி) தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் எம். ஐ. எம். ரிஸ்வி முப்தி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்தோடு விசேட அம்சமாக 65 வயதுக்கு மேற்பட்ட உலமாக்களைக் கௌரவித்தல், 45 வயதின் கீழ் இறையடி எய்திய உலமாக்களின் குடும்பங்களுக்கு உதவி வழங்குதல் மற்றும் அல்லாஹ்வின் பாதையில் சமூகப் பங்காற்றி இறையடி எய்திய உலமாக்கள் மற்றும் சமூகசேவையாளர்களை நினைவு கூர்ந்து விசேட துஆப் பிரார்த்தனை போன்ற பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு காவடிகளுடன் சென்ற குடும்பஸ்தர் திடீர் மரணம்

*(நாகர்கோவில் விசேட நிருபர்)*

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்துக்கு காவடிகளுடன் நடந்து சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை (30) இரவு மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் சமரபாகு, மாவடியைச் சேர்ந்த சுந்தரம் மோகன்ராஜ் (வயது 51) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தை என தெரிய வந்துள்ளது.

சமரபாகு பகுதியிலிருந்து சந்நிதி ஆலயத்துக்கு காவடி எடுத்துச் சென்றவர்களுடன் நடந்து சென்ற குடும்பஸ்தர் ஆலயத்தில் இரவு 7.00 மணியளவில் மயங்கி விழுந்துள்ளார். அவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றி வீட்டுக்கு கொண்டு சென்ற போதும் அவர் மயக்கத்திலேயே இருந்துள்ளார். இதனால் அவரை முச்சக்கர வண்டியில் ஏற்றி வல்வெட்டித்துறை, ஊறணி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு நேற்று வியாழக்கிழமை(31) பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா தலைமையில் விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டன. இதனையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளது.

## சந்நிதியான் தேர்த்திருவிழாவில் 25 பவுண் தங்க நகைகள் திருட்டு

*(கரவெட்டி தினகரன் நிருபர்)*

யாழ்ப்பாணம் செல்வ சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்களின் 25 பவுண் தங்கநகைகள் திருடப்பட்டுள்ளன. ஆலய தேர் திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது நாட்டின் பல பாகங்களிலிருந்தும், புலம்பெயர் நாடுகளிலிருந்தும் பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர். அவ்வேளையில், சனக் கூட்டத்தை சாதமாக பயன்படுத்திக் கொண்ட திருடர்கள் ஆலயத்துக்கு வருகை தந்திருந்தோரின் நகைகளை திருடியுள்ளனர். நகை திருட்டுக்கள் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு 11 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. முறைப்பாட்டின் பிரகாரம் சுமார் 25 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வரட்சி நிலையினால் விவசாயிகள் மத்தியில் பிணக்குகள் அதிகரிப்பு

*ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்*

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரணமாக விவசாயிகளிடத்தில் பிணக்குகள் அதிகரித்து வருவதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில் தெரிய வந்துள்ளது.

வரட்சி நிலைமை தொடருமானால் இந்த நிலைமை தற்பொழுதுள்ள நிலைமையை விடமேலும் அதிகரிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது. தங்காலை, பெலியத்தை மற்றும் வீரகெடிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் வரட்சியினால் கூடுதலாக பாதிப்படைந்துள்ளதோடு மஹவலி பிரதேச விவசாயிகளும் விவசாயத்தை மேற்கொள்ள நீரின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் தங்களது விவசாய நிலங்களுக்கு நீரை கொண்டுசெல்லும் போது விவசாயிகளிடத்தில் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு வருகின்றன. கால்வாய்களுக்கு சேதம் விளைவித்து விவசாயிகள் நீரை பெறுவதற்கு முயற்சி செய்து வருவதினால் இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

கால்வாய்களினூடாக நீரை விநியோகிக்கும் போது சில பிரதேசங்களுக்கு பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் எச். பீ. சுமனசேகர தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 செப்டெம்பர் 1 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්


தொழுகை நேரம்
சுபஹ் - 04.47
லுஹர் - 12.12
அஸர் - 03.16
மஃரிப் - 06.18
இஷா - 07.29

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆவணி 16
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



உள்ளூராட்சி நிறுவனங்கள் ஈட்டும்

# நிதி தொடர்பாக மேற்பார்வை செய்ய கோபா குழு தீர்மானம்



உள்ளூராட்சிமன்றங்கள் கணக்காய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டாலும், அந்த நிறுவனங்களினால் ஈட்டப்படும் நிதி இதுவரை கணக்காய்வுக்கு உட்படுத்தப்படவில்லையென, அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுவின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

இதற்கமைய கணக்காய்வுக்கு உட்படுத்தப்படாத பிரிவுகளை கணக்காய்வுக்கு உட்படுத்துவது தொடர்பாக அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழு (கோபா குழு) கவனம் செலுத்தியிருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

2019/2020ஆம் ஆண்டுகளில் திருப்திகரமான செயல்திறன் மட்டத்தை அடைந்த அரசாங்க நிறுவனங்களை கௌரவித்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 29ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, கோபா குழுவின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"கடந்த 2004ஆம் ஆண்டு தான் பாராளுமன்றத்துக்கு வந்த போது, சில அரசாங்க நிறுவனங்களின் 1980ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இருந்த போதும், இந்தக் குழுக்களின் செயற்பாடுகள் காரணமாக இதுவரை பல்வேறு நிறுவனங்கள் உரிய முறையில் செயற்பட்டு வருகின்றன" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கம் முன்னெடுத்துள்ள 06

# பௌத்த மதம், சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல நாம்

உதய கம்மன்பிலவுக்கு கஜேந்திரகுமார் பதில்



நாங்கள் பௌத்த மதத்துக்கோ, சிங்கள மக்களுக்கோ எதிரானவர்கள் கிடையாதென, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது தொடர்பாக கடந்த செவ்வாய் (29) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "இன அழிப்பு இடம்பெற்று வந்த காலத்தில் கூட நாங்கள் சிங்கள மக்களின் சொத்துகளையோ, உடைமைகளையோ அழிக்க நினைத்தது கிடையாது. சமீபத்திய போராட்டங்கள் என்னையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் அச்சுறுத்துவதாக உள்ளது. உதய கம்மன்பிலவின் கருத்துகளை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்றோமே தவிர, வடக்கு, கிழக்கில் சிங்களவர்கள் கால் பதிக்க கூடாதென்று சிங்களவர்களுக்கு எதிராக செயற்படவில்லையென்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்" எனத் தெரிவித்தார்.

காலை 08 மணியிலிருந்து மாலை 04 மணிவரை

# பாடசாலை நேரத்தை நீடிக்க யோசனை ஒன்று முன்வைப்பு

கல்வியமைச்சிடம் விளையாட்டுத்துறை அமைச்சர் கோரிக்கை



பாடசாலை நேரத்தை காலை 8.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை நீடிப்பதற்கான யோசனையொன்றை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் சமர்ப்பித்துள்ளதாக, விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்தார். காலியில் கரையோரங்களை சுத்தப்படுத்தும் வேலைத் திட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இந்த விடயத்தை தெரிவித்தார். பாடசாலை மாணவர்கள் விளையாட்டில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா.வின் புதிய வதிவிடப் பிரதிநிதி எதிர்க்கட்சி தலைவர் சஜித்துடன் சந்திப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் (MarcAndr□ Franche) மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்குமிடையிலான சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (30) நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ், இந்நாட்டில் தனது பணியை ஏற்றுக்கொண்டதன் நிமித்தமே இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் விடயங்கள் தொடர்பாக இரு தரப்பினருக்குமிடையில் பல்வேறு கருத்துகள் இதன்போது பரிமாறப்பட்டன. நாட்டில் நிலவி வரும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் 06

# வசந்த முதலிகே உள்ளிட்ட மூவருக்கு பிடியாணை

வழக்கு ஒன்றில் ஆஜராகாமையால் உத்தரவு



வழக்கொன்றில் ஆஜராகாத காரணத்தினால் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் ரத்கரவ்வே ஜினரத்ன தேரர் ஆகியோருக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்ட வழக்கில் இவர்கள் ஆஜராகாமையாலேயே, இவர்கள் மூவருக்கு எதிராகவும் இந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த திகதியில் கொழும்பிலுள்ள தனியார் கட்டடமொன்றுக்கு சொந்தமான வாகன நிறுத்துமிடத்துக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பான வழக்கை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி மீண்டும் 06

5,000க்கும் அதிகமான முறைப்பாடுகள்;

# சிறுவர் துஷ்பிரயோகம் பன்மடங்கு அதிகரிப்பு

தேசிய சிறுவர் பாதுகாப்பு சபை

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக இந்த வருடத்தின் (2023) ஒகஸ்ட் மாதம்வரை 5,000க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 5,456 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, இதில் 242 முறைப்பாடுகள், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பானவையெனத் தெரிவித்தது. 1,296 முறைப்பாடுகள், சிறுவர்கள் இரக்கமற்ற முறையில் நடத்தப்பட்டமை தொடர்பானவையெனத் தெரிவித்த தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, 06




தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 16ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 15

## குறள் தரும் சிந்தனை



குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று

நற்பண்பு ஒன்றே சான்றோர்க்கான அழகாகும்.
வேறு எந்த அழகும் அழகல்ல.

# பொருளாதார முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டிய காலம்

இலங்கை கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் அந்நிய செலாவணி பற்றாக்குறையை அடிப்படையாகக் கொண்டு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அதனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதி மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டது.

அதன் விளைவாக இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு உள்ளூர் சந்தையில் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டதோடு, அப்பொருட்களின் விலைகளும் பெரிதும் அதிகரித்துக் காணப்பட்டன.

அதேவேளை இப்பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் கடன்களை திருப்பி செலுத்துவதிலும் நெருக்கடிகள் ஏற்பட்டன. அதனால் பல்வேறு நாடுகளில் வாங்கிய கடன் உட்பட வெளிநாட்டுக்கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக கடந்த வருடம் ஏப்ரலில் இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அத்தோடு வங்குரோத்து நிலைக்கு நாடு முகம்கொடுத்தது.

இதன் விளைவாக பொருளாதார ரீதியில் பல்வேறு விதமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும் நிலைக்கும் நாடு தள்ளப்பட்டது. பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும் ஒத்துழைப்பும் மிக அவசியமான ஒன்றாக விளங்கியது. இலங்கை போன்று பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான நாடொன்று மீட்சி பெற இந்நிதியத்தின் உதவியும் ஒத்துழைப்பும் தேவையானது என்பது பரவலாக உணரப்பட்டது. அதற்கு ஏற்ப நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. ஆனாலும் அது தொடர்பான முயற்சிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஆரம்ப கட்டத்தில் ஏற்படவில்லை.

இந்நிதியத்தின் உதவி, ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ளவென முன்னெடுக்கப்பட்ட பல வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தாமையும் சர்வதேச நாணய நிதியம் குறித்த கடந்த ஆட்சியாளர்களின் நிலைப்பாடும் இதற்கு காரணங்களாகக் கருதப்பட்டன.

இவ்வாறான சூழலில் கடந்த வருடம் ஜுலை மாதத்தின் பிற்பகுதியில் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் ஆரம்பித்தார்.

அதன்படி சர்வதேச நாணய நிதியத்தின் உதவி, ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளும் சந்திப்புகளும் உத்வேகத்துடன் முன்னெடுக்கப்படலாயின.

இப்பின்னணியில் கடன்களை மீளச்செலுத்துவதற்கான சலுகை காலநீடிப்பை இந்நிதியம் இலங்கைக்கு வழங்கியது. இதன் ஊடாக பல நாடுகளும் சர்வதேச நிதி நிறுவனங்களும் இலங்கைக்கு உதவி ஒத்துழைப்புகளை வழங்க முன்வந்தன.

அத்தோடு 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை இந்நாட்டுக்கு கடனாக வழங்க முன்வந்த இந்நிதியம், அக்கடனில் முதல் தொகுதி தொகையையும் வழங்கியது. அதன் ஊடாக இந்நாடு பொருளாதார மீட்சியின் புதிய பாதையில் கால்பதித்தது. அத்தோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படலாயின.

ஜனாதிபதி தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார மீட்சித் திட்டங்கள் நம்பிக்கை தரும் வகையில் பிரதிபலன்களை அளிக்கத் தொடங்கின. அதன் பயனாக பொருளாதார நெருக்கடி காலத்தில் நிலவிய பணவீக்கம், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி உள்ளிட்ட அனைத்து அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கின. அந்நியச் செலாவணி கையிருப்பிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இப்பொருளாதார நெருக்கடியின் ஆரம்ப காலப்பகுதியில் பங்களாதேசத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடனில் ஒரு தொகுதியும் அண்மையில் மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நிலைபேறான அபிவிருத்திப் பாதையில் நாடு நம்பிக்கையுடன் முன்னோக்கி பயணிக்கிறது. அதனால் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக மறுசீரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருக்கின்றது. அதற்கு ஏற்ப நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கென தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்நாம் போன்ற நாடுகள் பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைவதற்கு பின்பற்றிய பாதை குறித்து இலங்கையும் தற்போது கவனம் செலுத்தியுள்ளது. உண்மையில் இது வரவேற்கத்தக்க விடயமாகும். இலங்கையும் ஏனைய நாடுகளுக்கு இரண்டாம் பட்சமாகாத வகையில் முன்னேற்றமடைய வேண்டும். அதுவே நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து பிரஜைகளினதும் விருப்பமாகவும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

இவ்வாறான சூழலில் அலரி மாளிகையில் நடைபெற்ற நிபுணர்கள் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'நாம் தொடர்ந்தும் சிறிய பொருளாதாரமாக இருக்க முடியாது. எமது பொருளாதாரத்தை விஸ்தரிக்க வேண்டும். இதற்காக புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். இதன் நிமித்தம் தேவையான வெளிநாட்டு முதலீடுகளையும் மூலதனத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளதோடு 'ஏனைய நாடுகளுக்கு நாம் சுமையாக இருக்கக்கூடாது எனக் கூறியுள்ளார்.

பிற நாடுகளின் உதவியைப் பெற நாம் இனிமேலும் நினைக்கக் கூடாது. நம் நாட்டின் முன்னேற்றத்தை நாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்களுக்கு இடையில் அமைந்துள்ள எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உருவாக்க பல வாய்ப்புகள் உள்ளன. கிழக்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில், இன்று பரவலான முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இந்து சமுத்திரப் பிராந்தியம் உயர் பொருளாதார வளர்ச்சிப் பிராந்தியமாக உருவெடுக்கும்' எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆகவே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகக் கிடைக்கப்பெற்றுள்ள வாய்ப்புக்களை உரிய முறையில் உச்சளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதுவே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதற்கு ஏற்ப செயற்பட வேண்டியது அனைத்து தரப்பினரதும் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கை விமானப்படையின் இல. 02 போக்குவரத்து படைப்பிரிவு 66 ஆவது வருடத்தில் தடம்பதிக்கின்றது

நாட்டுக்காக பெறுமதிமிக்க சேவையினை வழங்கிவரும் C 130 ரக விமானம் மற்றும் AN 32 விமானங்களை இலங்கை விமானப்படையின் 'Heavy Lifters', என்று அழைக்கப்படும் இல 02 போக்குவரத்து படைப்பிரிவு தனது 66 ஆவது வருடத்தில் செப்டம்பர் 01 ம் திகதியான இன்று தடம்பதிக்கின்றது. இந்த படைப்பிரிவிற்கு தற்போதைய இலங்கை விமானப்படை தளபதியான எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ இந்த படைப்பிரிவின் விமானியக்காவும் கட்டளை அதிகாரியாகவும் , பணியாற்றியுள்ளார் என்பது விசேட அம்சமாகும்.

1959 ஆம் ஆண்டில் , செப்டம்பர்மாதம் இரண்டு டிஹவில்லாண்ட் ஹெரான் விமானங்களை இங்கிலாந்திலிருந்து கொள்வனவு செய்ததன்மூலம் இந்த படைப்பிரிவு செயல்பாட்டு திறனை மேம்படுத்த முடிந்தது. ஹெரான் விமானங்களின் வருகையுடன், ரோயல் சிலோன் விமானப்படையின் சர்வதேச நடவடிக்கைகளுக்கு தீவிர பங்களிப்பு செய்யப்பட்டது, இது கிழக்கில் இந்தோனேசியா மற்றும் மேற்கில் கெய்ரோ வரை நீடிக்கப்பட்டது.

1973 இல், இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான ஹெலி சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக, அமெரிக்காவின் ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸின் கன்வேயர் 440 விமானங்கள் இல. 02 போக்குவரத்துப் படையில் சேர்க்கப்பட்டதுடன். 1975 இல் DC 3 டகோடாஸ் மற்றும் 1979 இன் பிற்பகுதியில் HS 748 Avro விமானங்கள் இல. 02 படைப்பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்டன.



மேலும் 1983 மற்றும் 1985 க்கு இடையிலான காலப் பகுதியில் இந்த படைப்பிரிவில் மூன்று சியா மார்செட்டி SF 260TP விமானங்கள், அவ்ரோ விமானமும் பீச் கிங் விமானமும் இணைத்து கொள்ளப்பட்டன. SF 260 TPs விமானம் பறக்கத் தொடங்கியதும், யுத்தத்தின் போது நாட்டிற்கு ஆதரவாக இந்த படைப்பிரிவினால் ஒரு போர்ப் பங்களிப்பை செய்யமுடிந்தது .

1985 இல், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத்துடன், இலக்கம் 2 படைப்பிரிவு இரத்மலானை விமானப்படைத் தளத்திற்கு மாற்றப்பட்டது. 1986 இல் மற்றொரு HS 748 (Avro), விமானமும் ஐந்து SF 260 TP விமானமும் ,மேலும் இரண்டு Y12 விமானங்களும் இந்த படைப்பிரிவில் இணைந்தன. புதிய விமானங்களுடன் படைப்பிரிவின் துருப்புக்கள் விஜபிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து ,பிற வணிக போக்குவரத்து வான்வழி ஆய்வு நடவடிக்கைகள் என்பவற்றுக்கு அதன் பங்களிப்பை விரிவுபடுத்தியது.


1992 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் திகதி ,இல . 2 போக்குவரத்து படைப்பிரிவு விரிவுபடுத்தி மறுசீரமைப்புடன், அது இல. 201 கனரக போக்குவரத்து மற்றும் எண். 202 சாதாரண போக்குவரத்து படைப்பிரிவு என பிரிக்கப்பட்டது. அதன்படி, இல. 201 படைப்பிரிவில் HS 748 Avro, Y8 மற்றும் Cessna 421 விமானங்களையும், இல. 202 படைபிரிவு Y12 மற்றும் பீச் கிங் விமானங்களைக் கொண்டிருந்தது. இலங்கை விமானப்படையால் 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 08 ஆம் திகதி இலக்கம் 201 படையணியாக இலக்கம் 2 போக்குவரத்துப் படையணியாக மீண்டும் மாற்றப்பட்டதுடன் . எண். 202 படைப்பிரிவு எண். 8 இலகுரக போக்குவரத்துப் படை என மறுபெயரிடப்பட்டது



மேலும் மூன்று AN 32B விமானங்கள் இல. 2 படைப்பிரிவில் சேர்க்கப்பட்டன. தொடர்ந்து இல . 2 போக்குவரத்துப் படையின் வான் வலிமையை அதிகரிக்க நான்கு AN 32 (Antonov 32) விமானங்கள் 1996 இல் படையில் சேர்க்கப்பட்டன. அத்துடன் 2000 ஆம் ஆண்டில், அதிகரித்த போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இரண்டு C130 ஹெர்குலிஸ் விமானங்களையும் மூன்று AN 32 (Antonov 32) விமானங்களையும் மீண்டும் இந்த படைப்பிரிவு சேர்த்தது.

இலங்கை விமானப்படையின் விமான போக்குவரத்து சேவையில் 66 வருடங்களாக சிறந்த சேவையை வழங்கிய இலக்கம் 2 போக்குவரத்து படையணி இராணுவ மற்றும் போர் சூழ்நிலைகல் போலவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவசரகால அனர்த்தங்களின் போது மனிதாபிமான உதவிகளை வழங்குவதன் மூலமும், வெளிநாடுகளில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களை அவர்களது நாட்டிற்கு கொண்டு செல்வதன் மூலமும் நாட்டின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. தற்போது இந்த படைப்பிரிவிற்கு விங் கமாண்டர் சமரக்கூன் அவர்கள் தலைமை வகிக்கிறார்.

# சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்காக திறக்கப்பட்ட திருமலை பிரெட்ரிக் கோட்டை



## 'இனமத பேதங்கள் இனிமேல் வேண்டாம்' என்கிறார் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

எமது நாட்டில் இன,மத பேதங்கள் ரீதியிலான சச்சரவுகளும் மோதல்களும் இனிமேல் தேவையில்லை. முப்பதாண்டுகால மோதலில் எமது தேசத்தின் மக்கள் பல்வேறு துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து விட்டனர்.இந்த நிலைமையை மீண்டும் எமது பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நாம் கௌரவமான சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் உள்ளோம். இதற்காக இயலுமான அனைத்தையும் எமது அமைச்சு மற்றும் நிறுவனங்கள் மேற்கொள்கின்றன என்று கலாசார அலுவல்கள் பௌத்த விவகார அமைச்சரும் களுத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை பிரெட்ரிக் கோட்டை (Trincomalee Fort Fredrick) மற்றும் புராதன சின்னங்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் கடந்த பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் சரித்திர முக்கியத்துவத்தை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கான பிரவேச அட்டை விநியோகத்தை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அண்மையில் ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"தேசத்தின் கிழக்கு மாகாணத்தின் தலைநகரான திருகோணமலையில் கிறிஸ்துவ வருடம் 1505 இல் நிர்மாணிக்கப்பட்ட இந்த ஒல்லாந்தர் கோட்டை பின்னர் ஆங்கிலேயர்களினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அரச கலாசார நிதியத்தின் திருகோணமலை திட்டத்தின் கீழ் பாரிய நிதிச் செலவில் இதனைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எமது நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணி ஈட்டித்தரும் பிரதான துறையாக உல்லாசப் பயணத்துறை விளங்குகின்றது. நாட்டின் சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களையும் மரபுரிமைகளையும் கண்டுகளிக்க சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். முக்கிய இடங்கள் தொடர்பில் காலாகாலமாக கவனம் செலுத்தப்படவில்லை. அதனால் இவை கைவிடப்பட்ட உக்கிய நிலையில் காணப்பட்டன.இவற்றை மீண்டும் பொலிவூட்டிப் பாதுகாத்து விஷேடமானதாக மக்கள் பார்வைக்கு செய்துள்ளோம்.

இதன் சுற்றாடல் கட்டமைப்பையும் பாதுகாத்து இங்கு வாழும் மக்களின் தேவைகளையும் கவனித்து சுற்றுலா வலயமாக்க எண்ணியுள்ளோம். தற்போது திட்டமிடப்பட்டுள்ள திருகோணமலை புதிய அபிவிருத்தி திட்டத்துக்கு உட்பட்டதாகவே சுற்றுலா வலயத்துக்கான பிரேரணைகளும் அடங்கியுள்ளன. இதுதொடர்பிலான பூர்வாங்க வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன" எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.





இந்த கோட்டைச் சுவர் , யுத்த பீரங்கிப் பிரிவு மற்றும் தொழில்நுட்ப ரீதியில் முக்கியமான பல்வேறு இடங்களையும் புராதன சின்னங்களையும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்கும் வாய்ப்பு தற்போது உதயமாகியுள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மூன்று வலயங்களை உள்ளடக்கிய இந்த சரித்திர முக்கியத்துவமிக்க இடத்தைப் பாதுகாப்பது சுற்றுலாப் பயணிகளின் பொறுப்பாகும். இந்தக் கோட்டைக்குள் இருக்கும் இரகசிய சுரங்கம் மற்றும் வெடிபொருள் களஞ்சியம் என்பவற்றையும் பாதுகாக்க செயல்பாடுகள் மேற்கொண்ட பின்னர் சுற்றுலாப் பயணிகளுக்கு திறந்துவிட எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**எம்.எஸ்.எம் முன்தஸிர்...**
*(பாணந்துறை மத்திய குறுாப் நிருபர்)*

# சர்வதேச புகைத்தல் எதிர்ப்புதின கொடி விற்பனையில் கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி பிரிவு பெருவெற்றி

அம்பாறை மாவட்டத்தில் சர்வதேச புகைத்தல் எதிர்ப்புதின கொடி விற்பனையில் கல்முனை பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவு அதிகூடிய நிதியைச் சேகரித்து மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளது.இவ்வருடம் நடைபெற்ற புகைத்தல் எதிர்ப்புதின தேசிய கொடி விற்பனையில் 17,96,373. 00 ரூபா நிதி சேகரிக்கப்பட்டுள்ளுமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸின் வழிகாட்டலில், கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலியின் ஒருங்கிணைப்பில் சமுர்த்திப் பிரிவின் சிரேஷ்ட தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ்வின் நெறிப்படுத்தலில், பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் என்.எம்.நௌஸாத்தின், இணைப்பில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகள் கூட்டாக இந்த நிதியைச் சேகரித்திருந்தனர்.

கல்முனை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட 29 கிராம சேவகர் பிரிவுகளில் இந்த நிதி சேகரிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிதி சேகரிப்பில் கல்முனைக்குடி சமுர்த்தி வலயத்தில் பதினாறு கிராம சேவகர் பிரிவுகளில் பத்து இலட்சத்து ஆயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு ரூபாவும், மருதமுனை சமுர்த்தி வலயத்தில் எட்டு கிராம சேவகர் பிரிவுகளில் ஆறு இலட்சத்து என்பத்திரண்டாயிரத்து முன்னூற்று முப்பத்தைந்து ரூபாவும், நற்பிட்டிமுனை சமுர்த்தி வலயத்தில் ஐந்து கிராம சேவகர் பிரிவுகளில் ஒரு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து முன்னூற்றைம்பது ரூபாவுமாக மொத்தம் பதினேழு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து முன்னூற்று எழுபத்து மூன்று ரூபா நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. மருதமுனை சமுர்த்தி வலயத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகர்தர் எம்.எஸ்.எம்.நாஸர் தலைமையிலான குழுவினர் முதலாமிடத்திலும், இரண்டா மிடத்திலும், மூன்றாமிடத்திலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.



சேகரிக்கப்பட்ட இந்த நிதி எதிர்காலத்தில் சமுர்த்தி சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு ,மலசலகூட வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரண வசதி, வீடுகள் திருத்த வேலை, போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், வாழ்வாதார உதவி உள்ளிட்ட விடயங்களுக்கு செலவு செய்யப்படவுள்ளதாக கல்முனை பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் சிரேஷ்ட தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் தெரிவித்தார்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# ஆலையடிவேம்பில் சமுர்த்தி வங்கிகளை கணினிமயப்படுத்தும் அறிவூட்டல் நிகழ்வு

சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் கணினிமயப்படுத்தலுக்கான மென்பொருள் மேம்படுத்தல் மற்றும் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகளை முன்கொண்டு செல்லும் வகையிலான ஆறு நாள் பயிற்சி செயலமர்வின் முதல்நாள் நிகழ்வுகள் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் ந.கிருபாகரனின் ஒத்துழைப்போடு முகாமைத்துவப் பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் ஒருங்கிணைப்பில் ஆரம்பமான பயிற்சிச் செயலமர்வில் வளவாளர்களாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் டி.எம்.குணவர்த்தன மற்றும் அம்பாறை மாவட்ட வங்கி கணிணி மேம்படுத்தல் திட்ட முகாமையாளர் ரி.தெய்வேந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.





சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கம், தலைமைப்பீட காரியாலயம், சமுர்த்தி கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள் என பல்வேறு தரப்பினருக்கும் ஆறு நாட்கள் இடம்பெறுகின்ற இப்பயிற்சி செயலமர்வில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று மற்றும் இறக்காமம் பிரதேச செயலகத்தை சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த அறிவூட்டல் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நிந்தவூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் போன்றவர்களுக்காக 24,25 ஆம் திகதிகளில் நிந்தவூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**எம்.எப்.எம்.நவாஸ்...**
*(திராய்க்கேணி தினகரன் நிருபர்)*

# கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலில் கண்டி மாவட்ட ஜம் இய்யத்துல் உலமாவின் முப்பெரும் விழா

## அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தலைவரின் ஆசிச்செய்தி

1924 ஆம் ஆண்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா என்ற ஆழமான இந்த விருட்சத்தை நட்டினார்கள். அதிலும் குறிப்பாக கண்டியைச் சேர்ந்த முன்னாள் ஆலிம்களின் பங்களிப்பு மகத்தானவை.

அவற்றை யாராலும் இலகுவில் மறந்துவிட முடியாது. கண்டி அக்குறணை ஒன்பதாம் கட்டையில் வாழ்ந்துவந்த அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான மரியாதைக்குரிய அஷைக் அப்துல் ஹமீது பஜ்ஜி (ரஹ்) அவர்களது மகன் மௌலவி பாஸீ அவர்கள் எனது ஆசான்களில் ஒருவர் ஆவார்கள். அதே போன்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் முன்னாள் பொதுச் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றிய மரியாதைக்குரிய மர்ஹூம் அஷ்ஷைக் எம்.ஜே.எம். ரியாழ் கபூரி அவர்களும் எனது மற்றுமோர் ஆசான் ஆவார்கள். இவர்களின் ஊடாகவே ஜம்இய்யத்துல் உலமாவை பற்றிய அறிமுகம் எனக்கு கிடைத்தது. இவர்கள் இருவரும் எனது தந்தையாருடன் மிகநெருக்கமான தொடர்பினை கொண்டிருந்தார்கள்.

அதே போன்று நான் பாகிஸ்தானில் இருந்து நாடு திரும்பிய வேளையில், கண்டி மௌலானா என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படக்கூடிய மர்ஹூம் மௌலவி எச். சலாஹுதீன் பாரி அவர்கள் ஜம்இய்யத்துல் உலமாவுடனான நெருக்கத்திற்கு என்னை ஊக்கப்படுத்தியதுடன் இந்தியாவில் இருந்து 2000 ஆண்டு இலங்கை வருகைதந்திருந்த மௌலானா கலீல் அஹ்மத் கீரனூரி (ரஹ்) அவர்களையும் ஒரு போதும் எம்மால் இலகுவில் மறந்துவிட முடியாது. அவர்களே, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவுடனான எனது ஆழமான தொடர்புகளுக்கு உந்துசக்தியாக இருந்தார்கள்.



அவ்வாறான நிலையில் கண்டி மாவட்டக் கிளையின் அன்றைய தலைவராக இருந்த அஷ் ஷைக் எம். எச். எம். புர்ஹான் பஹ்ஜி அவர்களும் எனக்கு பக்க பலமாக இருந்தார்கள். அதே போன்று பிந்திய காலங்களில் கண்டி மாநகரில் எனது மரியாதைக்குரிய இன்றைய மாவட்டத் தலைவர் அஷ்ஷைக் எச். உமர்தீன் ரஹ்மானி அவர்களையும் இவ்விடத்தில் நினைவுபடுத்த வேண்டும். சுமார் 20 வருடங்களுக்கு மேலாக தலைமையகத்துடன் இணைந்து பல்வேறுபட்ட பணிகளை அவர்கள் செய்து வருகிறார்கள். கண்டி மாவட்டக் கிளை இலங்கையில் ஒரு பிரதானமான கிளையாக பலராலும் நோக்கப்படுகிறது. அதனுடைய குழு முயற்சிகள் ஆக்கபூர்வமானவை.அனைவரும் இணைந்து ஜமாஅத்தாக செயலாற்றுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும். அவர்களுடைய பல்வேறுபட்ட பணிகளில், நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது திட்டமிட்டு முகம்கொடுத்து செயலாற்றுகின்ற ஆக்கப்பூர்வமான பணிகளை உண்மையில் பாராட்டியே ஆக வேண்டும்.

இவ்வாறு மாவட்ட கிளையுடன் இணைந்து செயலாற்றும் பிராந்தியக் கிளைகளின் உறுப்பினர்கள், ஏனைய ஆலிம்கள், மஸ்ஜித்களின் சம்மேளனம், தனவந்தர்கள், சமூக நிறுவனங்கள், கல்விமான்கள், சிவில் அமைப்பினர் இவ்விடத்திலே நன்றி பாராட்டப்பட வேண்டியவர்கள். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் இம்மையிலும் மறுமையிலும் அருள்புரிவானாக!

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா என்பது ஒரு யாப்பின் அடிப்படையில் ஒரு கட்டுக்கோப்புடன் பல்வேறுபட்ட திட்டங்களை முன்வைத்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அதனை நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட, பிராந்தியக் கிளைகளும் முன்னெடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் நினைவுபடுத்திக்கொள்கிறேன்.

**அஷ்ஷைக் எம்.ஐ.எம். ரிஸ்வி முஃப்தி,**
**தலைவர்,**
**அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா**

தொகுப்பு
**இக்பால் அலி**

## அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா - கண்டி மாவட்டக் கிளையின் தோற்றமும் வளர்ச்சியும்



கண்டியில் பிரபல்யம்பெற்ற கண்டி மௌலானா என்று அழைக்கப்பட்டுவந்த மர்ஹூம் எச்.ஸலாஹுத்தீன் (பாரி) ஹழ்ரத் அவர்களின் தலைமையில் மர்ஹூம்களான அப்துல் லதீப் ஹழ்ரத் மற்றும் ஏ.சீ. எம். ஸதகதுல்லாஹ் (நத்வி) ஹழ்ரத் ஆகியோரால் மத்திய மாகாண ஜம்இய்யதுல் உலமா என்ற பெயரில் ஜம்இய்யதுல் உலமா இயங்கி வந்ததாகவும் பின்னைய காலத்தில் எச். உமர்தீன் (ரஹ்மானி) எம்.எப். பஸ்லுர் ரஹ்மான் (மஹ்ழரி) ஆகியோர் இணைந்து செயல்பட்டதாகவும் அறியக் கிடைக்கிறது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா – கண்டி மாவட்டக் கிளை 1999 ஆம் ஆண்டு எம். எச். எம். புர்ஹான் (பஹ்ஜி) அவர்களின் தலைமையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு,அன்றிலிருந்து இன்று வரை சன்மார்க்க பணியில் கண்டி மாவட்டத்தில் பெரும் பணியாற்றி வருகின்றது.

அன்றைய கௌரவச் செயலாளரான தற்போதையத் தலைவர் அவர்களும் பொருளாளராக மர்ஹூம் நிலாம்தீன் (கியாசி) அவர்களும் இருந்ததோடு 25க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர்.அன்று ஜம்இய்யாவுக்கென்று எந்த ஒரு காரியாலயமும் இருக்கவில்லை. அப்போது கண்டி ஜாவா பள்ளிவாயலில் பிரதம இமாமாக எச். உமர்தீர் (ரஹ்மானி) ஹழ்ரத் அவர்கள் கடமைபுரிந்ததால், அப்பள்ளிவாசல் இரண்டாம் மாடியில் எமது மாதாந்த கூட்டங்கள் நடைபெற்று வந்தன.

ஜம்இய்யாவின் பணிகளையும் சேவைகளையும் பள்ளிவாசலில் இருந்து செய்துவந்த போதுதான் தனித்துவமான ஓர் இடத்தில் காரியாலய ஒழுங்கில் இயங்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. பின்னர் கண்டி நகரக் கிளையுடன் ஆலோசனை செய்து கண்டி நகர் மத்தியில் இலக்கம்: 59, ராஜ வீதியில் அமையப்பெற்ற கட்டடம் ஒன்றின் இரண்டாம் மாடியில் ஒரு பகுதியை நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வருடாந்த வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கண்டி மாவட்டத்திற்கென ஒரு தனியான கட்டடத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என நாம் உறுதி பூண்டோம். அன்று ஜம்இய்யாவின் தலைவராக எச். உமர்தீன் (ரஹ்மானி) அவர்களும் செயலாளராக ஏ.எல். அப்துல் புகஃப்பார் (தீனி) அவர்களும் பொருளாளராக எம்.எச்.எம். ழபீர் (முர்சி) அவர்களும் உப தலைவர்களாக ஏ.எஸ். எம். ஹஸன் ரியாஸ் (அப்பாஸி), எம். ஏ.எம். ஷியாம் (யூசுபி) அவர்களும் உப செயலாளர்களாக பீ.எம் பாயிஸ் (பாஸி), ரீ.எம் ஹைதர் அலி (ஹலீமி) ஆகியோர்களுடன் 21 நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களும் இருந்தனர்.

தற்பொழுது ஜம்இய்யாவின் செயற்பாடுகள் நடைபெற்றுவரும் கட்டடம் ஒரு தமிழ் சகோதரருக்கு உரித்தாக இருந்தது. அதனை விற்பனை செய்யப் போவதாகவும் அதன் அருகாமையில் அமைந்துள்ள ஜாவா பள்ளிவாசலுக்கே அது மிகவும் பயனுள்ளதாகவும் இருந்தது. அப்பள்ளிவாசல் நிர்வாகிகளும் அதனை கொள்வனவு செய்யத் தீர்மானித்திருந்த வேளையில், அவர்களைச் சந்தித்து எமது தேவைகள் பற்றித் தெளிவுபடுத்தவே, 'நாம் அதனை உங்களுக்கு விட்டுத்தருகிறோம் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம்' என்று அந்நிர்வாகம் எம்மிடம் பெருமனது கொண்டு விட்டுக்கொடுக்கவே கட்டடத்தை கொள்வனவு செய்வது சம்பந்தமாக கலந்தாலோசித்தோம்.

இக்கட்டடத்தை கொள்வனவு செய்யும் இப்பாரிய வேலைத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக எம்முடன் எம்மைப் பற்றி அறிந்த சமூக சேவையில் ஈடுபாடுகொண்ட ஒரு குழுவை நியமித்தோம்.அதன் பிறகு தனவந்தர்களினதும் எமது பிரதேசக் கிளைகளினதும் உதவியுடன் இக்கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டது.

கொள்வனவு செய்யப்பட்ட கட்டடத்தில் பல திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டு அதில் உள்ள கீழ்ப்பகுதியை வியாபார நிலையம் ஒன்றிற்கு குத்தகைக்கு கொடுத்து, அதன் மூலம் வரக் கூடிய வருமானத்தைக் கொண்டு ஜம்இய்யாவின் செலவுகளை ஓரளவுக்கு ஈடுசெய்யலாம் என்ற அடிப்படையில் அது குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. கட்டடத்தில் இரண்டாம் மாடியில் ஜம்இய்யாவின் காரியாலயமும் கூட்டங்களுக்கான கலந்துரையாடல் அறையும் அமைக்கப்பட்டு, குளிரூட்டப்பட்டு, அதற்கான தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

மூன்றாம் மாடியில் 150 பேர் அமர்ந்திருக்க முடியுமான விஸ்தீரணம் கொண்ட ஒரு கேட்போர் கூடம் அமைக்கப்பட்டது. இதில் ஏறி, இறங்குவது கஷ்டமாக காணப்பட்டதால் முதல் மாடியையும் சகல வசதிகளையும் கொண்ட 100 பேர் அமரக்கூடியவிதத்தில் குளிரூட்டப்பட்ட ஒரு கேட்போர் கூடமாக அமைக்கப்பட்டது.

கட்டடத்தின் புனர்நிர்மாணப் பணிகளின் போது ஜாவா பள்ளிவாசல் நிர்வாக சபை, மஹல்லாவாசிகள் குறிப்பாக வாலிபர்கள் சிரமாதானப் பணி மூலம் இக்கட்டடத்திற்கு செய்த அர்ப்பணிப்புகளை நன்றியுடன் நினைவுகூருகிறோம்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கொழும்பு பிரதேசத்தில் மஸ்ஜித் சம்மேளனங்களை ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியபோது அதனைப் பின்தொடர்ந்து கண்டி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவும் இம்மாவட்டத்தில் மஸ்ஜித் சம்மேளனங்களை 2015 ஆம் ஆண்டளவில் ஆரம்பிப்பதற்கான ஆலோசனைகளை மஸ்ஜித் நிர்வாகிகளுக்கு வழங்கியது.

அவ்வகையில் கண்டி நகர், யடிநுவர, உடுநுவர, தெல்தோட்டை, கலகெதர, கம்பளை, தும்பர ஆகிய பிரதேசங்களில் மஸ்ஜித் சம்மேளனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் கிளை ஜம்இய்யாக்களின் பிரதிநிதித்துவத்தையும் அச்சம்மேளனங்களில் உள்வாங்கச்செய்து ஜம்இய்யாவும் மஸ்ஜித் சம்மேளனங்களும் இணைந்து இம்மாவட்டத்தில் பள்ளிவாயலூடான செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

அனர்த்தங்களின் போது:

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போதும் மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களின் உதவிகளை அவ்வப்பகுதிக் கிளைகளின் உதவியுடன் சேர்த்து அனுப்பிவந்தது. இனக்கலவரங்களின் போது அப்பகுதிகளுக்கு களவிஜயங்களை மேற்கொண்டு தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்து வந்தது.

அத்தோடு திகன கலவரத்தை அடுத்து உடனடியாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் க் முஃப்தி எம்.ஐ.எம் ரிஸ்வி அவர்களின் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கண்டியில் உள்ள முஸ்லிம் அமைப்புகள் அனைத்தையும் கே.ஆர்.சீ.சீ என்ற பெயரில் ஒன்றிணைக்கப்பட்டது.Kandy Relief Coordinating Centre (KRCC) மாவட்டத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் தொடர்ந்தேர்ச்சையாக ஏற்பட்ட அனைத்து அனர்த்தங்களிலும் கண்டி மாவட்டக் கிளை பெரும் பங்களிப்புகளை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னரான செயற்பாடுகள்:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் கிறிஸ்துவ ஆலயங்களுக்குச் சென்று எமது அனுதாபச் செய்திகளை எடுத்துரைத்ததோடு நடைபெற்ற துயர் சம்பவத்துக்கும் இஸ்லாத்திற்கும் எத்தொடர்பும் இல்லையென்பதை ஆதாரத்துடன் முன்வைக்கப்பட்டது.

தாக்குதலின் பின்னர் தொடர்ந்தும் முஸ்லிம்கள் கலாசாரம் மற்றும் சமயம் சம்பந்தமான பலவிதமான இன்னல்களுக்கு முகம்கொடுத்தனர். அச்சந்தர்ப்பத்தில் மாவட்ட ஜம்இய்யா கண்டி மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் போன்றோரைச் சந்தித்து முஸ்லிம்களின் பாதுகாப்புச் சம்பந்தமாக கலந்துரையாடியது. மேலும் இன ஐக்கியத்தையும் சமூக ஒற்றுமையையும் வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக விகாராதிபதிகளையும் ஏனைய மதத்தலைவர்களையும் சந்தித்து பல கட்டப் பேச்சுவார்த்தைகளை நடாத்தப்பட்டதுடன் இஸ்லாம் சாந்தியையும் சமாதானத்தையும் மனித நேயத்தையும் வலியுறுத்துகின்ற விடயங்களை அவர்களுக்கு எடுத்துக் கூறியதுடன் அது சம்பந்தப்பட்ட சிறுநூல்கள், அல் குர்ஆன் மொழிபெயர்ப்புகள் வழங்கிவைக்கப்பட்டு அவர்களுடனான எமது உறவை வலுப்படுத்தும் வேலைத்திட்டங்களை தொடர்ந்தேச்சையாக நடாத்தப்பட்டு வந்தன.

நாட்டில் அரசியல் பொருளாதார நெருக்கடியின் போது மாவட்டத்திலுள்ள சகல கிளைகளுக்கும் விஜயம்செய்து ஒவ்வொரு கிளைக்குட்பட்ட மஸ்ஜித் நிர்வாகிகளை ஒன்றிணைத்து பொருளாதார நெருக்கடியினால் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருந்த சூழலில் அல்லாஹ்வுடன் தொடர்புபடுகின்ற விடயத்தில் நிர்வாகிகள், ஆலிம்கள், துறைசார்ந்தவர்கள் ஒன்றிணைந்து மக்களை அல்லாஹ்வின் பக்கம் தொடர்புபடுத்துகின்ற விடயத்திலும் பொருளாதார நெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்கான இலகு வழிகாட்டல்களையும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதன் அவசியத்தையும் தெளிவுபடுத்தி வந்தது.

மேலும் சிறார்களின் மார்க்கக் கல்வி, வாலிபர்களுக்கான வழிகாட்டல்கள், பெண்களுக்கான நிகழ்ச்சிகள், பள்ளிவாசல்களை வலுவூட்டக்கூடிய நிகழ்ச்சிகள், சகவாழ்வு முயற்சிகள், அவ்வப்போது ஏற்படும் மார்க்கச் சட்டத்திட்டங்கள், வழிகாட்டல்கள் என அனைத்தையும் செய்து வருகின்றது. பரீட்சை காலத்தில் அரபு மத்ரஸாக்களில் க.பொ.த சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்குகளை தொடராக நடாத்தி வருகின்றது.

கண்டியை பொருத்தவரையில் பௌத்தர்களின் விசேடமான மல்வத்து, அஸ்கிரிய பீடங்கள் அமையப் பெற்றுள்ளன. அப்பீடங்களின் மகாநாயக்கர்களை அடிக்கடி சந்தித்தும் இந்து, கிறிஸ்தவ மத போதகர்களுடனான தொடர்புகளைப் பேணியும் இன ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் பாதுகாத்து வருகின்றது.

தொகுப்பு :
**அஷ்ஷைக் ஏ.எல். அப்துல் கப்பார் (தீனி)**
**செயலாளர்,**
**அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா**
**– கண்டி மாவட்டக் கிளை.**

## கண்டி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா கிளைத் தலைவரின் ஆழ்மனத்திலிருந்து



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நூற்றாண்டு பூர்த்தியை முன்னிட்டு கண்டி மாவட்டக் கிளை ஒரு சிறப்பு நிகழ்வினை நடாத்துவதாகத் தீர்மானித்து அதற்கான பல முன்னேற்பாடுகளையும் செய்தோம். அல்லாஹ்வின் பேரருளால் அது சிறப்பாக நடந்தேற வேண்டும் என இத்தருணத்தில் வல்லவன் அல்லாஹ்விடம் இருகரமேந்திப் பிரார்த்திக்கிறேன்.

அதன் ஒரு கட்டமான சிறப்பு மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெற்றிடவும் அதில் சில விடயங்களை வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்துகொள்ளவும் கிடைத்தமையை இட்டு இங்கிதம் அடைகிறேன்.

கடந்த பல வருடங்களாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைமையகத்துடன் இணைந்து பணியாற்றக் கிடைத்தமை அல்லாஹ்வின் ஓர் அளவற்ற அருளாகும் என்பதை நினைத்து பெருமிதம் அடைகிறேன்.

இச்சிறப்பு நிகழ்விற்கு கண்டி மாவட்டக்கிளை செயற்குழுவுடன் பக்கபலமாக நின்றுழைத்த பிரதேசங்களின் காரியாலயக் குழுவினர், அபிவிருத்திக் குழுவினரையும் தனவந்தர்களையும் மஸ்ஜித்களின் நிர்வாகிகள், அரபுக் கல்லூரிகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியோரையும் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

இது போன்ற நிகழ்வுகள் ஏனைய மாவட்டங்களிலும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அதன் மூலமாக அப்பிரதேசத்து மூத்த ஆலிம்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**அஷ்ஷைக் எச். உமர்தீன் (ரஹ்மானீ)**
**தலைவர்,**
**அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா**
**கண்டி மாவட்டக் கிளை,**

## கண்டி மாவட்டப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவரின் ஆசிச்செய்தி



கண்டியில் நடைபெறும் பெருவிழா நினைவு மலருக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பேருவகையடைகின்றேன். ஆலிம்களைப் பொருத்த வரையில் அவர்களுடைய பணி இறைபணியாகும். அவை மகத்துவமும் மகோன்னதமிக்கவையாகும். பள்ளிவாசல்களின் மிம்பர் மேடைகள் மற்றும் சொற்பொழிவுகள் ஊடாக சமூகத்திற்கு அவர்கள் ஆற்றக்கூடிய பங்களிப்பானது பலதரப்பட்ட மாறுதல்களை ஏற்படுத்தக் கூடிய வல்லமை கொண்டதாகும்.

ஜம்இய்யத்துல் உலமா நூற்றாண்டு நிறைவைக் கொண்டாடும் தருணத்தில் சமூகத்தில் கண்டி மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபை தற்போதும் எதிர்காலத்திலும் செல்ல வேண்டிய மற்றும் செயற்பட வேண்டிய தளம் பற்றியும் நோக்குவது முக்கிய அம்சமாகும்.

எனவே இறைபணியானது புனிதத் தன்மை வாய்ந்தது என்பதையும் இது ஒரு கண்ணியமான பணியென்பதையும் நாம் நினைவிலிருத்திக்கொள்ள வேண்டும். கண்டி மாவட்டத்திலே இறைபணியினை உன்னதமிக்க பணியாக ஏற்று ஆலிம்கள் எம்மோடு சேர்ந்து சேவை புரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களின் தன்னலமற்ற தியாக சேவையின் காரணமாக கண்டி மாவட்டத்தில் இஸ்லாமிய எழுச்சி வளர்ச்சியுற்றிருக்கிறது.

எனவே ஆலிம்களின் தன்னலமற்ற இறைபணிச் சேவையைப் பாராட்டி கௌரவிக்கவும் அவர்களின் முக்கியத்துவத்தை நினைவுகூரவும் கண்டி மாவட்டக் கிளை மாபெரும் விழாவை ஏற்பாடு செய்தமைக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதோடு இவ்விழா வெற்றிபெற எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அல்ஹாஜ் கே.ஆர்.ஏ. சித்தீக்,**
**தலைவர், கண்டி மாவட்டப்**
**பள்ளிவாசல்களின் சம்மேளனம்**

## ஜம்இய்யத்துல் உலமாவின் கண்டி நகரக் கிளைத் தலைவரின் ஆசியுரை



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு கண்டி மாவட்டக் கிளை ஜம்இய்யத்துல் உலமா வெளியிடும் இச்சிறப்பு மலருக்கு எனது வாழ்த்து செய்தியை தெரிவிப்பதில் கண்டி நகரக் கிளையின் தலைவர் என்ற வகையில் அகமகிழ்ச்சி அடைகிறேன்.

அல்ஹம்துலில்லாஹ். அல்லாஹ்வின் கிருபையால் கண்டி மாவட்டக் கிளை பல தசாப்த காலமாக கண்டி மாவட்டத்தில் சமூகம், சமயம் சார்ந்த பலவிதமான சேவைகளில் அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் நூற்றாண்டு நிறைவையொட்டி மாபெரும் கௌரவிப்பு விழா ஒன்றை ஏற்பாடு செய்திருப்பதையிட்டு மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

இம் மாபெரும் கௌரவிப்பு நிகழ்வு மிகச்சிறப்பாக அமைய எல்லாம் வல்ல அல்லாஹ் துணை புரிவானாக! இவ்வளவு காலமும் ஜம்இய்யாவின் வளர்ச்சிக்குச் சேவையாற்றிய, தற்பொழுதும் சேவையாற்றிக் கொண்டிருக்கும் கண்ணியமான ஆலிம்கள் மற்றும் ஜம்இய்யாவுடன் ஒத்துழைத்துக் கொண்டிருக்கும் அபிவிருத்திக் குழுவினர், தனவந்தர்கள், உபகாரிகள், பணியாளர்கள் அனைவரையும் இத்தருணத்தில் ஞாபகப்படுத்தி அவர்களுக்காக வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிகிறேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் இந்நிறுவனத்தை கியாமத்துநாள் வரை நிலையாக்கி இன்னும் பல அரிய சேவைகளை சமூகத்திற்கு செய்வதற்கு தவ்ஃபீக் செய்வானாக ஆமீன்!

**அஷ்ஷைக் பி. எம். பாயிஸ் (அல்பாஸி)**
**தலைவர்,**
**கண்டி சிட்டி ஜம்இய்யதுல் உலமா**

## மத்திய மாகாண முஸ்லிம் லீக், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்க செயலாளரின் ஆசிச் செய்தி



கண்டி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா, அதன் அபிவிருத்திச் சபை உடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மாபெரும் பாராட்டு ஞாயிற்றுக்கிழமை கண்டியில் நடைபெறுவதையிட்டு கண்டி நகர வர்த்தகர் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தனது நூறாவது ஆண்டில் இலங்கை மண்ணில் தடம்பதித்து விருட்சமாய் வளர்ந்து நிற்கிறது. முஸ்லிம் சமூகத்தின் சன்மார்க்க அடிப்படைகளை கட்டிக்காக்கின்ற அரணாக திகழ்கிறது.

கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம் முஸ்லிம் வியாபார சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பு என்ற வகையில் நாட்டில் அவ்வப்போது ஏற்படும் கலவரங்கள், இயற்கை அனர்த்தங்கள், பாதிப்புக்களின் போது, அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா, அதன் கண்டி மாவட்டக் கிளை, கண்டி நகரக் கிளை ஆகியன அனைவருடனும் கூட்டிணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலவகையான நிவாரண பணிகளைச் செய்து சமூகத்தை மீள கட்டியெழுப்பும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். இத்தகைய நிவாரணப் பணிகளை ஒன்றிணைந்து செய்யும் போது பல மடங்கு அதிக பலனை அறுவடை செய்ய முடிகிறது.

இந்நிகழ்வு வெற்றிகரமாக நடந்தேறுவதற்கும் அதன் ஊடாக எமது மாவட்ட ஆலிம்கள் மத்தியில் ஆர்வத்தையும் புதிய உத்வேகத்தையும் பெற்றுக்கொள்ள காரணமாக அமையும் என நம்புகிறேன். இப்பணியியில் ஈடுபட்டு உழைக்கின்ற அனைவருக்கும் எமது வாழ்த்துக்களை பதிவுசெய்துகொள்வதோடு அல்லாஹுத் தஆலாவின் அருளும் உதவியும் கிடைக்கவேண்டி பிரார்த்திக்கிறேன்.

**அல்ஹாஜ் ஏ.சீ. முஜிபுர் ரஹ்மான்,**
**செயலாளர்,**
**மத்திய மாகாண முஸ்லிம் லீக்,**
**கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கம்**





















## 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு

# NIC இல்லாவிடின் அதனை பெற 2,500 ரூபா அபராதம்



*தேசிய அடையாள அட்டை இல்லாத 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக 2,500 ரூபாவை அபராதமாகச் செலுத்த வேண்டுமென, ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்தது.*

*முன்னதாக தேசிய அடையாள அட்டை பெறாத குற்றத்தை குறிப்பிட்ட காலத்துக்குள் தீர்த்து வைப்பதற்காக இந்த அபராதம் விதிக்கப்படவுள்ளதாகவும், ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்தது.*

*எனினும், உயர்த்தப்பட்ட அபராதத் தொகையைச் செலுத்த முடியாத குறைந்த வருமானம் பெறும் நபர்களிடமிருந்து மட்டும் முன்னர் அறிவிடப்படும் அபராதத் தொகையான 250 ரூபாவை அறவிட ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி கையொப்பமிட்ட கடிதம் மூலம் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

## நிதி தொடர்பாக... (03 ஆம் பக்கத் தொடர்)

வேலைத்திட்டங்கள் தொடர்பாக சர்வதேச நிதி நிறுவனங்கள் மகிழ்ச்சி தெரிவித்திருப்பதாக இந்நிகழ்வில் உரையாற்றிய அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுவின் உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கப் பொறிமுறை மற்றும் அரசியல் பொறிமுறை என்பன இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும், அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கும் போதும், இதிலிருந்து மீள்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அவற்றை பாதுகாப்பதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி.விக்குரமரத்ன கருத்துத் தெரிவித்த போது, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தலைவர்கள் மேலும் தமது நிறுவனங்களுக்கு பொறுப்புக் கூறும் வகையில் சட்டங்கள் பலப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

## ஐ.நா.வின் புதிய... (03 ஆம் பக்கத் தொடர்)

புதிய நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரியப்படுத்தினார்.

தற்போதைய அரசாங்கம், மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தல்களை ஒத்திவைத்து அடிப்படை உரிமைகளை மீறி வருவது தொடர்பாகவும் அவர் மேலும் தெரியப்படுத்தினார்.

## சிறுவர்... (03 ஆம் பக்கத் தொடர்)

163 பாரதூரமான காயங்கள் தொடர்பான முறைப்பாடுகள் உள்ளதாகவும் தெரிவித்தது. சிறுவர்களை யாசகம் பெறுவதற்காக பயன்படுத்துவது தொடர்பாக 196 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இணைய பாதுகாப்பு தொடர்பாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அச்சபை தெரிவித்தது. சமூக ஊடகங்கள் இணையவெளியில், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 110 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மேலும் தெரிவித்தது.

## வசந்த முதலிகே... (03 ஆம் பக்கத் தொடர்)

விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கோட்டை நீதவான் திலின கமகே நேற்று (31) உத்தரவிட்டார்.

## மே 09 வன்முறை குறித்து...

சி.டி.விக்கிரமரத்ன உள்ளிட்ட பலருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பின்னர் பிரதிவாதிகளால் மீளப்பெறப்பட்டது.

இந்நிலையில், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக பெறப்பட்ட புதிய அறிக்கையின் அடிப்படையில் புதிய விசாரணை இடம்பெற்று வருவதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## காணாமல் ஆக்கப்பட்டோரது...

நேற்று முன்தினம் நீதி கோரி வடக்கு, கிழக்கின் பல்வேறு இடங்களில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த போதே, நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்களென மூவினங்களிலும் பலர் காணாமல் போயுள்ளனர், காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அந்த உறவுகள் வடிக்கும் கண்ணீரை எந்தத் தரப்பும் கொச்சைப்படுத்த முடியாது. அவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமென்பதில் அரசு உறுதியாக உள்ளது" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? இந்தக் கேள்விக்கு இலங்கை அரசு பதில் சொல்லியாக வேண்டும். பொறுப்புக்கூறும் இந்த விடயத்திலிருந்து இலங்கை அரசு தப்பிக்கவே முடியாதென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

"இந்த விடயத்தில் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகம், இலங்கை அரசை சும்மாவிடாது. இறுதிப் போரில் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது? இராணுவத்தினரிடம் உயிருடன் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? வடக்கிலும் கிழக்கிலும் கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது?

கைது செய்யப்பட்டு பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? இந்தக் கேள்விகளுக்கு இலங்கை அரசு கட்டாயம் பதில் சொல்லியாக வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்க நாம் தொடர்ந்துபோராடுவோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

## A/L பரீட்சை முடிவுகள்...

பாடசாலை விண்ணப்பதாரர்களும் 53,513 தனியார் விண்ணப்பதாரர்களும் தோற்றியிருந்தனர்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் பல்கலைக்கழக அனுமதி மற்றும் உயர் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக, மாணவர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர். இந்நிலையில், பல இடையூறுகளுக்கு மத்தியில் மாணவர்களின் பெறுபேறுகளை ஆறு மாதங்களுக்குள் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## வாகன இறக்குமதி தடைக்கு பின்...

ஊடகவியலாளர்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்த போதே, இதனைத் தெரிவித்தார்.

அந்த வாகனங்களில் 3,000 வாகனங்கள் பொலிஸ் திணைக்களத்துக்காக இறக்குமதி செய்யப்பட்டதுடன், முச்சக்கரவண்டி மற்றும் ஜீப் வண்டிகளும் அதில் உள்ளடங்குமெனவும், அவர் தெரிவித்தார்.

அத்துடன் அம்பியூலன்ஸ் வண்டி, பொதுத் திட்டங்களுக்கு தேவையான வாகனங்கள், தூதுவராலயங்களுக்கு தேவையான வாகனங்கள் உட்பட பொதுத் தேவைகளுக்காக ஏனைய வாகனங்கள் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டதாகவும் வேறெந்த வாகனமும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லையெனவும், அவர் தெரிவித்தார். அரசாங்கமானது கட்டங்கட்டமாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு எதிர்காலத்தில் அனுமதி வழங்குமெனத் தெரிவித்த அவர், அந்த வகையில் வாகன உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை முழுமையாக நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## மருந்து கொள்வனவு குறித்து...

இதற்கமைய, நாட்டில் தற்போதுள்ள மருந்துக் கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பாக எந்தவொரு தரப்பினரும் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிக்க முடியுமென, சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இது தொடர்பான கருத்துகள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் அடுத்த மாதம் 13ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார அமைச்சுக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இலங்கையில் மருந்துக் கொள்வனவு செயற்பாட்டிலுள்ள குறைபாடுகளை கண்டறிவதற்கும் வெளிப்படையான கொள்வனவு முறையை அறிமுகப்படுத்துவதற்கும் உயர்தர மருந்துகளின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதற்கும் மருந்து ஒழுங்குமுறை மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகளை முன்வைப்பதற்கும் ஐந்து நிபுணர்களைக் கொண்ட குழுவொன்று கடந்த ஜுலை மாதம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட குழுவின் அறிக்கை மூன்று மாதங்களுக்குள் வழங்கப்பட வேண்டுமெனவும் அறிக்கை தயாரிப்பதற்கு முன்னதாக மருந்துக் கொள்முதல் செயல்முறை தொடர்பாக பொதுமக்களின் கருத்துகள் பெறப்பட வேண்டுமெனவும், சுகாதார அமைச்சு தெரிவித்தது.

## தென்மேற்கு பருவ மழையின்...

இன்று (01) மழை அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடுமெனவும், வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது. இதேவேளை, நாளையும் (02) மற்றும் நாளை மறுதினமும் (03) நாட்டின் தென்மேற்கு பகுதிகளில் நிலவும் மழையுடனான வானிலை அதிகரிக்கும் சாத்தியம் இருப்பதாகவும் மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடுமெனவும், வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. இடியுடன் கூடிய மழையின் போது, வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்களை வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

## 2019/2020 திருப்திகரமான செயற்றிறன்

# 113 அரசாங்க நிறுவனங்கள் கோபா குழுவால் கௌரவிப்பு



*2019 / 2020ஆம் ஆண்டுகளில் திருப்திகரமான செயற்றிறனை வெளிப்படுத்தி அதிக மதிப்பு எண்ணை பெற்ற அரசாங்க நிறுவனங்களை கௌரவித்து கோபா குழுவினால் 113 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.*

*மேல் மாகாணத்திலுள்ள 45 அரச நிறுவனங்களுக்கு கோபா குழுவின் தலைவர் மற்றும் குழுவின் உறுப்பினர்களால் நேரடியாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், மேல் மாகாணத்துக்கு வெளியேயுள்ள 60 அரசாங்க நிறுவனங்களுக்கு மெய்நிகர் முறையினூடாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.*

*இந்நிகழ்வில் அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுவின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவண்ண, அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுவின் உறுப்பினர்களான பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன, ஜே.சி.அலுவத்துவல, கணக்காய்வாளர் நாயகம் டபிள்யூ.பி.சி. விக்கிரமரத்ன, அரசாங்கக் கணக்குகள் தொடர்பான குழுவின் செயலாளர் சிந்தா புலத்சிங்கள உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.*

## நாட்டில் 100 பாடசாலைகளில்...

தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளில் மூலதனச் சந்தை பற்றிய சங்கங்களை நிறுவும் திட்டத்தின் முதலாவது நிகழ்வு, கண்டி நுகவெல மத்திய கல்லூரியில் நேற்று (31) முற்பகல் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

பங்குச் சந்தை மற்றும் நிதி அறிவாற்றல் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்குடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைவாக ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குச் சந்தை என்பன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன.

கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம்.ரணசிங்க, இலங்கை பிணையங்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சிந்தக மெண்டிஸ் மற்றும் கொழும்பு பங்குச் சந்தையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரஜீவ பண்டாரநாயக்க ஆகியோர் இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

நுகவெல மத்திய கல்லூரியில் மூலதனச் சந்தை பற்றிய சங்கத்தை ஸ்தாபிப்பதற்கான பட்டயச் சான்றிதழ் மற்றும் ஒரு இலட்சம் ரூபா நிதி என்பவற்றை பாடசாலை அதிபர் தம்மிக்க பண்டாரவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி வைத்தார். அத்துடன், மூலதனச் சந்தை பற்றிய அறிவைப் பெறக்கூடிய நூல்களின் தொகுப்பு ஜனாதிபதியின் கரங்களினால், பாடத்துக்கு பொறுப்பான ஆசிரியை அச்சினி கனிடுவெவவிடம் கையளிக்கப்பட்டது. கல்லூரியின் சித்திரப்பாட ஆசிரியை நயனா விஜேகோனினால் வரையப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உருவப்படமும் இதன்போது ஜனாதிபதியிடம் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, “நாம் ஒரே இடத்தில் சுற்றிக்கொண்டு நின்றால் உலகம் நம்மைக் கடந்து செல்லும்” என்ற பாடலை மேற்கோள் காட்டி கல்வி அமைச்சர் உரையாற்றினார். அதை மனதில் வைத்துத்தான் இன்று இந்த திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கைத்தொழில்துறை யுகத்தின் அணுகுமுறைகளுடன் நாங்கள் நீண்டகாலமாக பணியாற்றினோம். அந்தக் கொள்கை அடிப்படையிலான அரசியலில் ஈடுபட்டோம். அதன் முடிவுகளை பற்றி இங்கு குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் கோவிட் தொற்றுநோய் காரணமாக நாம் வங்குரோத்தடைந்த நாடாக மாறினோம். ஆனால், நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றும் திட்டத்தை இப்போது ஆரம்பித்துள்ளேன். அதனை எமது அரசாங்கம் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது.

ஒரு நாடு என்ற வகையில் மீண்டும் படுகுழியில் விழாமல் எப்படி முன்னேறுவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். 20ஆம் நூற்றாண்டின் மத்தியில் கடைப்பிடிக்கப்பட்ட கொள்கைகளை தொடர்வதா அல்லது புதிதாக சிந்தித்து புதிய பாதையில் செல்வதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். பழைய முறையின் கீழ் சென்றால், ஒரே இடத்தில் சுற்றுவதற்கு கூட நாடொன்று எஞ்சாது. ஏனென்றால், இன்று நாம் இருக்கும் இடத்தில் ஒரு பாரிய இடைவெளி இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்த நாட்டின் எதிர்காலத்தை பொறுப்பேற்க காத்திருக்கும் தலைமுறைக்கு இவ்வாறானதொரு நிலை ஏற்பட இடமளிக்க மாட்டோம் என்பதையும் கூற வேண்டும். எனவே, தொழில்நுட்பத்துடன் புதிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும். 21ஆம் நூற்றாண்டின் தொழில்நுட்ப வளர்ச்சியை பற்றி நான் சொல்லத் தேவையில்லை.

நாங்கள் பாடசாலையில் கற்கும் போது, கிராமங்களில் ஒரு தொலைபேசி கூட இருக்கவில்லை. ஆனால், இன்று அனைவரிடமும் கைபேசி உள்ளது. சிலரிடம் இரண்டு கைபேசிகள் இருக்கின்றன. அதுதான் நிகழ்ந்துள்ள மாற்றமாகும்.

இந்த மாற்றத்துடன் நாம் முன்னேறும் போது, நவீன தொழில்நுட்பத்தை நாட்டுக்கு கொண்டுவர வேண்டும். அதற்காக பல பாரிய பணிகளை செய்து வருகிறோம். மேலும், கல்வி அமைச்சு மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதன்படி, நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்படும் புதிய தொழில்நுட்ப முறைகளை முடிவு செய்ய வேண்டும். பிளாக்செயின் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, ஜெனொம் விஞ்ஞானம் என இவை அனைத்தையும் நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

மேலும், இந்த தொழில்நுட்பத்தை கிராமத்துக்கு கொண்டு செல்ல வேண்டும். ஏனென்றால், புதிய தொழில்நுட்பத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்லும் வகையில் விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி வருகிறோம். நவீன தொழில்நுட்பத்துடன் நாம் முன்னேறும் போது, இன்னொரு விடயத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். தொழில்நுட்பம் மட்டும் போதுமானதல்ல. இந்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் பணம் தேவைப்படுகிறது. நாம் அனைத்து விடயங்களுக்கும் பணத்தை பயன்படுத்தும் சமூகம். இன்று அந்தப் பணம் மிகவும் திறந்த சந்தையில் பயன்படுத்தப்படுகிறது. பணப் பயன்பாட்டை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாது. அமெரிக்க அரசாங்கமோ அல்லது சர்வதேச நாணய நிதியமோ அதைச் செய்ய முடியாது.

அன்று டிஜிட்டல் தொழில்நுட்பம் இருக்கவில்லை. இலங்கைக்கு இணையத்தை பெற 1993ஆம் ஆண்டில் நான் கையெழுத்திட்டேன். அதுவரை இந்த வசதிகள் எங்களிடம் இல்லை. இந்த புதிய தொழில்நுட்பத்தின் மூலம் நாம் மிகக் குறுகிய காலத்தில் உலகத்துடன் இணைந்துள்ளோம்.

மேலும், போட்டித்தன்மையான பொருளாதாரத்தில் எல்லைகளை பற்றி கவலைப்படாத நிதி முறைமையே உள்ளது. இது நல்லதோ கெட்டதோ அதை மாற்ற முடியாது. இந்த எல்லையில் இருந்து நாம் செயற்பட வேண்டும். உலகுக்கு தேவையான பணம் இறுதியாக சந்தையில் இருந்து பெறப்படுகிறது. வங்கிகள் தங்களுக்கு தேவையான பணத்தை வங்கிகளிடமிருந்து பெறுகின்றன. நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான பணத்தை பங்குச் சந்தையில் இருந்து பெறுகின்றன. அதற்கேற்ப பணம் பயன்படுத்தப்படுகிறது.

இங்கே மிக முக்கியமான விடயம் பணம். தனியார் துறையை போலவே, அரசாங்கமும் பணச் சந்தையைத் தான் தேர்ந்தெடுக்கிறது. திறைசேரி முறிகளை பெறுகிறோம். இன்று இந்த முறையை பற்றி உங்களை அறிவூட்ட அதன் ஒரு பகுதியைத்தான் இன்று ஆரம்பித்துள்ளோம்.

அதேபோல் அடுத்த வருடத்திலிருந்து மத்திய வங்கி அறிக்கைகளை பாடசாலைகளில் ஆராய்வதற்கு எதிர்பார்க்கிறேன். அது தொடர்பில் நிதி அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறோம். அதற்காக ஆசிரியர்கள் மற்றும் மாணவத் தலைவர்களை பயிற்றுவிப்பதோடு, வங்கி அதிகாரிகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கிறோம். அதனால் புதிய முறைமைகள் தொடர்பில் நாம் அறிந்திருக்க வேண்டும். அறிவை பெற்றுக்கொடுப்பதற்கு மாத்திரமன்றி நிதிப் பயன்பாடு, பிணையங்கள் உள்ளிட்ட அனைத்தையும் கிராமங்கள் வரையில் கொண்டு செல்ல வேண்டும். கிராமங்களில் திறமையானவர்கள் உள்ளனர். அவர்களுக்கு அவசியமான அறிவை பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

இன்று முழு உலகமும் ஒரே சந்தையாக இயங்குகிறது. அதனுடன் நாமும் இணைந்துகொள்ள வேண்டும். அதற்காக பல சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களையும் கைசாத்திட வேண்டும். சிங்கப்பூர், இந்தியா, பங்களாதேஷ், தாய்லாந்து, இந்தோனேசியா, சீனா, மலேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். ஜப்பான், கிழக்காசியா, தென்கிழக்காசியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகளுடன் புதிய சந்தைக்குள் பிரவேசிக்க எதிர்பார்த்துள்ளோம்" எனத் தெரிவித்தார்.

## அரச அங்கீகாரத்துடன் விரைவில்..

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். தேசிய தொழிலாளர் ஆலோசனை சபைக் கூட்டம், தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தலைமையில் தொழில் அமைச்சில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கிய போதே, அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "இலங்கையின் பொருளாதாரத்துக்கு 200 வருடங்களுக்கும் மேலாக பங்களிப்பு வழங்கிவரும் பெருந்தோட்டத்துறை நாள் வேதன முறையிலிருந்து, இலாப பங்கீட்டு முறைமைக்கு மாற வேண்டுமென்பதே எமது நோக்கமாக உள்ளது. இலங்கையில் வாழும் எமது இந்திய வம்சாவளி மக்கள் இங்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இன்னமும் நாள் வேதனத்தையே பெறுகின்றனர். இது அவர்களுக்கு வழங்கும் அங்கீகாரமாக அமையாது. எனவே, இலாப பங்கீட்டு முறையுடன் அவர்களையும் இந்த தொழில் துறையில் உற்பத்தியாளர்களாக மாற்றுவதே ஏற்புடைய நடவடிக்கையாக அமையும். இதற்குரிய வேலைத்திட்டமே எனது அமைச்சினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. வேலையின் போது குளவி கொட்டுதல் உள்ளிட்ட திடீர் அனர்த்தங்களால் உயிரிழப்புச் சம்பவங்கள் கூட பதிவாகியுள்ளன. சிலர் அங்கவீனமடைகின்றனர். தற்போது தொழில்துறை மாற்றம் தொடர்பாக பேசப்படுகின்றது. ஆகவே, அரசாங்க அங்கீகாரத்துடன் தொழிலாளர்களுக்காக காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களை கௌரவிப்பதற்கான நாளொன்றை ஒதுக்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்கான கூட்டு அமைச்சரவைப்பத்திரம் முன்வைக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

இ.தொ.கா.வின் உப தலைவரும் தேசிய தொழிலாளர் ஆலோசனை சபைக் குழு உறுப்பினருமான பாரத் அருள்சாமியும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## மத்தேகொடவில் முதலாவது...

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது. இந்நிலையில், பெற்றோல் மற்றும் டீசலுக்கு லீற்றருக்கு 3 ரூபா விலைக்கழிவுடன் சினோபெக் முதல் சுற்றுச் சந்தை விநியோகத்தை ஆரம்பித்துள்ளது. இதன் விநியோகத் திட்டம் மற்றும் அனைத்து 150 நிரப்பு நிலையங்களும், சினோபெக்கின் நிர்வாகத்திடம் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்கு முன்னர் படிப்படியாக ஒப்படைக்கப்படவுள்ளது.

இலங்கையில் பெற்றோலிய பொருட்களை இறக்குமதி செய்தல், சேமித்தல், விநியோகம் செய்தல் மற்றும் விற்பனை செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தத்தின் போது கடந்த மே மாதம் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சகத்துடன் கையெழுத்திட்டமைக்கமைய, சினோபெக்குக்கு 150 எரிபொருள் நிலையங்களை இயக்குவதற்கான 20 ஆண்டு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ஜுலை மாதத்தில் 50 புதிய எரிபொருள் நிலையங்களில் முதலீடு செய்ய முடியுமென்றும் குறிப்பிடப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் கொழும்புத் துறைமுகத்துக்கு தரமான பெற்றோலிய பொருட்களின் முதல் இரண்டு எண்ணெய்க் கப்பல்கள் வந்ததைத் தொடர்ந்து, சினோபெக் முழு வணிக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் விநியோகத்தர் ஒப்பந்தங்களை நிறைவு செய்தது.

நாடு முழுவதும் 150 நிரப்பு நிலையங்களுக்கு சேவை செய்யும் விநியோகச் சங்கிலியை அறிமுகப்படுத்தியது. சினோபெக்கின் இலங்கை சந்தையின் நுழைவு, அதன் ஆற்றல் வழங்கல்களுக்கு அப்பாற்பட்ட முக்கியத்துவத்தை கொண்டுள்ளது.

சினோபெக் மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கு இடையிலான நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு, அணுகல் மற்றும் நிலைத்தன்மை தொடர்பாக சினோபெக் எனர்ஜி லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி கருத்துத் தெரிவித்த போது, “சினோபெக்கின் வர்த்தக நடவடிக்கைகளின் உத்தியோகபூர்வ தொடக்கத்தை இலங்கையில் எங்களின் முதல் உரிமையாளர் நிரப்பு நிலையத்தை ஒப்படைப்பதில் நாங்கள் பெருமையடைகிறோம்" என்றார்.

## மட்டக்களப்பிலிருந்து யாழுக்கு...

வெளிநாட்டு கடன்களை செலுத்தும் நடவடிக்கைகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதும், தெற்கை போன்றே வடக்கு, கிழக்குக்கும் அபிவிருத்தியில் முன்னுரிமை வழங்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு நேற்று விஜயம் செய்த போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, மட்டக்களப்பில் நடைபெற்ற மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

"30 வருட யுத்தம் காரணமாக வீழ்ச்சியடைந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் 'வடக்கு வசந்தம்' மற்றும் 'கிழக்கின் உதயம்' போன்ற வேலைத்திட்டங்கள் பெருமளவு நிதி செலவில் முன்னெடுக்கப்பட்டன. அதற்கான நிதி கடன்கள் மற்றும் உதவிகள் மூலமாகவே பெறப்பட்டன.

அவ்வாறு வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டுக் கடன்களை நாம் இன்னும் செலுத்தி முடிக்கவில்லை. அதன் காரணமாக தற்போது நாடு பெரும் கடன் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. அவ்வாறு கடன்களை மீளச் செலுத்துதல் மற்றும் கடன் மறுசீரமைப்பு இடம்பெறும்வரை எவ்வித வெளிநாட்டுக் கடன்களையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது.

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்து மாகாணங்களிலுமே தற்போது அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில், போக்குவரத்து அமைச்சின் வேலைத்திட்டங்கள் உட்பட அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் நாட்டுக்கு மீண்டும் வெளிநாட்டுக் கடன் கிடைத்தால்தான் முன்னெடுக்க முடியும். அதற்கான வேறு எந்த அரசியல் தீர்வும் கிடையாது.

2048ஆம் ஆண்டுவரை நாம் அந்தக் கடன்களை செலுத்த வேண்டியுள்ளது. எந்த தலைவரின் கீழ் நாடு ஆளப்பட்டாலும், எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், கடனை மீளச் செலுத்தும் நெருக்கடியிலிருந்து விலக முடியாது.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம், நட்பு நாடுகளுடனும் சர்வதேச நிறுவனங்களுடனும் இணைந்து மேற்கொள்ளும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் வெற்றிகரமாக முடிவடைந்த பின்னர் மீண்டும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

அந்த சந்தர்ப்பத்தில் தெற்கை போன்றே வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கும் விசேட முன்னுரிமை வழங்கப்படும் என்றும் நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம்வரை புதிய ரயில் சேவையை ஆரம்பிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் சில ரயில்களை கொள்வனவு செய்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. அந்த பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவுற்றால் அடுத்த வருடத்தில் கிழக்கு மாகாண மக்களின் வேண்டுகோளை நிறைவேற்ற முடியும் என்றும், அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## ஹட்டன் டான்ஸ் ஸ்டார்...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இளைஞர் அணியின் அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில் லிந்துலை, மெரேயா, அக்கரப்பத்தனை, டயகம ஹப்புத்தளை மற்றும் நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் பங்கேற்றனர்.

இவர்கள் 16 வயது முதல் 26 வயதுக்கு உட்பட்டவர்களெனவும் இவர்கள் ஹட்டன் பகுதியிலுள்ள நடனப் பயிற்சி நிலையமொன்றில் பயிற்சி பெற்றவர்களெனவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தினுடைய இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீநாக வாணி ராஜாவின் மேற்பார்வையில் நேற்று முன்தினம் (30) காலை 8.00 மணி முதல் நேற்று (31) காலை 8.00 மணிவரை இந்த இளைஞர்கள் தொடர்ச்சியாக நடனமாடினர். ஹட்டன், டன்பார் மைதானத்தில் இந்த சாதனை நிகழ்வு நடைபெற்றது. நடனமாடிய இளைஞர், யுவதிகள் கட்டங்கட்டமாக ஓய்வெடுக்கவும், உணவு உட்கொள்ளவும் சோழன் மேற்பார்வைக் குழு அதிகாரிகள் சிறிதுநேரம் அனுமதி வழங்கினர். இளைஞர், யுவதிகளின் சாதனை ஆட்டத்தை கண்டுகளிக்க பெருமளவானோர் வருகை தந்தனர்.

## கொக்குத்தொடுவாய் மனித...

நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், இது தொடர்பாக நேற்று விசேட வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, அனைத்து திணைக்களங்களின் தொடர்புடன் எதிர்வரும் 5ஆம் திகதி அகழ்வுப் பணிகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையில் முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.பிரணவன், சட்டத்தரணிகளான எம்.எஸ்.சுமந்திரன், வி.கே.நிரஞ்சன், ரணித்தா ஞானராசா, வி.எஸ்.தனஞ்சயன், காணாமல் போன அலுவலகத்தின் சட்டத்தரணிகளான எஸ்.துஷ்யந்தினி, ஜெ.தர்பரன், முல்லைத்தீவு மாவட்ட பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், மாவட்ட செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ம.உமாமகள், கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் கா.சண்முகதாசன், கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்திய பொலிஸ் மாஅதிபர் சமுத்திரஜீவ, முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் அசோக பெரேரா, கொக்குளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தடயவியல் பொலிஸ் பிரிவினர் உள்ளிட்ட தரப்பினர் பலரும் ஆஜராகியிருந்தனர்.

அனைத்து தரப்பினருடைய ஒத்துழைப்புடன் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இதன் போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

## உள்ளூர் சந்தையில் முட்டை...

வீழ்ச்சியடைந்துள்ளதாக, நுகர்வோர் தெரிவித்தனர்.

இறக்குமதி செய்யப்பட்ட ச.தொ.ச. முட்டை விற்பனையால், சாதாரண கடைகளில் 60, 70 ரூபாவுக்கு இருந்த முட்டை விலை, உள்ளூர் சந்தையில் உற்பத்தி செய்யப்படும் முட்டையின் விலை 35 ரூபாவரை குறைந்துள்ளது.

இதேவேளை, களுத்துறை மாவட்டத்திலுள்ள ச.தொ.ச. விற்பனை நிலையங்களில் நாளாந்தம் சுமார் ஒரு இலட்சம் முட்டைகள் 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால், சாதாரண கடைகளிலும் முட்டை விலை குறைந்துள்ளதாக, ச.தொ.ச. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



# சர்வதேச தெங்கு தினம்

செப்டெம்பர் 02



# அகற்றப்படுகின்ற தேங்காய் சிரட்டையிலிருந்தும் டொலர் ஈட்ட முடியும்

இலங்கை மக்கள் பண்டைக் காலம் தொட்டு தென்னை மரத்துடன் பின்னிப் பிணைந்த மரபுக்கு உரிமை கொண்டாடும் சமூகமாகும். தேசிய கலாசார அம்சங்கள் போன்று கலாசாரத்திலும் தென்னை மரம் பெரும்பாலும் முதன்மை இடம்பெறுகிறது. தென்னை மரத்தின் அனைத்து அம்சங்களும் பல்வேறு வகையில் நுகர்வுக்காக பயன்படுத்தப்படுவதால் முக்கியத்துவம் வாய்ந்ததாக அடையாளம் காணப்படுகிறது. தென்னை மரத்திலுள்ள முக்கியத்துவம் காரணமாக செப்டெம்பர் 02 ஆம் திகதியை தெங்கு தினமாக பெயரிடப்பட்டிருப்பதோடு தெங்கு தினத்தை கொண்டாடுவதற்காக இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக எமது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் கலாநிதி ரொஷான் பெரேரா மற்றும் பணிப்பாளர் நாயகம் ஜனக்க பிரேமரத்ன ஆகியோருடன் நடைபெற்ற நேர்காணல்.

**● தெங்கு தினத்தையொட்டி இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை குறிப்பிடவும்?**

செப்டெம்பர் 02 ஆம் திகதி தெங்கு பயிர்ச் செய்கை சபையின் காணியொன்றில் எமது அதிகாரசபை மற்றும் ஏனைய நிறுவனங்களின் தலைமைத்துவத்தின் கீழ் தெங்கு தின நிகழ்வுகள் நடைபெறும். 30 ஏக்கர் மாதிரி தென்னைத் தோட்டமொன்று அமைக்கப்படுவதோடு அதற்கு இணையாக தென்னை பயிர்ச்செய்கை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. அதுதவிர தொழில் துறையாளர்கள் சிலரை வட மாகாணத்துக்கு அனுப்பி அங்கு தொழில்துறையை ஆரம்பிக்கும் அடிப்படைத் திட்டங்களை செயற்படுத்தவுள்ளோம். அதன் பின் தேங்காய் சிரட்டை, தேங்காய் மட்டை போன்றவற்றை வழங்க சிறு வழங்குநர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு அதன்மூலம் உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பத்தை வழங்குவதற்கு பயிற்சி நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படவுள்ளன. தெங்கு தினத்தை வடக்கிற்கு எடுத்துச் செல்வதன் மூலம் வடக்கில் தென்னை மற்றும் தென்னைச் சார்ந்த உற்பத்திகளை மேம்படுத்த நாம் எதிர்பார்க்கிறோம். அதேபோன்று வடக்கில் தெங்கு முக்கோணம் ஒன்றை உருவாக்குவது எமது எதிர்பார்ப்பாகும். அதன்மூலம் மக்களுக்கு நல்ல வருமானமொன்றை ஏற்படுத்துவதும் நாட்டுக்கு அதிகமான அந்நியச் செலாவணியை கவர்வதும் எமது இலக்காகும்.

**● தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் பணிகள் பற்றி குறிப்பிடவும்** ?



**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் கலாநிதி ரொஷான் பெரேரா**



**இலங்கை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகம் ஜனக்க பிரேமரத்ன**

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையானது தெங்கு அபிவிருத்திக்காக உதவுகிறது. இரண்டாவது பணியாக தெங்கு ஏற்றுமதிக்காக உதவி புரிவதாகும். தென்னையினால் மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகளின் தரத்தை பரீட்சிப்பது மூன்றாவது பணியாக குறிப்பிடலாம். இதனால் தெங்கு தினமும் எமக்கு மிக முக்கியமானது. தென்னம் பூ காயாகுவதற்கு ஓர் ஆண்டு வரையான காலம் எடுக்கிறது. அவ்வாறு காலம் எடுத்து உருவாகும் தேங்காய் ஒன்றின் மூலம் 150 உற்பத்திகளை மேற்கொள்ள முடியும் என்பதே ஒரு அதிசயமாகும். இந்த உற்பத்திகளில் 40 வரையானவை மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஆனால் 150 உற்பத்திகளை மேற்கொள்ள முடியும் என்றால் அதுவே எமது வெற்றியாகும். இந்த சர்வதேச தெங்கு தினத்தின் ஊடாக எமது தென்னைச் சார்ந்த 150 உற்பத்திகளையும் வெளிநாட்டு சந்தைக்கு அறிமுகம் செய்ய நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இங்கு கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்காக மற்றும் இருக்கின்ற தடங்கல்களை நீக்குவதற்கு தெங்கு தினத்தை பயன்படுத்துகிறோம். தெங்கு முக்கோணம் என்ற இலங்கையின் வேரூன்றிய கோட்பாட்டை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்துவதற்கு நாம் ஆலோசித்தோம். அதன்படி தென்னை அதிகம் உள்ள பகுதிகளில் தெங்கு சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்கின்ற தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அதிக நன்மையை பெற முடியும். தொழில்துறையில் புதிய தொழில்நுட்பத்துடன் முன்னோக்கி வந்துள்ளோம். எமது நாட்டின் உற்பத்திகளின் தரம் மிக உயர்ந்தது என்று வெளிநாடுகள் கூறுகின்றன. இது பெருமை கொள்ள வேண்டிய விடயமாகும்.

எமது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை அதிகம் பெற்றுக் கொள்ள முடியுமான மூலப்பொருட்களாக மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகளுக்கு அதிக பெறுமதி சேர்த்த உற்பத்திகள் மூலமாகும். தெங்கு சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளில் அதிக பெறுமதி இருப்பது தேங்காய் சிரட்டைக்காகும். தேங்காய் சிரட்டை செயற்படுத்தப்பட்ட கார்பன் தயாரிப்பின்போது அதற்கு அதிக பெறுமதி சேர்கிறது. தெங்கு சார்ந்த உற்பத்திகளில் அதிக வருவாயை ஈட்டுவதற்கு தேங்காய் சிரட்டையால் முடியும். முதல் தெங்கு முக்கோணத்தில் ஒரு பில்லியன் தேங்காய்களை பெறுகிறோம். நாடு முழுவதும் வருடத்திற்கு தென்னை அறுவடை 3 பில்லியனாக இருந்தாலும் மற்ற இரண்டு பில்லியனும் இருப்பது தெங்கு முக்கோண பகுதிக்கு வெளியிலாகும். இரண்டு பில்லியன் தோங்காயையும் இத்துறைக்கு சேர்ப்பது தான் எமது நோக்கமாகும். தேங்காய் சிரட்டை கூட வீணாகுவதால் இந்த வளங்களை சேர்ப்பது அவசியமாகும். அதனால் தான் புதிய தென்னை முக்கோணத்தை உருவாக்குவதற்கு நாம் திட்டமிடுகிறோம். தெங்கு தொழில்துறைக்காக அதிகமாக காணி தேவையாக உள்ளது. வட மாகாணத்தில் அதிகமான வெற்றுக்காணிகள் இருப்பதால் இந்த தெங்கு பயிர்ச்செய்கையை அங்கு விரிவுபடுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கிறோம். அதேபோன்று பனைக்கு இணையான பயிரான தென்னைக்காக அந்த பிராந்தியத்தில் இருக்கின்ற சுற்றுச்சூழல் அம்சங்கள் பொருந்துவதாக தெங்கு பயிர்ச்செய்கை சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

**● தெங்கு உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்கள் இல்லாவிட்டால் தென்னையை, பற்றாக்குறை இன்றி பெற்றுக்கொள்ள உற்பத்தியாளர்களுக்கு முடியுமாக உள்ளதா?**

உண்மையில் தெங்கு முக்கோணத்தில் கூட கிடைக்கின்ற தேங்காய் அளவு 200 தொழிற்சாலைகள் இடையே பகிர்ந்து செல்கின்றன. இந்த தொழிற்சாலைகளின் செயல்திறன் அதிகரிக்கப்பட்டிருப்பதன் காரணமாக மூலப்பொருட்களுக்கு ஓரளவு பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் தேங்காய்களின் விலை அதிகரிக்கக்கூடும். இந்த விலையில் உள்ள தளம்பல் தெங்கு தொழில்துறை சார்ந்த உற்பத்திகளுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்துவதாகும். இதனால் சில நேரம் தொழிற்சாலைகள் மூடப்படுவதற்குக் கூட வாய்ப்பு உள்ளது. இதனால் தெங்கு அபிவிருத்தி சபையான நாம், தெங்கு அறுவடையை அதிகரிப்பதற்கு பல்வேறுபட்ட மூலோபாயங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம். இதில் ஒன்று தான் எமது பழைய தெங்கு முக்கோணத்திற்கு பதிலாக தெங்கு முக்கோணத்தை திட்டமிடுவதாகும். இருக்கின்ற எமது மரங்களில் இருந்தே அதிக அறுவடையை பெறும் வகையில் ஒரு பில்லியன் தேங்காய்களிலிருந்து எமக்கு 800 மில்லியன் டொலர்களை ஈட்ட முடியுமாயின் மேலும் ஒரு பில்லியன் தோங்காய்களை இதற்குள் இணைக்க முடியுமானால் மேலும் 800 மில்லியன் டொலர்களை பெற முடியுமாக இருக்கும். 1.6 பில்லியன் டொலர்களை பெற முடியுமான தொழில்துறை ஒன்று எம்மிடம் இருந்தாலும் நாம் அதில் இருந்து முறையான பயன்பாட்டை பெறவில்லை. உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுப்பது மற்றும் இந்த தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்களை பெற்றுக்கொடுப்பதையும் மேற்கொள்ள வேண்டும்.

**● தெங்கு அறுவடையை பெறுவதற்கு மரம் ஒன்றை நட்டு எத்தனை காலம் எடுக்கும்?**

புதிதாக மரம் நட்டு அதில் இருந்து அறுவடை ஒன்றை பெறுவதற்கு பல ஆண்டுகள் செல்லும். ஆனால் தற்போது இருக்கும் தென்னை மரங்களில் இருந்து கூட குறைந்த காய்களே பெறப்படுகின்றன. எனவே, அவைகளில் அதிக அறுவடையை பெறுவதற்கு மரங்களை நன்றாக பராமரிக்க வேண்டும். மரங்களுக்கு உரம் இடுவது, நீர் வழங்குவது மற்றும் பூச்சுகளின் பாதிப்பில் இருந்து மரத்தை பாதுகாப்பதன் மூலம் அதிக அறுவடையை பெறலாம்.

எமது நாட்டில் தேங்காய் உறபத்தி 3 பில்லியனாக இருந்தபோதும் அதில் 1.8 அளவு நாட்டுக்குள் சாதாரண பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படுகின்றன. தேங்காயை அதிகம் பயன்படுத்துகின்ற நாடு என்ற வகையில் எமது பயன்பாட்டில் ஏற்படுகின்ற சிரமத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் எமக்கு மேலும் தேங்காய்களை உற்பத்திக்காக பயன்படுத்த முடியும். இதற்காக முழு நாடும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். முன்னர் இருந்த தவறான கருத்துகள் காரணமாக தேங்காய் பால் எடுப்பது பெரும்பாலான வீட்டுப் பெண்கள் கைகளால் மாத்திரம் செய்வது அந்த தேங்காயால் பெற்றுக்கொள்ள முடியுமான உச்ச பால் அளவை பெற்றுக்கொள்வதற்கு முடியாமல்போகிறது. இதனால் வீடுகளில் அதிகம் தேங்காய் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் தேங்காய் மிகவும் மிக மென்மையானது என்பதோடு பிளென்டர் செய்து உணவுகளுக்கு இடுவதன் மூலம் உணவுகளின் சுவையை அதிகரிப்பதற்கும் தேங்காய் விரயத்தை குறைக்கவும் முடியும்.

அதேபோன்று தேங்காய் சிரட்டை வீணாக தீயிட்டு அழிப்பதை விடவும் அவைகளை சேர்த்து விற்பனை செய்வதன் மூலம் வருவாய் ஒன்றை ஈட்டுவதற்கும் செயற்படுத்தப்பட்ட கார்பன் உற்பத்தி மூலம் நாட்டுக்கு வருவாய் ஒன்றை ஈட்டுவதற்கும் முடியும்.

**● தெங்கு தொழில்துறையாளர்களுக்கு உள்ள தடங்கல்கள் உங்களது நிறுவனத்தால் அடையாளம் கண்டு அதற்காக ஏதாவது திட்டம் ஒன்றை மேற்கொள்கிறீர்களா?**

எமது தெங்கு சார்ந்த உற்பத்திகளின் தரத்தை உயர்த்துவதற்கு தேவையான தொழில்நுட்ப அறிவை பெற்றுக்கொள்ளும் சிரமங்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். நாம் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை என்ற வகையில் இதனை வேறு வகையிலேயே பார்க்கிறோம். எமது அமைச்சர் ரமேஷ் பத்திரண, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, எமது செயலாளர் சரித்த தர்மகீர்த்தி ஆகியோர் மற்றும் எமது நிறுவனத்தில் கற்ற பணியாளர் குழு ஒன்று உள்ளது.

தொழில்நுட்ப அறிவை உதவியாக பெற்றுத் தரும்படி கோரிக்கை ஒன்றைவிடுக்க இந்த அனைவரும் ஒன்றிணைந்து தீர்மானித்தோம். எமது தொழில்துறையாளர்களுக்கு தேவையான தொழில்நுட்ப அறிவு கிடைத்தால் அவர்கள் உலகில் உயர்வான வர்த்தக குறியாக அவர்களின் உற்பத்தியை மேம்படுத்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

**படம்: மாலன் கருணாரத்ன**
**பதிவு: அயன்தி உடகம்பல**


வடக்கிற்கு
கற்பகத்தரு
வடக்கின் தெங்கு முக்கோணம்




வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களையும் இணைத்து, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தி,
வடக்கின் தெங்கு முக்கோணத்தை ஆரம்பித்தல்,
2023ம் ஆண்டு மிகச் சிறந்த தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களின் மதிப்பீடு மற்றும்
உலக தெங்கு தினத்தைக் (World Coconut Day கொண்டாடுதல்

கௌரவ மீன்பிடி அமைச்சர் திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்கள்,
வடக்கு மாகாண கௌரவ ஆளுனர் திருமதி. பீ.எஸ்.எம்.சாள்ஸ் அவர்கள்
கௌரவ பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சர் திரு. லொஹான் ரத்வத்தே அவர்கள்
உள்ளிட்ட அமைச்சர்கள் மந்திரிமார்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் பெருமைமிகு பங்கேற்புடன், கௌரவ கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர்
**மருத்துவர் திரு, ரமேஷ் பத்திரண அவர்களின் தலைமையில்**

செப்டம்பர்
2
மு.ப. 9.30 முதல்

**யாழ்ப்பாணம் பளை மாதிரித் தென்னந் தோப்பில் இடம்பெறும்.**

உற்பத்திப் பொருளாதாரத்தை பலப்படுத்தும் தெங்குக் கைத்தொழில்

தென்னை மரத்தில் எந்தப் பகுதியும் பயன்படுத்தப்படாமல் அகற்றப்படுவதில்லை. அனைத்தும் பொருளாதார ரீதியாகவும், சமூக மற்றும் கலாசார ரீதியாகவும் பயன்படுத்தப்பட்டு, உணவு தொடர்பான உற்பத்திகள், விவசாய உள்ளீடுகளாக அமையும் உற்பத்திகள், அழகிய கைப்பணிப் பொருட்கள், வேறு வகையிலான பயன்பாட்டுப் பொருள் உற்பத்திகளைப் போன்றே பெரும்பாலான நுகர்வுப் பொருட்களின் உற்பத்திக்குத் தேவையான ஒரு மூலப் பொருளாகவும் உள்நாட்டு உற்பத்திப் பொருளாதாரத்தைப் போன்றே, பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாகவும் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்தையும் பலப்படுத்துகின்றன.

தெங்கு கைத்தொழிலிலுள்ள சவால்களை வெல்லுதல்

- இலங்கையின் நிலப்பரப்பில் சுமார் 28% அளவில் தெங்கு பயிர்ச்செய்கை பரவியுள்ளதுடன், 2022ம் ஆண்டு 3.2 பில்லியன் தேங்காய் சாகுபடியாகக் கிடைத்துள்ளது.
- தெங்கு உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்குமே இந்நாட்டு நுகர்வுக்காக எடுத்துக் கொள்ளப்படுவதுடன் எஞ்சிய தொகை தெங்கு கைத்தொழில் சார்ந்த உற்பத்திகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.
- தெங்கு உற்பத்தியும், தென்னை மரத்தின் ஏனைய பகுதிகளைக் கொண்டு உற்பத்தியாகின்ற பல்வேறு பொருட்களையும் சேர்த்து தெங்கு தொடர்பான உற்பத்திக் கைத்தொழிலின் மூலம் கடந்த ஆண்டில் 817 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டது.
- அவ்வருமானத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக தெங்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்களுக்கு உலக சந்தையில் உருவாகியுள்ள புதிய சாதகமான சாத்தியங்கள் மற்றும் கேள்வியின் அடிப்படையில் நில முகாமைத்துவம், நீர் முகாமைத்துவம், மண் போசாக்கு நிலைமையை அதிகரித்தல், உயர் விளைச்சலுடன் கூடிய கலப்பின தெங்கு இனங்களை பிரபலப்படுத்துவதன் ஊடாக பயிர்ச்செய்கை மேம்பாட்டையும், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திக் கைத்தொழில் மேம்பாட்டையும் நாம் மேற்கொள்ள நேரிடும்.

தெங்கு மேம்பாட்டுக்கு பெருந்தோட்டத்துறைக் கைத்தொழில் அமைச்சின் பங்களிப்பு

- 2022ம் ஆண்டில் 5.5 மில்லியன் தென்னங் கன்றுகளை உருவாக்கி பகிர்ந்தளித்தல்
- ப்ரொன்டிஸ்பா ஒழிப்பு, வெண் ஈ கட்டுப்பாடு போன்ற விளைச்சலுக்கு சேதம் விளைவிக்கும் கிருமிகளின் தொல்லையை ஒழித்தல் மற்றும் கட்டுப்படுத்தலைப் போன்றே, பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
- கலப்பின விதை தென்னங் கன்றுகளின் உருவாக்கத்தை அதிகரித்தல், "வீட்டுத் தோட்டத்திலிருந்து வீட்டுக்குத் தேங்காய்" என்ற நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல்
- முறையான பயிர்ச்செய்கையின் கீழ், தென்னங் கன்றுகளை நடும் கருத்திட்டத்தை செயற்படுத்தல், தென்னங் கன்றுகளை நடுவதற்கான தென்னங் கன்றுகளை வழங்கும் கருத்திட்டத்தை செயற்படுத்தல்.
- தென்னை மரங்களைப் பாதுகாப்பதற்காக மரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் தென்னை மரமும் தடைசெய்யப்பட்ட மரங்களில் உள்ளடக்கப்பட்டது.
- சவூதி அரேபியாவின் புசநநெ Initiative 2021 கருத்திட்டங்களுடன் ஒன்று சேருதல் போன்ற தெங்கு கைத்தொழில் சார்ந்த வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புகளை விரிவாக்கிக் கொள்ளுதல்
- தெங்கு சார்ந்த உற்பத்திகளுக்கான ர்ளு ஊழனந 38க்கு மேலதிகமாக புதிதாக 12ஐப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- தென்னந்தும்பு மற்றும் தேங்காய்ச் சிரட்டைகளை சேகரிக்கும் முன்னோடிக் கருத்திட்டத்தை செயற்படுத்தல். தும்பு மற்றும் தென்னம் நார்களை உலர்த்துவதற்கான வசதிகளை வழங்கும் கருத்திட்டங்களைச் செயற்படுத்தல். மரபுரீதியான தேங்காயெண்ணைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான வசதிகளை வழங்கும் கருத்திட்டத்தை செயற்படுத்தல்
- தெங்கு சார்ந்த உற்பத்திகளில் பெறுமதி சேர்ப்பதற்கான விதிமுறைகளை செயற்படுத்தல்.
- இற்றைப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பத்தை தெங்கு பயிர்ச் செய்கையிலும் தேங்காய் சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலிலும் பயன்படுத்துதல்

எதிர்கால நோக்கங்களும் இலக்குகளும்

- இப்போதுள்ள தெங்கு பயிர்களைப் பாதுகாத்து, அவற்றின் விளைதிறனை அதிகரித்து வீட்டுத் தோட்ட தெங்குப் பயிர்ச் செய்கைகளை மேம்படுத்துவதைப் போன்றே புதிய பயிர்ச் செய்கைகளை ஆரம்பித்தல்
- தெங்கு சார்ந்த உற்பத்தி கைத்தொழிலை பலப்படுத்தி பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அதிகரித்து, இற்றைப்படுத்தப்படும் உலக சந்தை தரங்களுக்கு ஏற்றவாறு தெங்கு சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்
- வடக்கின் தெங்கு முக்கோணத்தின் வாயிலாக 3 மில்லியன் தென்னங் கன்றுகளைப் புதிதாகப் பயிரிடல்
- தெங்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்களை வடக்கு மாகாணத்தில் புதிதாக ஆரம்பித்தலும் 10 வருடங்களில் தெங்கு சார்ந்த ஏற்றுமதி வருமானத்தை 2 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரிப்பதும்.

தெங்கு கைத்தொழில் மேம்பாட்டுக்கான அமுலாக்கல் நிறுவனங்கள்
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை
தெங்கு பயிர்ச்செய்கை சபை
தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
ஊடக அனுசரணை - தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

# போதைப் பாவனை: ஓர் இஸ்லாமிய நோக்கு

இலங்கையில் இன்று மிக மோசமாக வியாபித்துள்ள போதைப்பொருள் பாவனையானது பல்வேறு வகையான தாக்கங்களையும் பாதிப்புகளையும் தனிமனிதர்கள் மட்டத்திலும் சமூக மட்டத்திலும் ஏற்படுத்தி வருகின்றன. இதனை ஒழிப்பதற்காக பல்வேறு வகையான நடவடிக்கைகள் அரசாலும் சமய, சமூக விவகார அமைப்புகளாலும் நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தாலும் அதில் எதிர்பார்க்கப்படக்கூடிய அளவு திருப்திகரமான அடைவுகளை கண்டு கொள்ள முடியவில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

தனிமனித ஆளுமையை கட்டியெழுப்புவதற்கும், சிறந்த சமூக உருவாக்கத்திற்கும் மிகப்பெரும் சவாலாக மாறியுள்ள போதைப்பொருள் பாவனையை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இல்லையெனில் மனித நாகரீகத்திற்கு எதிரான, மனித பண்பாடுகள் அற்ற ஒரு தலைமுறை உருவாவதை யாராலும் தடுக்க முடியாமல் போய்விடும். இதனால் தான் இஸ்லாம் போதைப்பொருள் பாவனை சம்பந்தமாக கடுமையான எச்சரிக்கைகளை பிறப்பித்துள்ளது. இது பற்றி அல்லாஹுத்தஆலா அவனது திருமறையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்,

"விசுவாசிகளே.... மதுபானமும், சூதாட்டமும், விக்கிரக வணக்கமும், அம்பெறிந்து குறி கேட்பதும் சைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளில் உள்ளவை ஆகும். ஆகவே இவைகளில் இருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் (அதனால்) நீங்கள் வெற்றி பெறுவீர்கள்". (அல் மாயிதா: 90)

இத்திருவசனத்திலே அல்லாஹுத்தஆலா ஒரு மனிதனுக்கு போதையை ஏற்றி, அவனது புத்தியை பேதலிக்க செய்கின்ற மதுபானம் அருந்துதல் எனும் பாவச்செயலை இணை வைத்தல் என்னும் பாவத்தோடு இணைத்து சொல்லி இருப்பது, அதன் பாதக தன்மையையும், அதன் கொடிய தாக்கங்களையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. மேலும் இது சைத்தானிய அருவருக்கத்தக்க செயல் என்பதாக இறைவன் கூறுவதில் இருந்து இது மனித விழுமியங்களையும் பண்பாடுகளையும் அழித்து, இப்பூமியை சைத்தானிய சாம்ராஜ்யமாக மாற்றுகின்ற அழிகருவியாக அல்லாஹ் அடையாளப்படுத்தி இருக்கிறான். தனி மனிதரொருவருக்கு போதை ஏற்படுத்துகின்ற உடல் உளப் பாதிப்புகள் பலவாகும். குறிப்பாக,




1 ஒரு மனிதன் போதைவஸ்துக்களை பயன்படுத்துவதன் மூலம் தன்னை மயக்க நிலைக்கு கொண்டு சென்று, தன்னிலை மறந்த பேதையாக மாறிவிடுகின்றான். இந் நிலையில் இவன் ஒரு மனிதனாக யாராலும் பார்க்கப்படுவதில்லை. இது மட்டுமன்றி ஒட்டுமொத்த மனித சமுதாயத்தின் வெறுப்புக்குரியவனாக மாறி விடுகின்றான்.

2 ஒரு மனிதனுக்கு அல்லாஹ் வழங்கியிருக்கின்ற மிகப்பெரும் அருட்கொடையாக கருதப்படுகின்ற உடல் ஆரோக்கியத்தை அவன் தொலைத்து விடுகிறான். ஈரல் நிரந்தர பாதிப்புக்குள்ளாவதால் உடலின் நஞ்சகற்றல் தொழிற்பாடு தடைப்பட்டு போய் விடுகின்றது. எனவே உடலில் நச்சு பதார்த்தங்களின் சேர்க்கையால் உடல் உறுப்புகளில் புற்று நோயை தோற்றுவிக்கின்றது.

3 போதைப்பாவனைக்கு அடிமையானவன் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படுகின்றான். தான் அடிமையாக இருக்கின்ற போதை வஸ்துக்களை கொள்வனவு செய்வதற்காக பல இலட்சம் ரூபாய்களை தொடர்ச்சியாக செலவு செய்து தனது பொருளாதார வளத்தை அழித்து கொண்டதன் பிற்பாடு மிக மோசமான சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றான்.

4 போதைப் பழக்கத்துக்கு அடிமையானவன் அமைதி இழந்து, நிம்மதி இழந்து, உறவுகளை, சொந்த பந்தங்களை இழந்து ஆதரவற்றவனாக கைவிடப்பட்டு, புனர்வாழ்வு மையங்களில் கொண்டு சேர்க்கப் படுகின்றான்.

5 போதை ஏற்றிக்கொண்ட மனிதனுக்கு தொழுகை, நோன்பு போன்ற ஆன்மீக சன்மார்க்க கடமைகளில் ஈடுபடுவதற்கான தடையை இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது. இதைவிட ஒரு முஸ்லிமுக்கு துக்ககரமான துரதிஷ்டவசமான நிலை இருக்க முடியாது.

அதேநேரம் போதைப்பொருள் பாவனையால் சமூக ரீதியாகவும் பல பாதிப்புகள் ஏற்படவே செய்கின்றன.

போதைப்பொருள் பாவனை வக்கிர குணம் கொண்ட ஒரு வன்முறைச் சமூக உருவாக்கத்திற்கு வித்திடுகின்றது. இதை அல் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "மதுபானத்தின் மூலமும், சூதாட்டத்தின் மூலமும், உங்களுக்கிடையில் விரோதத்தையும், குரோதத்தையும் உருவாக்கவும், அல்லாஹ்வின் நினைவில் இருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடவுமே நிச்சயமாக சைத்தான் விரும்புகின்றான். (ஆகவே இவைகளில் இருந்து) நீங்கள் விலகிக் கொள்வீர்களா?"

இன்று குடும்பங்களுக்கிடையிலும், சமூகங்களுக்கு இடையிலும் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு வகையான சிக்கல்களுக்கும், முரண்பாடுகளுக்கும், குரோத செயற்பாடுகளுக்கும் போதைப்பொருள் பாவனை பிரதான பங்கினை வகிக்கின்றது.

அநியாயமான முறையில் பல உயிர்கள் காவுகொள்ளப்படுவதற்கும் வாகன விபத்துக்களால் ஏற்படுகின்ற உயிரிழப்புகளுக்கு முக்கிய காரணியாக இருப்பதும் போதைப் பொருளேயாகும்.

இன்று சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறு வகையான சமூக நோய்களுக்கும் போதைப்பொருள் பாவனை அதிகம் பங்களிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, சிறுவர் துஷ்பிரயோகங்கள், கற்பழிப்புகள், களவு, தற்கொலை, கொலை முயற்சி, பிள்ளைகளின் பராமரிப்பு பிரச்சினைகள் போன்ற இன்னோரன்ன பல பஞ்சமா பாதகச் செயல்கள் சமூகத்திலே தலை விரித்தாடுவதற்கும் இப்போதைப்பொருள் துஷ்பிரயோகம் பெரிதும் பங்களித்திருக்கின்றன.

இதன் விளைவாக தனிமனித ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஏற்படுகின்ற தாக்கங்கள் உலகை அழிவின் விளிம்பை நோக்கி அழைத்துச் செல்கின்றன. ஒரு ஆரோக்கியமான சமூகக் கட்டமைப்பை சிதைத்து உயிர்ப்பற்ற ஒரு சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கான வழியை ஏற்படுத்துகின்றன. இன்று உலகை உலுக்கி கொண்டிருக்கும் பாதாள உலக சாம்ராஜ்யத்தின் வருமானத்திற்கான பிரதானமான வழியாக காணப்படுகின்ற இப்போதைப்பொருள் வியாபாரம் எங்களது அடுத்த தலைமுறையை அழித்துக் கொண்டிருக்கின்றன என்பதனை நாம் ஒவ்வொருவரும் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே இவ்வுலகை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டுமென்றால் அனைத்து விதமான போதைப்பொருள் பாவனைகளும் இஸ்லாமிய வழிகாட்டல்களின் அடிப்படையில் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு தேவையான கட்டளைகளையும் வழிகாட்டல்களையும் இஸ்லாம் வழங்கியுள்ளது. அதற்கேற்ப மனித சமூகத்தைப் பாதுகாக்க முயற்சிப்போம்.

கலாநிதி அல் ஹாபிழ்
எம்.ஐ.எம்.சித்தீக்...
(அல்–ஈன்ஆமி) B.A.Hons, (Al Azhar university, Egypt)
M.A.& PhD (International Islamic university, Malaysia)

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk



# மறுமை வாழ்வின் சிந்தனை

மறுமை சிந்தனையை வளர்த்துக் கொள்ளஇருவகையானவழிகள்உள்ளன. ஒன்று சிந்தனை ரீதியான வழிமுறை. மற்றையது செயல் ரீதியான வழிமுறை ஆகும்.

அந்த வகையில் குர்ஆனை பொருள் அறிந்து படிக்கும் போது சிறுகச் சிறுக மறுமை வாழ்வு மீது உறுதியான நம்பிக்கை ஏற்படும்.

ஒருவர் தம் கண்களால் நேரடியாகப் பார்த்துவிட்டு வந்து தெளிவாக விவரிப்பது போல் குர்ஆன் அளிக்கும் மறுமை பற்றிய விவரங்கள் அமைந்துள்ளன. எந்த வார்த்தைகளைக் கொண்டு மறுமை வர்ணிக்கப்படுகின்றதோ அக் காட்சியை நாம் அப்படியே பார்க்கத் தான் போகிறோம் என்பதை குர்ஆனை பொருள் அறிந்து தொடர்ந்து ஓதும் போது விளங்கிக் கொள்ளலாம்.

இந்த மனநிலைக்கு மேலும் உரமூட்ட நபி மொழிகளையும் தேடி ஆழ்ந்து படிக்க வேண்டும். இதன் மூலம் நபி (ஸல்) அவர்களும் தம் தோழர்களும் எந்தளவு மறுமை நம்பிக்கையில் உறுதியுடன் இருந்தார்கள் என்பதையும் அறியலாம்.

'உங்கள் உள்ளத்தில் மரணம் பற்றிய நினைவு பசுமையாக இருக்க வேண்டும். ஏமாற்றம் உலக வாழ்வில் மூழ்கி மனிதன் பின்வரும் பேருண்மையை மறந்து விடக்கூடாது. எல்லோரும் எந்த இடத்திற்குச் சென்றுவிட்டார்களோ அந்த இடத்திற்கு (மண்ணறைக்கு) நானும் ஒரு நாள் சென்றே தீரவேண்டும்' என்ற ஹதீஸின் மூலம் நபி (ஸல்) அவர்கள் உணர்த்தியுள்ளார்கள்.

நீங்கள் இவ்வுலக குடும்ப வாழ்வில் உங்கள் பகுதி மக்களுடனும் உறவினர்களுடனும் தொடர்பு கொள்ளும் போதும், கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் போதும் வாழ்வின் ஒவ்வொரு நிலைகளிலும் இரண்டு பாதைகள் உங்களை எதிர்நோக்கும்.

முதற்பாதை மறுமை நம்பிக்கையிலும் தேட்டத்தை நிறைவு செய்யும். அடுத்த பாதை உலகாயத் தேட்டத்தை நிறைவு செய்யும். இவற்றில் உங்களின் கால்கள் முதல் பாதையிலேயே செல்ல முழு முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் உள்ளத்தின் பலவீனத்தால் அல்லது அலட்சியம் காரணமாக நீங்கள் இரண்டாவது பாதையில் செல்லத் தொடங்கியிருந்தால், அந்தத் தவறை உணர்ந்த உடனேயே அதிலிருந்து திரும்ப முயலுங்கள். அப்பாதையில் நீங்கள் எவ்வளவு தூரம் சென்றுவிட்டிருந்தாலும் சரியே.

அடுத்து அடிக்கடி உங்களை நீங்களே சுய மதிப்பீடு செய்து கொள்ளுங்கள், உங்கள் கணக்குகளை நீங்களே எண்ணிப் பாருங்கள். எத்தனை சந்தர்ப்பங்களில் உலகம் தன்பால் உங்களை ஈர்ப்பதில் வெற்றி கண்டிருக்கிறது. அதேபோல் எத்தனை சந்தர்ப்பங்களில் மறுமையின் பக்கம் செல்வதில் நீங்கள் வெற்றி பெற்றுள்ளீர்கள் என்பதை நீங்கள் ஆய்வு செய்த வண்ணம் இருங்கள்.

உங்களிடம் மறுமை சிந்தனை எந்த அளவுக்கு இருக்கிறது, அது வளர்கின்றதா? தேய்கிறதா? அதில் எந்த அளவுக்கு குறைபாடு இருக்கிறது போன்ற விபரங்களை அம் மதிப்பீடு துல்லியமாகக் காண்பித்து விடும்.

தொகுப்பு: ஜத்து ஹன்ழலா...



# இஸ்லாத்தின் பார்வையில் வரட்சி

கடுமையான வரட்சியின் காரணமாக ஆறுகள், குளங்கள், நீர்த்தேக்கங்கள் வற்றிப்போய் மனிதர்களும் மிருகங்களும் தாவரங்களும் பல கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளன. வரட்சி ஏற்படுவதற்கான பௌதிக காரணிகளை நாம் மிக இலகுவாக விளங்கிக்கொள்ளலாம். அவற்றுடன் மனிதன் சோதிக்கப்படுவதற்கான ஆன்மீக காரணிகளையும் நாம் அறிந்துகொள்வது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

மனிதன் பல முறைவழிகளில் சோதிக்கப்படுவான். அச்சமயங்களில் அவன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற விடயத்தை இஸ்லாம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

உதாரணமாக 'ஓரளவு பயம், பசி, செல்வம் குறைதல், உயிர் இழப்புகள், பழங்களை இழத்தல் போன்றவற்றால் நாம் நிச்சயமாக உங்களை சோதிப்போம். அப்போது பொறுமையாக அதனை எதிர்கொள்பவருக்கு நன்மாராயணம் கூறுவீராக'

(ஆதாரம்: பகரா 155)

அறுவடையில் குறைவு ஏற்படுவதும் அதன் ஒரு விளைவாக செல்வம் குறைவதும் அதன் காரணமாக உயிரிழப்புகள்கூட ஏற்படலாம் என்பதும் இது பசி, பயம் போன்ற உணர்வுகளை ஏற்படுத்தி விடலாம் என்பதையும் நிகழ்வுகளை பார்க்கின்றபோது நாம் கண்டடைய முடியும்.

வரட்சி என்பது நீருடன் தொடர்பான ஒரு சோதனை. மனிதன் வாழ்வதற்கு நீர் ஒரு அடிப்படைத் தேவையாகும். 'நாம் உயிருள்ள அனைத்தையும் நீரிலிருந்து ஆக்கினோம்' (ஆதாரம்: அன்பியா 30) நீர் என்பது மனிதர்களையும் தாவரங்களையும் விலங்குகளையும் உயிர்ப்பிக்க கூடியது. நீரினால் ஏற்படும் பசுமை மனித உள்ளத்துக்கு அமைதியை ஏற்படுத்துகிறது. பிரதான உணவுத்தேவையை பூரணப்படுத்துகிறது. மனித உள்ளத்தில் (ஈரத்தை) அன்பை ஏற்படுத்துகிறது. நீரற்ற பாலைச்சூழல் எத்துணை கடுமையானது, கஷ்டமானது என்பதனை நாம் சிந்திக்க வேண்டும். எனவேதான் இஸ்லாம் நீர்வளத்தை பாதுகாக்குமாறும் அது மாசடையாமல் பேணிக்கொள்ளுமாறும் கட்டளையிடுகின்றது.

வரட்சி ஏற்படுவதற்கு பல காரணங்களை குறிப்பிடுவார்கள். அவற்றில் சில பௌதிக காரணங்களாகும். மனிதன் காட்டை அழிப்பதும் மரங்களை வெட்டுவதும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சு இரசாயனங்கள் மூலமும் சூழல் கடுமையாக பாதிக்கின்றது. இது மழைவீழ்ச்சியின் அளவை பெரிதும் பாதிக்கின்றது. எமக்கு ஓரளவு புரிந்துகொள்ள முடியுமான ஒரு விடயமே இது. இதனை அல்லாஹ் 'மனிதர்களது கரங்கள் தேடிக்கொண்ட தீச்செயல்கள் காரணத்தினால் கடலிலும் கரையிலும் அழிவுகளும் நாசமும் குழப்பமும் தோன்றின. (ஆதாரம்: ரூம் 41) என்று குறிப்பிடுகின்றான்.

இவ்வசனத்தை விளக்கவந்த இமாம் ஆலூசி (ரஹ்) தனது 'ரூஹுல் பயான்' என்ற நூலில் 'கடலிலும் கரையிலும் ஏற்படும் பஸாத் (அழிவுகள்) என்பது வரட்சி, அதிக மரணங்கள், நீரில் மூழ்கி அழிதல், தீப்பற்றி எறிதல் போன்ற அருளை போக்கிவிடக்கூடிய விடயங்கள் அதிகரிப்பது' என்கிறார்.

(பாகம் 21 – பக்கம் 47)

'தரையில் ஏற்படும் அழிவு என்பது தரையின் பயன்களை இழக்கச் செய்து தீங்குகள் ஏற்படும் நிலையை குறிக்கிறது. குறிப்பாக சொன்னால் விவசாயம், பழவகைகள், புற்பூண்டுகள் அழிந்துபோவதையும் பயன்தரக்கூடிய உயிரினங்கள் அழிவது, விலங்குகளும் பறவைகளும் இடம்பெயர்வது, தொற்று நோய்கள் பரவுவது போன்றவற்றை குறிப்பதாகவும் கடலில் ஏற்படும் அழிவு என்பது, மீன்கள், முத்துக்கள் போன்ற கடலிலிருந்து கிடைக்கும் பயன்கள் இல்லாது போவதனை குறிக்கிறது' என்று இமாம் தாஹிர் இப்னு ஆஷூர் (ரஹ்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள். உண்மையில் மழை தடைப்படுவதற்கான காரணங்கள் மனிதர்களது கரங்கள் செய்தவைகளே. அதன் விளைவுகளையே நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

'அவர்கள் அல்லாஹ் காட்டித்தந்த பாதையில் சீராக இருந்திருந்தால் நிச்சயமாக நாம் அவர்களுக்கு மிக அதிகமாக தண்ணீரைக் கொடுத்திருப்போம்' (ஆதாரம்: ஜின் 16). இங்கு அல்லாஹ் காட்டித்தந்த வழி என்பது உலகிலே மரங்களை வெட்டுவது அல்ல. மாற்றமாக மரங்களை நடுவதாகும். இது வளங்களைப் பாதுகாக்கின்ற மனித ஆரோக்கியத்தை பேணுகின்ற ஒரு செயற்பாடு. சூழலின் சமநிலை பேணி சுற்றுச்சூழலை பாதுகாக்கின்ற ஒரு விடயம். இதனை 'இமாரத்' என்று அழைப்பார்கள். இது சூழலை பாதிக்கச் செய்கின்ற ஒரு முறைமையன்று. மாற்றமாக நிலத்தை வளப்படுத்துவதுடன், பயன்படுத்துவதுடன் தொடர்பான ஒரு பணியாகும்.

'ஒரு கிராமத்தவர்கள் ஈமான் (நம்பிக்கை) கொண்டு இறை தொடர்புடன் நடந்துகொள்கிறாரோ அவர்களுக்கு நாம் வானத்தினதும் பூமியினதும் அருளின் வாயில்களை திறந்து கொடுப்போம். (ஆதாரம்: அஃராப் 96) இறை தொடர்போடு நடந்துகொள்பவன் பூமியில் அநியாயங்களை செய்து அழிவு வேலையில் ஈடுபடுகின்றவனாக இருக்க மாட்டான். அவன் உலகில் நிறைவேற்றவேண்டிய பணியை சீராக நிறைவேற்றுபவனாகவே இருப்பான்.

ஒரு முஸ்லிம் ஆன்மீக ரீதியாக விடுகின்ற தவறுகளும் மழை என்ற அருளை தடுத்துவிடுகின்றது. குறிப்பாக ஸகாத் கொடுக்காதிருப்பதும் பாவச்செயல்களில் ஈடுபடுவதும் வானத்திலிருந்து கிடைக்கின்ற அருள்களை தடுக்கின்றன.

'செல்வத்தின் ஸகாத்தை நிறைவேற்றாது தவிர்ந்துகொண்டால் வானத்திலிருந்து ஒரு துளி நீர்கூட தடுக்கப்பட்டுவிடும். கால்நடைகள் இல்லையென்றால் மழையே பொழிய மாட்டாது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: இப்னு மாஜா)

'பாவச் செயல்களையிட்டு உங்களை நான் எச்சரிக்கின்றேன். ஏனெனில் அது அல்லாஹ்வின் கோபத்தை தூண்டிவிடும். (ஆதாரம்: ஸஹீஹுத் தர்கீப்) மழை பொழியாது தடுக்கப்படுவதுகூட இறை கோபத்தின் வெளிப்பாடுதான்.

'குறிப்பிட்ட சிலரின் பாவச் செயல்களால் பொதுவாக அனைவரும் தண்டிக்கப்பட மாட்டார்கள். ஆனால் பாவச்செயல்களை வெளிப்படையாக செய்யும் நிலை தோன்றினால் அங்குள்ள அனைவரும் தண்டனை பெறுவதற்கு அருகதையுள்ளவர்களாக மாறிவிடுகின்றனர் என்று இமாம் அமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) கருதுகின்றார்கள். (ஆதாரம்: முவத்தா)

ஆகவே வரட்சிக்கான காரணங்கள் தெளிவாகின்றன. அதனால் மழை கிடைக்கப்பெறுவதற்கு ஏற்ப வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்வோம்.


அஷ் ஷெய்க் யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

`என்னுடைய சமூகத்தாரே! இவ்வுலக வாழ்க்கையெல்லாம் அற்ப சுகம்தான். அன்றியும் நிச்சயமாக, மறுமையோ அதுதான் (என்றென்றுமிருக்கும்) நிலையான வீடு.

(அல் குர்ஆன் 40:39).

ஆசைகளும், பேராசைகளும் மனிதனை அழிக்கும் உயிர்க்கொல்லியாகும். இதுமட்டுமின்றி பாவங்களின் முதல் காரண கர்த்தாவும் இவையே. அதன் நிழல்களைக் கூட அணுகத் தடை செய்கிறது இஸ்லாம்.

இந்த வாழ்க்கை என்பது பயணம்தான், யாரும் இவ்வுலகில் தங்கி வாழ்பவர் அல்லர். வழிப்போக்கன் போன்று, சில காலம் தங்கி மறுபடியும் மறுமை நோக்கி பயணிப்பதுதான்



# மனித வாழ்வை அறிவோம்!

நம் வாழ்வின் நோக்கமாகும். இம்மை வாழ்வை விட மறுமை வாழ்வு நிலையானது என்கிறது இஸ்லாம். மறுமை வாழ்விற்கான முன்னோட்டம்தான் இவ்வாழ்க்கை. இது, நிரந்தரமற்றது என்பதில் உறுதியாக இருக்கிறது இஸ்லாம். இதனை அல் குர்ஆனும் நபி மொழிகளும் கோடிட்டுக் காட்டுகின்றன.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் **'உமரின் மகனே! நீ காலைப் பொழுதை அடைந்தால் மாலையை எதிர்பார்க்காதே. நீ மாலையை அடைந்தால் காலையை எதிர்பார்க்காதே. நோயின் பாதிப்புகளுக்கு முன்னால் ஆரோக்கியத்தையும், மரணத்தைச் சந்திப்பதற்காக வாழ்வையும் பயன்படுத்திக் கொள். ஓ... அப்துல்லாஹ், நாளை உன் நிலை என்ன என்பது நீ அறியமாட்டாய்'** என்றுள்ளார்கள்.

(ஆதாரம்: திர்மிதி)

உலகத்தின் மையக்கரு என்ன என்பதை இந்நபிமொழி தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இதனை புரிந்து கொண்டோருக்கு அமைதியான நதியில் மிதக்கும் இலை போன்று வாழ்க்கை அமையும். இந்த உலகத்தின் சாராம்சத்தை அறிய முற்படாமல் மன இச்சைக்கு அடிமையானால், அலையில் சிக்கிய படகு போல் நிம்மதியின் கயிறு அறுந்து நிறம் மாறிப்போகும்.

**"அவர்கள் இந்த உலக வாழ்விலிருந்து (அதன்) வெளித் தோற்றத்தையே அறிகிறார்கள் ஆனால் அவர்கள் மறுமையைப் பற்றி அலட்சியமாக இருக்கிறார்கள்".**

(அல் குர்ஆன்: 30:7.)

இந்த உலகம் வெறும் அலங்காரம் என்பது, வாழும் காலத்தில் நமக்கு புலப்படாது. மரணிக்கும் நேரத்தில் முழுமையாகப் புலப்படும். அப்போது அது பயன் தராது.

அறிந்து கொள்ளுங்கள்: **"நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும்; மேலும் (அது) உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதும், பொருள்களையும், சந்ததிகளையும் பெருக்குவதுமேயாகும், (இது) மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும், (அதாவது) அது முளைப்பிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப்படுத்துகிறது. ஆனால், சீக்கிரமே அது உலர்ந்து மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்கின்றீர். பின்னர் அது கூளமாகி விடுகிறது. (உலக வாழ்வும் இத்தகையதே. எனவே உலக வாழ்வில் மயங்கியோருக்கு) மறுமையில் கடுமையான வேதனையுண்டு. (முஃமின்களுக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், அவன் பொருத்தமும் உண்டு ஆகவே, இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர (வேறு) இல்லை''.**

(அல் குர்ஆன் 57:20)

ஜனனம், மரணம் இவை இரண்டிற்கும் மத்தியில் உள்ள பயணமே வாழ்க்கை. தீமையான காரியங்களை விட்டு நம் மனதைத் தூரம் போகச் செய்யவேண்டும். இங்கு எதுவும் நிரந்தரமில்லை என்பதை அறிவதில், இம்மை மற்றும் மறுமையின் சந்தோஷங்கள் தொடர்கின்றன.

அப்துல் ரஹ்மான்...



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. கீழே தரப்பட்ட பாடலை வாசித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடை தருக.**

உலகம் வாழ வேண்டுமென்றால்
உழைக்க வேண்டுமே
உழைப்பு நன்கு வேண்டுமென்றால்
உணவு வேண்டுமே

உணவு உண்ண வேண்டுமென்றால்
பயிர்கள் வேண்டுமே
பயிர்கள் வாழ வேண்டுமென்றால்
மழையும் வேண்டுமே

மழையும் பெய்ய வேண்டுமென்றால்
மரங்கள் வேண்டுமே
மரங்கள் வாழ வேண்டுமென்றால்
மனமும் வேண்டுமே

01. பயிர்கள் வாழ என்ன வேண்டும்? ……………………………

02. மழை பெய்ய வேண்டுமானால் மனிதன் என்ன செய்யக் கூடாது?

……………………………………………

03. இப்பாடலிலுள்ள அஃறிணை, பன்மை பெயர்ச்சொல் ஒன்று தருக.

……………………………………………

04. ஒத்த கருத்து தருக.

i. மரங்கள் - …………………… ii. உணவு - ……………………

iii. உலகம் - …………………… iv. மனம் - ……………………

05. வேண்டுமென்றால் இதனைப் பிரித்தெழுதுக. ……………………

06. பந்தியிலுள்ள இடப்பெயர் ஒன்றினைத் தருக. ……………………

**II. பொருத்தமான சொல்லை தெரிவு செய்து எழுதுக.**

07. அக்கால மன்னர்கள் ………………… (மரம் / மறம்) மிக்கவர்களாக திகழ்ந்தனர்.

08. பறவைகள் வானில் ………………… (இரை / இறை) தேடிப் பறந்தன.

09. அவன் உயரமான ………………… (வறை / வரை) யில் ஏறினான்.

**III. பின்வரும் ஆண்பால் வாக்கியங்களை பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.**

10. குறவன் மாலை கட்டினான். ……………………………

11. வீரன் அம்பெய்து எதிரியை வீழ்த்தினான்.

……………………………………………

12. பேரன் தாத்தாவிடம் கதை கேட்டான்.

……………………………………………

**IV. கீழ்வரும் உவமைத் தொடர்களின் கருத்தினை எழுதுக.**

13. அடியற்ற மரம் போல - ……………………………

14. சூரியனைக் கண்ட தாமரை போல - ……………………………

**அகரவரிசைப்படுத்துக.**

15. இரும்பு, ஊசி, ஐந்து, ஆமை, எறும்பு

……………………………………………

16. பின்வருவனவற்றின் உள்ளீட்டு மரபுப்பெயர் எழுதுக.

i. பலா - …………………… ii. கற்றாளை - ……………………

iii. மாதுளை - …………………… iv. மா - ……………………

17. பின்வரும் கூற்றுக்களின் தனிச்சொல்லை எழுதுக.

i. பத்துவருட காலப்பகுதி - ……………………………

ii. குதிரைகளை கட்டுமிடம் - ……………………………

18. சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

i. மல்லிகைப் பூ சினைப் பெயராகும் (……)

ii. சதுரம் பண்புப் பெயராகும். (…….)

19. பின்வரும் ஆங்கில சொற்களின் இடைவெளிகளை நிரப்புக.


i. Cu….board ii. T….levision iii. Hu….dred iv. Wo….ld

20. பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

i. அபி செல்லங் கரமு - ……………………………

ii. மல ரது பஹுடய் - ……………………………

**V.**

21. 

இவ்வுருவிலுள்ள செங்கோணங்கள் எத்தனை?

……………………………

22. இக்கடிகாரம் காட்டுவது நள்ளிரவு நேரமெனில் இதனை நியம நேரமாக எழுதிக் காட்டுக.



……………………………

**கீழே கொடுக்கப்பட்டுள்ள விலைப்பட்டியலை நன்கு அவதானித்து அதன் கீழ் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

**விலைப்பட்டியல்**

| பொருள் | நிறை | விலை (ரூபாய்) |
|---|---|---|
| 1. முட்டைகள் | 10 | 610.00 |
| 2. அரிசி | 2 kg | 620.00 |
| 3. சீனி | 250 g | 80.00 |
| 4. மா | 500 g | 120.00 |

23. 5 kg அரிசியும் 2 முட்டைகளும் எவ்வளவு ரூபாய்?


……………………………………………

24. 1 ½ kg மாவும் 500g சீனியும் எவ்வளவு ரூபாய்?

……………………………………………

25. சபரி கடைக்காரரிடம் ரூபாய் 1000.00 கொடுத்து 5 முட்டைகளும் 1 kg அரிசியும் வாங்கினான் எனின் அவன் மிகுதியாக பெறும் பணம் எவ்வளவு?

……………………………………………

26. 

படத்தில் காட்டியுள்ளவாறு கூம்பு ஒன்றினை வெட்டினால் பெறப்படும் வெட்டு முகத்தின் தோற்றம் என்ன?


……………………………

27. 9901 இவ்வெண்ணை எண் பெயராக எழுதினால்

……………………………………………

28. X = 7, Y = 8, Z = 0 இதன் படி Y + X + Z இன் பெறுமானம் யாது?

……………………………………………

29. 

இவ்வுருவிலுள்ள சிறிய முக்கோணத்தின் ஒரு பக்க நீளம் 4cm எனில் பெரிய முக்கோணத்தின் சுற்றளவு யாது?

……………………………

**VI. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. நாக மரப்பூவின் இதழ்களின் எண்ணிக்கை?
i. 3 ii. 4 iii. 5

31. தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும் சந்தர்ப்பமானது?
i. துக்க தினம் ii. தேசிய துக்க தினம் iii. சுதந்திர தினம்

32. பிராணிகளிடமிருந்து பெறப்படும் பெறுமதி வாய்ந்த பொருளானது?
i. இறைச்சி ii. பால் iii. தேன்

33. சந்திரன் பூமியை ஒரு முறை வலம் வர எடுக்கும் கால அளவு?
i. 28 நாட்கள் ii. 24 மணித்தியாலம் iii. 365 நாட்கள்

34. நிறைய வித்துக்களை கொண்டிராத பழவகை?
i. மாதுளை ii. மாம்பழம் iii. கொய்யா

35. இலங்கைக்கேயுரித்தான நகருயிரி?
i. கொம்பு ஓணான் ii. பல்லி iii. பாம்பு

36. இலைக்கஞ்சி தயாரிக்க பொருத்தமான இலை வகைகளைக் கொண்ட கூட்டம்
i. ஆமணக்கு, சாத்தாவாரி, வல்லாரை
ii. வல்லாரை, முடக்கொத்தான், சாத்தாவாரி
iii. வல்லாரை, தூதுவளை, வில்வம் இலை

37. வரண்ட பிரதேசத்தில் செழித்து வளரும் தாவர வகையானது
i. கள்ளி, கற்றாளை ii. கள்ளி, ரோஜா iii. கற்றாளை, தூதுவளை

38. பிரதான வீதிகளை கடக்கும் வேளையில் எந்த நிற மனித உரு காட்சி தருகின்ற போது வீதியைக் கடக்க வேண்டும்?
i. பச்சை ii. மஞ்சள் iii. சிவப்பு

39. நாய் தனது வியர்வையை வெளியேற்றும் உறுப்பானது?
i. தோல் ii. மூக்கு iii. நாக்கு

40. இலைகளின் ஓரத்தில் பற்கள் போன்ற அமைப்பை கொண்ட தாவரம்?
i. கறிவேப்பிலை ii. புளி iii. வேப்பிலை

(10ஆம் பக்கம் பார்க்க)

(09 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

41. சூரிய ஒளியினால் உடலுக்கு கிடைக்கும் விற்றமின் எது?
i. விற்றமின் A ii. விற்றமின் C iii. விற்றமின் D

42. எதிரிகளிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள தன் உடலை பந்துபோல் சுருட்டிக் கொள்ளும் பிராணி?
i. ஆமை ii. நத்தை iii. ஆமடில்லா

43. எமது நாட்டிலுள்ள உலக மரபுரிமையாக போற்றிப் பாதுகாக்கும் ஒரு இடமானது?
i. சிங்கராஜவனம் ii. தாதுகோபம் iii. தாமரைக் கோபுரம்

44. சேனைப்பயிர் செய்ய தொடங்கும் போது தெரிவு செய்யப்பட்ட இடத்தில் முதலாவதாக செய்ய வேண்டிய விடயமானது?
i. எரியூட்டல் ii. பிராணிகளை அப்புறப்படுத்துதல்
iii. விதைத்தல்

45. பயிருக்கு பாதகமான பிராணியாக அமையாதது?
i. செண்பகம் ii. நத்தை iii. எலி

46. நள்ளிரவில் மலரும் பூவானது
i. மல்லிகை ii. கடும்புல் iii. நடுநிசி பூ

47. 
இக்குறியீடு உணர்த்துவது
i. பாதுகாப்பான புகையிரதக் கடவை
ii. இங்கே கடக்கவும்
iii. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை

48. பின்வருவனவற்றுள் இலத்திரனியல் ஊடகமாக விளங்குவது
i. பத்திரிகை ii. கணினி iii. கடிதம்

49. அதிவேகப் பாதையில் பயணிக்கும் போது அவசர தேவைக்காக உடனடியாக அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கமானது
i. 1969 ii. 1959 iii. 1939

50. பின்வருவனவற்றுள் கால்களற்ற பிராணி அல்லாதது
i. அட்டை ii. நத்தை iii. மரவட்டை

51. பூக்காத தாவரங்களைக் கொண்ட தொகுதியானது?
i. பனை, மடுப்பனை ii. மடுப்பனை, பன்னம் iii. பன்னம், பலா

52. இரத்தினக்கல் அகழ்வின் போது பயன்படுத்தப்படும் கூடையின் பெயரானது?
i. கரப்பு ii. தீதாள் iii. நாம்புவ

53. நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் புகைப் படத்தினைக் கொண்ட இலங்கை நாணயத்தாளானது?
i. ரூபாய் 100 ii. ரூபாய் 500 iii. ரூபாய் 1000

54. இலங்கையின் முதல் தலை நகரமாக விளங்கிய வரலாற்றுப் பிரசித்திப்பெற்ற நகரமானது?
i. கொழும்பு ii. கண்டி iii. அனுராதபுரம்

55. சூரியக்கிரகணம் தோன்றும் போது பூமி, சூரியன், சந்திரன் ஆகியவை காணப்படும் ஒழுங்கானது?
i. சூரியன், பூமி, சந்திரன் ii. சூரியன், சந்திரன், பூமி
iii. பூமி, சூரியன், சந்திரன்

56. பின்வருவனவற்றுள் தனிப்பட்ட பாவனைக்குள் அடங்காத பொருட்களைக் கொண்ட தொகுதியானது?
i. கைக்குட்டை, முகக்கவசம், மூக்குக் கண்ணாடி
ii. முகக்கவசம், உடை, பற்தூரிகை
iii. குடை, தொலைபேசி, கண்ணாடி

57. தானே ஒலி எழுப்பி தனக்கு தேவையான உணவை அதன்மூலம் தெரிந்தெடுத்துக் கொள்ளும் பிராணியானது?
i. வௌவால் ii. ஆந்தை iii. கழுகு

58. காந்தத்தால் கவரப்படாத பொருள்?
i. ஆணி ii. குண்டூசி iii. உலோகம்

59. பரம்பரையாக கடத்தப்படக்கூடிய நோயானது?
i. டெங்கு ii. நீரிழிவு iii. காசநோய்

60. “நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தபோது” என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களைக் கொண்டிருப்பதோடு எழுவாய், பயனிலை தொடர்பு சரியாகப் பேணப்பட வேண்டும்.

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

## கடந்த வார (25.08.2023) வினாத்தாள் | இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 11. 2 | 21. 2 | 31. 1 |
| 2. 1 | 12. 1 | 22. 3 | 32. 2 |
| 3. 3 | 13. 3 | 23. 1 | 33. 3 |
| 4. 3 | 14. 1 | 24. 2 | 34. 1 |
| 5. 1 | 15. 2 | 25. 1 | 35. 1 |
| 6. 1 | 16. 2 | 26. 2 | 36. 3 |
| 7. 2 | 17. 2 | 27. 1 | 37. 2 |
| 8. 3 | 18. 2 | 28. 2 | 38. 3 |
| 9. 2 | 19. 3 | 29. 2 | 39. 3 |
| 10. 1 | 20. 1 | 30. 3 | 40. 1 |

# கிழக்கிலுள்ள சிவில் பாதுகாப்பு ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்க நடவடிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, கிழக்கு மாகாணத்திலுள்ள சிவில் பாதுகாப்பு ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களை நிரந்தரமாக ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸாரப் தெரிவித்தார்.

சிவில் பாதுகாப்பு ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களை நிரந்தரமாக ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவது தொடர்பாக, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் செவ்வாய்க் கிழமை (29) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அதற்கான நிதியை பாதுகாப்பு அமைச்சிலிருந்து மாகாண சபைக்கு



பெற்றுத் தரும் பட்சத்தில், சிவில் பாதுகாப்பு ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களை நிரந்தரமாக ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்புச் செய்வதாக ஆளுநர் செந்தில் தொண்டமான் வாக்குறுதியளித்துள்ளதாக தெரிவித்தார்.

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு அமைச்சினூடாக சிவில் பாதுகாப்பு ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதாகவும், வட மாணத்தைச் சேர்ந்தவர்கள் நிரந்தரமாக ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அரச நியமனங்கள் வழங்குவது மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், சிவில் பாதுகாப்பு ஆசிரியர் சேவை உத்தியோகத்தர்களின் சம்பளம் பாதுகாப்பு அமைச்சினூடாக செலுத்தப்படுவதால், அதனை மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு வார்த்தை நடாத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்

## காத்தான்குடி பிரதேசத்தில் சுற்றுலா குழு கூட்டம்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

பிரதேச சுற்றுலா குழுவை உருவாக்குவதற்கான கூட்டம் செவ்வாய்க்கிழமை (29) காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

புதிய சுற்றுலா தளங்களை அடையாளம் கண்டு அவை தொடர்பாக விடயங்களை சேகரிக்கும் நடவடிக்கைகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் சுற்றுலா அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைவாக, சுற்றுலா சார்ந்த அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்காக, பிரதேச மட்டத்தில் காணப்படும் வளங்கள் மற்றும் முன்னேற்றக் கூடிய இடங்கள் என்பவற்றை அடையாளம் கண்டு, அவற்றை மையப்படுத்திய சுற்றுலா முன்னேற்றத்தை பிரதேச மட்டத்தில் முன்னெடுக்கும் நோக்கில், இந்த கூட்டம் இடம்பெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில், தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர்களான ஏ.எம்.எம்.முஸ்தபா, கே.எம். முபாரக், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம். முகம்மட் சிறாஜ், காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி சில்மியா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் உட்பட சிவில் சமூக பிரதி நிதிகள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# முன்னாள் அமைச்சர் மயோன் முஸ்தபாவுக்கு துஆப் பிரார்த்தனை

முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் எம்.எம். முஸ்தபா (மயோன்) மரணமானதையொட்டி இன்று (01) வெள்ளிக்கிழமை, சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகையை தொடர்ந்து அன்னாரின் மறுமை வாழ்வின் ஈடேற்றத்திற்காக துஆப் பிரார்த்தனை நடத்துவதற்கு சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் செயலாளர் ஐ.எல்.எம். மன்சூரினால் வெளியிடப்பட்டுள்ள வேண்டுகோளிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.அந்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசத்தில் உள்ள அனைத்து ஜும்ஆ பள்ளிவாசல்களிலும் இன்று ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து துஆப் பிரார்த்தனை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. துஆப் பிரார்த்தனையில் அனைத்து ஜமாஅத்தினரும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட நாணல்சேனை கிராமிய வீதி, புனரமைக்கப்படாது கற்களுடன் காணப்படுவதை படத்தில் காணலாம். (படம்: மூதூர் தினகரன் நிருபர்)

# சம்மாந்துறை அல்-மர் ஜானில் தமிழ் மொழித் தின போட்டி



**காரைதீவு குறூப் நிருபர்**

அகில இலங்கை தமிழ் மொழித் தினத்திற்கான கல்முனை கல்வி மாவட்ட தமிழ் மொழித் தினப் போட்டி நேற்று (31) வியாழக்கிழமை சம்மாந்துறை அல்மர் ஜான் முஸ்லிம் கல்லூரியில் நடைபெற்றது.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, மற்றும் திருக்கோவில் ஆகிய கல்வி வலயங்களின் போட்டியாளர்கள் கலந்து கொள்ளும் இம் மாவட்ட மட்ட போட்டி நிகழ்வின் துவக்க விழா, சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் கலந்து சிறப்பித்தார்.

இன்னும் ஒரு மாதத்தில் ஓய்வு பெற இருக்கும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியத்தை, வலயக் கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# அக்கரைப்பற்று மாநகர சபைக்கு சான்றிதழ்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் குழுவினால் இலங்கையிலுள்ள அனைத்து, அரச நிறுவனங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில், அக்கரைப்பற்று மாநகர சபைக்கு திருப்திகரமான செயற்பாடுகளுக்கான சான்றிதழ் செவ்வாய்க்கிழமை (29) இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தலைமையில் பாராளுமன்றத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணத்தைச் சேர்ந்த நிறுவனங்கள் ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக இணைந்திருந்தது.

2020ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகளின் அடிப்படையில் 2021/2022 காலப்பகுதிகளில் நடாத்தப்பட்ட மேற்படி மதிப்பீடுகளின் போது பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்பட்டதுடன், இந் நிகழ்வில் கிழக்கு மாகாணத்திலிருந்து இச் சான்றிதழைப் பெற்றுக் கொண்ட ஒரேயொரு உள்ளூராட்சி மன்றம் அக்கரைப்பற்று மாநகர சபை மாத்திரமேயாகும் என்பதும் விசேட அம்சமாகும்.




# அக்குறணையில் டி.பி. ஜாயா ஞாபகார்த்த வருட குத்துச்சண்டைப் போட்டிகள்



**(அக்குறணை குறுப் நிருபர்)**

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான டி.பி. ஜாயா ஞாபகார்த்த வருட குத்துச்சண்டைப் போட்டிகள் கண்டி, அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் 52 ஆவது தடவையாக நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் இரண்டாம் திகதி (2.9.2023) முதல் 6 திகதி வரை நடைபெறும். இதுதொடர்பான ஊடக சந்திப்பொன்று அஸ்ஹர் தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.எப்.எம். சிராஜ் தலைமையில் நேற்று (31) நடைபெற்றது.

இப்போட்டியை கடந்த 52 வருட வரலாற்றில் முதன் முறையாக ஒரு முஸ்லிம் பாடசாலை ஏற்பாடு செய்திருப்பது முக்கிய அம்சமாகும். அகில இலங்கை பாடசாலைகள் குத்துச்சண்டை சமாஜத்தின் அனுசரணையுடன் போட்டிகள் நடைபெறவுள்ளன. மொத்தம் 296 போட்டியாளர்கள் இதில் பங்கு கொள்வதாகவும் தெரிவித்தார். சகல ஏற்பாடுகளையும் பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இதுதொடர்பில் இலங்கைப் பாடசாலைகள் குத்துச்சண்டை சங்கத்தின் உபதலைவரும் கண்டி மாவட்ட செயலாளருமான எஸ்.சீ. பண்டார தெரிவிக்கையில்,

இப்போட்டியில் 24 பிரிவுகளில் வீரர்கள், போட்டியிடுவதாகவும் அதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சுத்தமான குடிநீர் இன்றி அவதிப்படும் குடா மஸ்கெலியா மக்கள்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

குடா மஸ்கெலியா பிரதேசத்தில் சுத்தமான குடிநீர் வசதிகளின்றி அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்துவருகின்றனர்.

சுமார் 150 வருடங்களுக்கு முன்னர் இக்கிராமத்தில் சுமார் 60 குடும்பங்கள் குடியேறியுள்ளனர். இவர்கள் அப்பகுதிலுள்ள ஊற்று நீரையே பயன்படுத்திவந்துள்ளனர். எனினும் கடந்த சில மாதங்களாக நிலவும் கடும் வரட்சி காரணமாக இப்பகுதியில் பெரும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதன்காரணமாக இப்பகுதிலுள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர். மஸ்கெலியா தேசிய நீர் வடிகால் திணைக்களத்தின் மூலம் நான்கு வருடங்களுக்கு முன்னர் குழாய்கள் பொருத்தப்பட்ட போதிலும் அப்பகுதிக்கு தேசிய நீர் வடிகால் திணைக்களம் மூலம் குடிநீர் வழங்கப்படவில்லையென புகார் தெரிவிக்கின்றனர். எனவே இதுதொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் உடன் கவனம் செலுத்தி இக்கிராமத்திலுள்ள குடியிருப்பாளர்களுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்தி தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





# பெரஹராவுக்கு வந்த யானையால் புராதன அம்பலத்துக்கு சேதம்

**(அக்குறணை குறுப் நிருபர்)**

ஸ்ரீ தலதா மாளிகைக்கும், ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்துக்கும் அண்மையிலுள்ள புராதன அம்பலமொன்றை பெரஹராவில் பங்குகொள்ள வந்த யானையொன்று உடைத்து சேதமாக்கியுள்ளது. 'மெனிக்கின்னே மத்து' என்ற பெயரால் அழைக்கப்படும் யானையே இவ்வாறு இதனை உடைத்து சேதமாக்கியுள்ளது. இது பழமைவாய்ந்த யானை என்பதால் அதற்கு புராதன பெறுமதியொன்று உள்ளதாக கூறப்படுகிறது. இதனைப் பார்வையிட்ட ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே மகேந்திர ரத்வத்தை அதனை புனரமைத்துத் தருவதாக உறுதியளித்துள்ளதாக ஸ்ரீ தலதா மாளிகை நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் நுவரெலியாவுக்கு விஜயம்



இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீபன்ஸ் நுவரெலியாவுக்கான விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார். இதன்போது நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் அவுஸ்திரேலிய தூதுவரை சந்தித்து மலையக விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடியதோடு உயர்ஸ்தானிகர் சீதையம்மன் ஆலயத்துக்கு சென்று பூஜை வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

(படம்; நுவரெலியா தினகரன் நிருபர்)

# பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு பெரண்டினா உதவிக்கரம்



**(தலவாக்கலை குறுப் நிருபர்)**

நுவரெலியா மாவட்டத்தில் பெருந்தோட்ட மற்றும் கிராமப்புறங்களில் பெரண்டினா நிறுவனம் பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில்,கடந்த வருடம் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு பெரண்டினா நிறுவனத்தின் 'லைப் லைன்' வேலைத்திட்டத்தின் மூலம் ரூ.3,500.00 பெறுமதியான முத்திரைகள் நாட்டிலுள்ள சுமார் 80,000 வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றனர். இதன் மொத்த பெறுமதி 280 மில்லியன்களாகும்.

அந்தவகையில் பெரண்டினா நுண்நிதி நிறுவனத்தின் ஹற்றன் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட, முத்திரைகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மஸ்கெலியா அம்பாள்ஸ் திருமண மண்டபத்தில் நுண்நிதி அதிகாரி சுரேன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதிகளாக, பெரண்டினா அபிவிருத்தி சேவைகள் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் சிவகாந்த், பெரண்டினா நுண்நிதி நிறுவனத்தின் கிளை முகாமையாளர் பிரசன்னா, சமயத் தலைவர்கள், அம்பகமுவ பிரதேச செயலகத்தின் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் மோகனராணி, சென்ஜோசப் கல்லூரி அதிபர் திரு. பரமேஸ்வரன், பிரதேச கிராமசேவகர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர். மஸ்கெலியா, பிரவுண்லோ, சீத்தகங்குல, குடா மஸ்கெலியா உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து 100 மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இந்த முத்திரைகள் வழங்கப்பட்டன. மேலும், முத்திரையை அருகிலுள்ள தபால் அலுவலகங்களில் சமர்ப்பித்து 7 நாட்களுக்குள் பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.





இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் கண்டி மாவட்ட பொதுக் கூட்டம் கண்டி பொல்கொல்லை கூட்டுறவு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது சங்கத்தின் தலைவர் நிசாந்த வன்னியராச்சி ,பொதுச் செயலாளர் ரொபட் பிரான்சீஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்

(படம்; நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)





பதுளை மாநகர் அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருஷாபிஷேக அலங்கார உற்சவத் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது சுவாமி தேரில் வெளிவீதி உலா வருவதையும், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் கலந்துகொண்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் பதுளை தினகரன் நிருபர்)


## சொப்ட்லொஜிக் பினான்ஸ் பி.எல்.சி. இன் 15வது வருடாந்த பொதுக் கூட்ட அறிவிப்பு

சொப்ட்லொஜிக் பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்தின் 2023 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டுக்கான 15வது வருடாந்தப் பொதுக் கூட்டம், 2023 செப்டம்பர் 27 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு இல.13, டி பொன்சேகா பிளேஸ், கொழும்பு 4 என்ற முகவரியில் அமைந்துள்ள செவிப்புல மற்றும் கட்புல வழிவரு சேவைமுறை மூலம் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மேலும், 2023 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த, சொப்ட்லொஜிக் பினான்ஸ் பி.எல்.சி. யின் நிதியாண்டுக்கான வருடாந்த அறிக்கையானது, நிறுவனத்தின் பிரதான இணையத் தளத்திலும் **(https://softlogicfinance.lk)** மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலைய **(www.cse.lk)** இணையத் தளத்திலும், 7.5 (b) ஆம் இலக்க, கொழும்பு பங்குச்சந்தைக் கட்டுப்பாடுகளுக்கு அமைய பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**குறிப்பு:** மேற்குறிப்பிடப்பட்ட வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், பங்கேற்க விரும்பும் எந்தவொரு பங்குதாரரும் / பிரதிநிதியும், குறிப்பிடப்பட்ட இணையத் தளங்களில் வழங்கப்பட்டுள்ள பதிவு செய்யும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து, சமர்ப்பிப்பதன் மூலம், தமது பங்கேற்பினை தயவுசெய்து உறுதிப்படுத்திக் கொள்ளவும். விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்கையில், பின்பற்ற வேண்டிய விடயங்கள் பற்றி பங்குதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபங்களுக்கு அமைய அதனைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கூட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றுவதற்கு, எந்தவொரு பங்குதாரருக்கோ அல்லது பிரதிநிதிக்கோ வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது. நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் முக்கிய பிரமுகர்கள் மாத்திரம் இங்கு நேரடியாக சமூகமளித்திப்பார்கள்.

**சொப்ட்லொஜிக் பினான்ஸ் பி.எல்.சி.**
**குழுமத்தின் உத்தரவின்படி**
(ஒப்பம்)
**சொப்ட்லொஜிக் கோர்ப்பரேட் சேர்வீசெஸ் (பிரைவட்) லிமிட்டட் கம்பனி செயலாளர்கள்**
2023 ஆகஸ்ட் 28 ஆம் திகதியன்று
கொழும்பு





# நகர்வலம்



# யானை - மனித மோதலை தடுக்க புதிய வேலைத்திட்டம் ஆரம்பம்

## அநுராதபுரம் மாவட்டத்தில் சுமார் 270 கி.மீட்டர் மின்வேலி அமைக்க திட்டம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்



அநுராதபுரம் மாவட்டத்தில் தொடரும் யானை மனித மோதலினை தடுப்பதற்காக அரசாங்கம் விசேட வேலைத்திட்டமொன்றினை ஆரம்பித்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் அநுராதபுரம் வலய உதவிப்பணிப்பாளர் டப்ளியூ.எம்.கே. சந்ரத்ன தெரிவித்தார்.

அதற்கமைவாக மாவட்டத்தில் புதிதாக 270 கிலோமீற்றர் நீளமுடைய புதிய மின் வேலியினை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் அதிகம் காணப்படும் இனங்காணப்பட்ட பகுதிகளுக்கே முன்னுரிமை அடிப்படையில் மின்வேலி அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் மையப்படுத்தி மேற்படி வேலைத்திட்டம் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் மூலம் தொடரும் யானை மனித மோதலினை ஓரளவு கட்டுப்படுத்த முடியுமென நம்பப்படுகின்றது. இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அநுராதபுரம் மாவட்டத்தில் பத்துக்கும் மேற்பட்டோர் காட்டு யானை தாக்குதலில் பலியாகியுள்ளதாக தரவுகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. அதிக யானை தாக்குதல் சம்பவங்கள் தமுத்தேகம மற்றும் திறப்பனை மஹவிலச்சிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே பதிவாகியுள்ளமை மேலும் தெரியவந்துள்ளது.

### அநுராதபுரத்திலுள்ள

# ரஜரட்ட ஒலிபரப்பு சேவை நிலையத்திற்கு ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன விஜயம்

திறப்பனை தினகரன் அ .புரம் மேற்கு தினகரன் நிருபர்கள்



அநுராதபுரத்தில் அமைந்துள்ள இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ரஜரட்ட சேவையின் பிராந்திய ஒலிபரப்பு நிலையத்திற்கு ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நேற்று முன்தினம் (30) விஜயம் செய்தார். இதன்போது, ரஜரட்ட சேவைக் கட்டுப்பாட்டாளர் பிரசன்ன திஸாநாயக்கவுடன் வானொலி நிலையத்தின் தற்போதைய செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் ரஜரட்ட சேவையை மேலும் திறம்பட அமுல்படுத்த உரிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் என தெரிவித்தார். இந்நிகழ்வில் அமைச்சருடன் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் எச்.பி. சேமசிங்கவும் இதில் கலந்துகொண்டார். பிரான்ஸ் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரஜரட்ட சேவை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கலை கூடத்தையும் இதன் போது அமைச்சர் பார்வையிட்டார். கலை கூடத்தின் எஞ்சியுள்ள பணிகளை நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை வழங்குமாறு ரஜரட்ட சேவை கட்டுப்பாட்டாளர் பிரசன்ன திஸாநாயக்க, அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

### பிரான்ஸ் நாட்டின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்படும் கலை கூடத்தையும் பார்வையிட்டார்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும், கொழும்பு மாவட்ட அமைப்பாளருமான மர்ஹூம் பாயிஸ் அவர்களின் நினைவாக, துஆ பிரார்த்தனையும் நினைவேந்தல் நிகழ்வும் நேற்று முன்தினம் புதன்கிழமை (30) கொழும்பு, சேர் ராசிக் பரீத் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. பாடசாலை சமூகத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அர்ஷாட் நிசாம்டீன் மற்றும் சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டுள்ளதையும் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# இராணுவ சிப்பாய் சடலமாக மீட்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

பதவிய கோன்வெவ பகுதி குறுக்கு வீதி ஒன்றில் கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ள இராணுவ சிப்பாய் ஒருவரின் சடலத்தை பொலிஸார் (30) கண்டுபிடித்துள்ளதாக தெரிவித்தனர்.

போகஹவெவ வெஹெரதென்ன பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். கொலை செய்யப்பட்டிருந்த இடத்திற்கு சற்று தொலைவிலிருந்த முச்சக்கர வண்டி ஒன்றையும் பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வாகன விபத்தில் ஊனமுற்ற இவர், ஊன்றுகோலுடன் திரிபவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மோ. சைக்கிள் திருட்டுச் சம்பவம்; ஒருவர் கைது

## நொச்சியாகம பகுதியில் சம்பவம்

அநுராதபுரம் தினகரன் நிருபர்

நொச்சியாகம பகுதியில் இடம்பெற்ற பல்வேறு மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை நொச்சியாகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய 30ஆம் திகதி மாலை நொச்சியாகம சமகிபுர பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 24 வயதுடைய சமகிபுர நொச்சியாகம பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது. சந்தேகநபரிடம் பொலிஸார் நடத்திய மேலதிக விசாரணைகளின் போது மேலும் பல தகவல்கள் கிடைத்துள்ளதுடன் ஒயாமடுவ மற்றும் காலதிவுள்வெவ பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடனும் சந்தேக நபரே தொடர்புபட்டுள்ளார் என்பது மேலும் தெரியவந்துள்ளதுடன் அடகு வைக்கும் மத்திய நிலையமொன்றில் அடகுவைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றையும் இலக்கத்தகடுகள் பலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# பேர வாவியை தூய்மைப்படுத்தும் திட்டம் தனியார் நிறுவனத்தினால் முன்னெடுப்பு

கொழும்பு 2 இலுள்ள பேர வாவியை தூய்மைப்படுத்துதல், அதன் துர்நாற்றத்தை அகற்றுதல் மற்றும் நீரின் தரத்தை பேணி பராமரித்தல் ஆகிய பணிகளை தனியார் நிறுவனமொன்று மேற்கொள்ளவுள்ளது.

இத்திட்டத்திற்காக Groepo Pte Ltd நிறுவனம் பரிந்துரைந்துரைத்துள்ள அதன் உள்ளூர் நிறுவனமான Groepo Lanka Bioscience (Pvt) Ltd திட்டத்தை முன்னெடுக்கவிருக்கிறது.

இத்திட்டமானது பேர வாவியை சுத்தப்படுத்தி, தண்ணீரில் இருந்து வெளியேறும் துர்நாற்றத்தை அகற்றி, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

குறித்த நிறுவனம் உயர் தொழில்நுட்ப கருவிகள் மற்றும் விஞ்ஞான முறைமைகளைப் பயன்படுத்தி பேர வாவியைச் சுத்தம் செய்யும் என்று பிரதமர் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வேலைத்திட்டத்திற்கு இணையாக பேரவாவி கழிவுநீர் மற்றும் கழிவுகள் வெளியேற்றப்படும் வழிகளை கண்டறிந்து அவற்றுக்கான மாற்று முறைகளை அறிமுகப்படுத்துமாறு அமைச்சர்கள் அமைச்சரவை சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது. இந்த முன்னோடித் திட்டத்தின் வெற்றியைப் பொறுத்து, சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் 20 ஆண்டுகளுக்கு திட்டத்தைத் தொடரும் திறனைப் பெற்றுக்கொள்ள முடியும். அக்காலப்பகுதியில் கண்காணிப்பு மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை Groepo Lanka Bioscience (Pvt) Ltd நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை நில அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், இலங்கை துறைமுக அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை காலநிலை நிதி (தனியார்) நிறுவனம் மற்றும் கொழும்பு மாநகர சபை ஆகியவற்றின் உறுப்பினர்களை உள்ளடக்கிய இத்திட்டத்தை கண்காணிப்பதற்கான வழிகாட்டல் குழுவொன்று பெயரிடப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனங்களால் பரிந்துரைக்கப்படும் பிரதிநிதிகள், திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் வசதிகளை வழங்க உள்ளனர். இந்நிறுவனம் எதிர்காலத்தில் இலங்கையில் விசேட ஆய்வுகூடத்தை அமைப்பதற்கு முதலீடு செய்யும்.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் இலங்கையின் முதுபெரும் கலைஞர் கே. ஏ. ஜவாஹர்



தலைநகர் தந்த தன்னிகரில்லா கலைஞர்கள் வரிசையில் கலையுலகில் தன் தனித்துவமான நடிப்பாற்றலால் வானொலி, மேடை, சினிமா, சின்னத்திரைகளில் தனக்கென சிம்மாசனம் அமைத்துக் கொண்ட பிரபல கலைஞரே கலாபூஷணம், நடிகமணி கே.ஏ.ஜவாஹர்.

சரித்திர நாடக மன்னர் பாத்திரமானாலும் குணச்சித்திர பாத்திரமானாலும், நகைச்சுவை பாத்திரமானாலும், அந்தந்தப் பாத்திரத்திற்கேற்ப தன் நடிப்பாற்றலை வானொலி நாடகங்களுக்கு குரல் வழியாகவும், மேடை நாடகங்களுக்கு உணர்வுபூர்வமாக உடல் ரீதியாகவும் மக்களை ஈர்க்கும் நடிப்புத்திறன் இவரிடம் நிறைந்து காணப்பட்டது.

இவர் கல்வி கற்ற இன்றைய கொழும்பு ஹமீத் அல் ஹுசைனி தேசிய கல்லூரி அன்று கொழும்பு ஹமீத் அல் ஹுசைனி பாடசாலையாக இருந்த போது, பாடசாலை நிகழ்வொன்றில் மேடையேறிய "ஜூலியஸ் சீசர்" நாடகத்தில் மன்னராக நடித்து முழு பாடசாலையையுமே அதிரவைத்தார். இதுவே கலையுலகு பக்கம் இவரை கொண்டுசென்றது எனலாம். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட கலைஞராக 1966 களில் தேர்வு செய்யப்பட்ட இவர், நூற்றுக்கணக்கான முஸ்லிம் நாடகங்களில் நடித்ததன் வாயிலாக நாடறிந்த கலைஞரானார்.

மதம், கடல் கடந்து வானொலி வரலாற்றில் தடம் பதித்துக் கொண்ட அன்றைய முஸ்லிம் சேவையின் நாடக பாரம்பரியம் குறித்துப் பேசுகையில், பேசப்பட வேண்டிய ஒரு கலைஞராக காலஞ்சென்ற கலாபூஷணம் கே.ஏ.ஜவாஹர் திகழ்கிறார்.

இன்னும் அன்று முஸ்லிம் சேவையில் தொடராக ஒலிபரப்பான பிரபல எழுத்தாளர் தீன்ஸா (மௌலவி சைபுதீன் ஸாஹிப்) எழுதி, இவர் நடித்த "மனச்சுமை" ஓரங்க நாடகம் இன்னும் இவரது திறமையை நேயர்கள் மத்தியில் பேசவைத்தது.

கலாபூஷணம் எஸ். ஐ.நாகூர்கனி தொடராக எழுதிய "ஊடுருவல்" தொடர் நிகழ்ச்சியிலும், காலஞ்சென்ற நகைச்சுவை கலைஞர் ஓ. நாகூரோடிணைந்து பங்களிப்பு வழங்கியமையும் நினைவுகூரத்தக்கது.

பிரபல கலைஞர்களான கலைச்செல்வனும்,ஏ.ஸீ.எம். பாரூக்கும் 1966ல் இணைந்து நெறிப்படுத்திய "எதற்கும் ஓர் எல்லை", பிரபல இயக்குனர் சுஹைர் ஹமீத் நெறிப்படுத்திய "அவளைக் கொன்றவள் நீ" "பொம்மலாட்டம்", "வாடகைக்கு அறை" "பிள்ளை பெற்ற ராஜா ஒரு நாயை வளர்த்தார்", "சாதிகள் இல்லையடி பாப்பா" போன்ற பல மேடை நாடகங்கள் மக்கள் மத்தியில் பெரும் பிரபலத்தை இவருக்குத் தேடிக்கொடுத்தன.

இலங்கையின் திரைத்துறையிலும், இவரது பங்களிப்புகள் நிறைந்திருக்கின்றன.

புதிய காற்று, கோமாளிகள், வாடைக் காற்று, ஏமாளிகள் போன்ற ஈழத்துத் திரைப்படங்கள் இவரது திறமைக்குச் சான்று. சிங்களத் திரைப்படங்களிலும் இவர் நடித்திருக்கிறார்.

கலைஞர் கலாபூஷணம் கே.எம். எம்.நஸீர் எழுதி நெறிப்படுத்தி, எம். பீ.ஹுசைன் பாரூக் தயாரித்தளித்த ஐ.டீ.என்.தொலைக்காட்சி நிகழ்ச்சி முத்துச்சரத்தில் தொடராக ஒளிபரப்பான "அபூநாநா" நகைச்சுவை நாடக கதாபாத்திரமான "அபூநாநா" எனும் பெயர் என்றும் இவருக்கு நிலைத்த பெயரானது. "பிள்ளைப் பெற்ற ராஜா ஒரு நாயை வளர்த்தார்" நாடகத்தில் ராஜாவாக நடித்து அகில இலங்கை அரசு நாடகவிழாவில் சிறந்த நடிகராக தெரிவுசெய்யப்பட்டார்.

1969ல் தினகரன் நாடக விழாவில் சிரேஷ்ட கலைஞர் கலைச்செல்வன் ரவூப் எழுதிய "மனித தருமம்" என்ற நாடகத்தில் நடித்து, சிறந்த "துணை நடிகர்" என்ற பட்டத்தை தமிழக திரைப்பட நடிகை சௌகார் ஜானகி அவர்களால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

அசனார் அப்பாஸ், உம்மு சுல்தான் பீவி தம்பதியருக்கு மூத்த புதல்வராக,1945 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பிறந்தார். தனது தாய்மாமன் மகளான மொஹிதீன் பாத்தும்மாவை 1975 ல் திருமணம் செய்து கொண்டார். இவரது தந்தை கலைத் துறையில் ஆர்வமிக்க ஒருவராக இருந்தமை கே.ஏ.ஜவாஹருக்கு, கலையுலகில் நுழைவதற்கு வாய்ப்பாகியது எனலாம். 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி, தனது 57 வது வயதில் நம்மை விட்டும் பிரிந்தார். அனைத்து இனத்து, கலைஞர்கள், பொதுமக்களின் பேரன்பினை பெற்றுக்கொண்ட இவரது ஜனாஸா கொழும்பு மாளிகாவத்தை மையவாடியில் அடங்கம் செய்தபோது, மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் என அதிகமானோர் கலந்து கொண்டார்கள்.

எதிர்வரும் செவ்வாய் (05.09.2023) இரவு 8.15 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாக இருக்கும் பாரம்பரியம் நிகழ்ச்சி மறைந்த கலைஞர் கலாபூஷணம் கே.ஏ.ஜவாஹர் நினைவுகளை சுமந்து வருகிறது. இந்நிகழ்ச்சியில் இவரது நினைவுகளை முஸ்லிம் சேவையின் முன்னாள் நாடகத் தயாரிப்பாளரும், புகழ் பூத்த நாடக எழுத்தாளருமான கனடாவில் வசித்து வரும் எம்.அஸ்ரப்கான், சிரேஷ்ட கலைஞர்களான கலாபூஷணம் ஜெய்ரஹீம் ஸஹீத், கலாபூஷணம் நூர்ஜஹான் மர்சூக், கவிஞர் வாழைத்தோட்டம் வஸீர் ஆகியோர் பரிமாறிகொள்கிறார்கள். நம்மோடு வாழ்ந்து வரும் கலைஞர் ஜவாஹர் அவர்களின் துணைவியார் மொஹிதீன் பாத்தும்மா அவர்களும் நிகழ்ச்சியில் குரல் கொடுப்பதும் நிகழ்ச்சிக்கு சிறப்பாகிறது.

(எம்.எஸ்.எம். ஜின்னா)



மொறட்டுவை, எகொடஉயன மஸ்ஜிதுல் ஹஸனாத் ஜும்ஆப் பள்ளிவாசலின் புதிய நிர்வாக சபை பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பாடு செய்த சிரமதான நிகழ்வு நேற்று முன்தினம் (30) பள்ளிவாசலில் பரிபாலன சபையின் புதிய தலைவர் மௌலவி எம்.எஸ். எம். ஹபீக் (இன்ஸானி) தலைமையில் நடைபெற்றது. ஜமாஅத்தினர் உட்பட ஊர் மக்கள் சிரமதான பணிகளில் ஈடுபட்டுள்ளதை படங்களில் காணலாம்.
(படங்கள் :மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

### கிந்தோட்டை ஸாஹிராவின் நூற்றாண்டுவிழா போட்டி;

# உதைபந்தாட்ட போட்டியில் வெலிகம அறபா சம்பியன்



(வெலிகம தினகரன் நிருபர்)

காலி கிந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தென் மாகாண பிரபல பாடசாலைகள் கலந்து கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டியில் வெலிகம அறபா தேசிய பாடசாலை வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டிகள் கடந்த 28, 29, 30ஆம் திகதிகளில் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றன. இறுதி ஆட்டத்தில் வெலிகம அறபா தேசிய பாடசாலையும், கிந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையும் மோதின. விறுவிறுப்பான ஆட்டத்தில் குறிப்பிட்ட நேரத்தில் எந்த அணியும் "கோல்" போடாது சமநிலையில் முடிந்தது. இறுதியில் "பெனால்ட்டி " உதை வழங்கப்பட்டது. இதில் 4 க்கு 3 என்ற "கோல்" அடிப்படையில் வெலிகம அறபா கல்லூரி வெற்றியீட்டி சம்பியனானது. வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கு பரிசில்கள் வழங்கும் வைபவம் 30 திகதி புதன்கிழமை ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

# பேருவளை சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரிக்கு கதிரைகள் அன்பளிப்பு

## இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி நிதி ஒதுக்கீடு











பேருவளை பீ.எம்.முக்தார்

பேருவளை சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி பாக்கீர் மாக்கார் மண்டபத்திற்கு தேவையான கதிரைகள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் அதிபர் பஹீமா பாயிஸ் தலைமையில் பாடசாலை பாக்கீர் மாக்கார் மண்டபத்தில் நடைபெற்றது.

10 இலட்சம் ரூபா பெறுமதியான கதிரை தொகுதி இதன் போது கையளிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இதற்கான நிதியை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் தனது வரவு செலவு திட்ட நிதியிலிருந்து ஒதுக்கினார்.

இந்த ஆராதனை மண்டபம் முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் தேசமான்ய எம்.ஏ. பாக்கீர் மாக்காரினால் அமைத்துக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில் பேருவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.ஜே.யு.சோமரத்ன கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

சீனன் கோட்டை பள்ளிச்சங்க உப தலைவர் ஏ.ஆர்.எம் ஸூலைமான், உறுப்பினர் இஸ்ஸத் ஸவாஹிர், களுத்துறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளன பொருளாளர் அர்ஷத் ஸவாஹிர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்க உறுப்பினர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். பாடசாலை அதிபர் பஹீமா பாயிஸ் இம்தியாஸ், பாக்கீர் மாக்காரின் சேவைகளை கௌரவித்து நினைவுச் சின்னமொன்றையும் கையளித்தார். பாடசாலை கெப்டன் அயிஷா மரியம் பஸ்மி வரவேற்புரை நிகழ்த்தினார். பாடசாலை அதிபர் பஹீமா பாயிஸ் பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை பற்றியும் பாடசாலை கண்டு வரும் முன்னேற்றம் குறித்து உரையாற்றியதோடு பாடசாலை மண்டபத்தின் முக்கிய தேவையான கதிரைத் தொகுதி இல்லா பிரச்சினையை தீர்த்து வைக்க பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மேற்கொண்ட முயற்சிக்கு பாராட்டும் தெரிவித்தார்.

இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எம்.பி உரை:

பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவு திட்ட நிதியில் இருந்து 99 சதவீத நிதியை கல்வி மறுமலர்ச்சிக்காகவே தொடர்ந்து ஒதுக்கி வருகிறேன். அந்த வகையில் ஆகக் கூடுதலான நிதியை எனது தாயார் மற்றும் எனது சகோதரிகள் கல்வி கற்ற சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரிக்கு ஒதுக்கினேன்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,.

இஸ்லாம் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால விமோசனம் கல்வித்துறையின் முன்னேற்றத்திலேயே தங்கியுள்ளது. உலகில் முஸ்லிம் பெண்கள் அறிவுத்துறையில் முன்னணி வகிக்கின்றனர். துருக்கி, கத்தார், ஐக்கிய அரபு இராச்சியம், மொரோக்கோ, ஜோர்தான் உட்பட பல அரபு நாடுகளில் முஸ்லிம் பெண்கள் கல்வியில் உயர் நிலை அடைந்து உயர் பதவிகளில் உள்ளனர்.

முஸ்லிம் பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளுக்கு பூரண கல்வியை பெற்றுக் கொடுக்க வேண்டும். திருமணம் செய்து கொடுப்பதற்காக அவர்களின் கல்வியை இடைநடுவில் நிறுத்தி விடாதீர்கள். அன்று முஸ்லிம் பெண்களுக்காக பாடசாலை அமைக்க முயற்சித்த சமயங்களில் ஊர் தலைவர்களை கல்லால் வீசி எறிந்த சம்பவங்களும் இடம் பெற்றதுண்டு. அன்றைய எமது முஸ்லிம் தலைவர்கள் சமூகத்தின் எதிர்கால முன்னேற்றம் கருதி செயல்பட்டனர். பல பாடசாலை முஸ்லிம் கிராமங்களில் உருவாக்கினர். அதன் காரணமாக முஸ்லிம்கள் கல்வியில் முன்னேறுவதற்கு வாய்ப்புக்கிட்டியது.

சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி கண்டுள்ள முன்னேற்றம் குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இப்பாடசாலையில் 35 வரையிலான ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அறிகிறேன்.இப்பாடசாலையை கட்டியெழுப்ப அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவிகள் சங்கத்தினர், பெற்றோர்கள், பரோபகாரிகள் மேற்கொள்ளும் முயற்சிகளை பாராட்டுகிறேன் என்றார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் மக்கி மன்சூர் (நளீமி) விசேட சொற்பொழிவு நிகழ்த்தினார்.பாடசாலை பிரதிக் கெப்டன் ஸவ்தா அன்ஸார் நன்றியுரை வழங்கினார்.

# தெற்காசியாவில் தாய்-சேய் நலன் மேம்பாட்டில் இலங்கை சிறந்த நிலையில் உள்ளது

## வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன்



(சாவகச்சேரி விசேட நிருபர்)

தாய் – சேய் நலன் மேம்பாட்டில் தெற்காசியாவிலேயே இலங்கை சிறந்த நிலையில் காணப்படுவதாக யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கொடிகாமத்தில் நடைபெற்ற, கவிஞரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருமான ஜென்சன் றொனால்டின் நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

தாய் – சேய் ஆரோக்கியத்தில் தான் ஓர் நாட்டினுடைய ஆரோக்கியம் தங்கியுள்ளது.அந்தவகையில் தாய் – சேய் மரண விகிதத்தை வைத்தே ஒரு நாட்டினுடைய, மாவட்டத்தினுடைய ஆரோக்கிய நிலையை கணிக்க முடியும். தாய் – சேய் நலன் மிக மிக முக்கியமானது. அந்த விடயத்தைப் பொறுத்தவரையில் எமது நாட்டில் தாய் – சேய் மரண விகிதம் தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிக குறைவடைந்துள்ளது. தாய் – சேய் நலனில் தெற்காசியாவிலேயே இலங்கை சிறந்த நிலையில் காணப்படுகிறது.

தாய் – சேய் நலன் விடயத்தில் எமது நாடு சிறந்து விளங்கக் காரணம் எமது நாட்டில் உள்ள நோய்த் தடுப்பு பொறிமுறை.

எமது நாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி,பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்ப நல உத்தியோகத்தர் என சிறந்த நோய்த் தடுப்புக் கட்டமைப்புக் காணப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பை வைத்து நாட்டில் பல தொற்று நோய்களை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.

ஒரு காலத்தில் மலேரியா பெரிய ஒரு உயிர் கொல்லி தொற்று நோயாக இருந்தது.அது தற்போது கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. அத்துடன் செங்கன்மாரி, டெங்கு போன்ற பல தொற்றுநோய்கள் முழுக் கட்டுப்பாட்டிற்குள் உள்ளன.

பல நோய்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவியாகவிருந்தது. எமது நாட்டில் காணப்படுகின்ற சுகாதார கட்டமைப்பு. கடந்த வருடங்களில் உலகளாவிய ரீதியாக பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய கொவிட் தொற்றை எமது சுகாதார துறையால் கட்டுப்படுத்த முடிந்தது. உயிரிழப்புக்களைக் குறைக்கக் கூடியதாகவிருந்தது. எமது நாட்டிலுள்ள சிறந்த சுகாதார கட்டமைப்பு வல்லரசு நாடுகளில் கூட இல்லை.அதனால் தான் அங்கு கொவிட்டால் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டன.அந்த நாடுகளில் நோய்த் தடுப்பு கட்டமைப்பு வளர்ச்சியடையவில்லை. எமது நாட்டில் உள்ள நோய்த் தடுப்பு சுகாதாரக் கட்டமைப்பினை ஸ்தாபித்தவர் செல்லப்பா என்ற ஓர் தமிழர். இலங்கையின் முதலாவது சுகாதார வைத்திய அதிகாரியும் அவரே. அவர் களுத்துறையில் முதன் முதலாக இந்த சுகாதார கட்டமைப்பை உருவாக்கினார். காலப்போக்கில் அது நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது. சிறந்த கட்டமைப்பு தான் தாய் – சேய் மரண விகிதம் குறைவாகவிருக்க பிரதான காரணமென மேலும் அவர் தெரிவித்தார்.



நல்லூர் 10ஆம் திருவிழாவான மஞ்ச திருவிழா நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. முத்துக்குமாரசாமி மற்றும் வள்ளி, தெய்வானை ஆகியோர் மஞ்சத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தனர். (படம் யாழ்.விசேட நிருபர்)

# குறிகட்டுவான் இறங்குதுறைக்கு கனரக வாகனம் செல்லத்தடை

(பருத்தித்துறை தினகரன் நிருபர்)

யாழ்ப்பாணம் குறிகட்டுவான் இறங்கு துறை பகுதிக்கு கனரக வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து, நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்கு செல்வோர் குறிகட்டுவான் இறங்குதுறைக்கு சென்றே அங்கிருந்து படகில் தீவுகளுக்கு பயணிப்பார்கள். பயணிகள் மாத்திரமின்றி பொருட்களும் இந்த இறங்குதுறை ஊடாகவே தீவுகளுக்கு கொண்டு செல்லப்படும். இந்நிலையில் இறங்கு துறையின் கீழ் பகுதியில் இருக்கும் இரும்புகள் துருப்பிடித்து வலுவிழந்து காணப்படுவதனால் கனரக வாகனங்கள் செல்வதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் குருஸ் தெரிவித்துள்ளார்.


# கேள்விகோரல் அழைப்பு

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல

## சேவைகளை வழங்குதல்

01. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தவைரால் கீழ்க்காணும் சேவைகளை வழங்குதல் சார்பாக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. சேவைகளை வழங்குதல்

| கேள்வி இலக்கம் | விபரம் | கேள்விப் பிணை (ரூ) |
|---|---|---|
| ஆரப/கிII/2023/10 | சுத்திகரிப்புச் சேவை 2023/2024 | 150,000.00 |
| ஆரப/கிII/2023/11 | பாதுகாப்புச் சேவை 2023/2024 | 125,000.00 |

03. கேள்விகோரல் தேசியபோட்டி கேள்விமுறை (NCB) மூலம் மேற்கொள்ளப்படும்.

04. கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடனான கேள்விதாரர்களுக்கு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் பிரதம கணக்காளரிடம் தொ.பே.இல - 0112786396/076-0961578 மூலம் தேவைப்படும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் 2023.09.04 முதல் 2023.09.25 வரை காலத்திற்கு வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை இல.31, இசுரு மாவத்த, பெலவத்த, பத்தரமுல்லவில் அமைந்துள்ள அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் கேள்விகோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம் அவ்வாறு இல்லையெனில் கேள்வி ஆவணத்தை எமது இணையதளத்திற்கு பிரவேசித்து இலவசமாகப் பதிவிறக்கம் செய்துகொள்ள முடிவதுடன், govanalyst.finance@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் வேண்டுதல் விடுப்பதன் மூலம் அவ் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. எழுத்துமூல விண்ணப்பம் மற்றும் ரூ.3500/- மீளளிக்கப்படாத கட்டணத்தை அரசாங்க இரசாயனக் பரிசோதகர் திணைக்களத்தின் காசாளருக்கு காசாக மட்டும் செலுத்தி ஒரு சேவையை வழங்குவதற்கு குறித்த கேள்விகோரல் ஆவணத் தொகுதியொன்றை 2023.09.04 முதல் 2023.09.25 வரையான காலத்திற்குள் வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகளை, அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வகத்தை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், இல.31, இசுருமாவத்த, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு 2023.09.26 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் செல்லுபடியாகும் கேள்விப் பிணையுடன் பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் ஒப்படைத்தல் வேண்டும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் 2023.09.26 மு.ப.10.00 இற்கு இடம்பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்,**
**இல.31, இசுரு மாவத்த,**
**பெலவத்த, பத்தரமுல்ல**

# கடமையுணர்வுள்ள நேர்மையான அதிகாரிகள் ஐவருக்கு விருதுகள்



ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் ஏற்பாடு செய்த 2022_23 ஆம் ஆண்டுக்கான இன்டக்ரிட்டி ஐக்கன் (Integrity Icons Sri Lanka _ நேர்மைக்கு மகுடம்) விருது வழங்கும் இறுதிவிழா கொழும்பு பி.எம்.ஐ.சி.எச் இல் நடைபெற்றது.

நேர்மையுடன் அர்ப்பணிப்புடன் சிறந்த விழுமியங்களை கடைப்பிடித்து பொதுமக்களுக்கு சேவையாற்றும் அரச ஊழியர்களை அங்கீகரித்து கௌரவிக்கும் வகையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

அரச அலுவலக வாகனமொன்று வழங்கப்பட்டிருந்தாலும், தனது சொந்த தேவைக்கு அதனைப் பயன்படுத்தாதவர்கள், கருமங்களை நிறைவேற்ற வருவோருக்கு உரிய சேவையை தாமதமின்றி வழங்குபவர்கள், தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அரச ஊழியர்களை அன்பாக நடத்துபவர்கள் போன்றோருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

அரச சொத்துகளை, நிதியை துஷ்பிரயோகம் செய்யாதவர்கள், ஒருபோதும் அன்பளிப்புப் பெறாதவர்கள் போன்றோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. மேற்படி அதிகாரிகளுடன் மேலும் 5 அதிகாரிகள் ஆறுதல் பரிசுகளை பெற்றுக் கொண்டனர்.

இன்டக்ரிட்டி ஐக்கன் (நேர்மைக்கு மகுடம்) செயல்திட்டத்தினை எக்கவுண்டபிலிட்டி லெப் நிறுவனத்துடன் இணைந்து ஐந்தாவது முறையாக ட்ரான்ஸ்பேரன்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. இத்திட்டம் முதன் முதலாக நேபாளத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இலங்கை உட்பட 12 நாடுகளில் இச்சர்வதேச அமைப்பு இவ்விருதினை வழங்கும் செயல்திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது.



ஒஸ்டின் பெர்னான்டோ, எஸ். தில்லைநடராஜா, வின்யா ஆரியரத்தின, ரமனி ஜயசுந்தர ஆகியோர் நடுவர்குழு உறுப்பினர்களாவார்.

விருது பெற்ற சிறந்த ஐந்து அரச அதிகாரிகளுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட நிதி ஆணைக்குழுவின் தலைவர் சுமித் அபேசிங்க விருதினை வழங்கி வைத்தார்.

விருது பெற்றோர் வருமாறு:

(1) சுபாஜினி மதியழகன் (பிரதேச செயலாளர், வலிகாமம் கிழக்கு ,கோப்பாய்) இவர் கடந்த 19 வருட காலமாக யுத்த காலத்திலும் மெனிக்பாமிலிருந்து இன்றுவரை அரச அதிகாரியாக கடமையாற்றுபவர்.

(2) யசோதா உதயகுமார் (பிரதேச செயலாளர், வலிகாமம் தென் மேற்கு, சண்டிலிப்பாய்) இவர் ஆசிரியராக, உதவி விரிவுரையாளராக கடந்த 20 வருடகாலமாக கடமையாற்றுபவர்.

(3) விஜயவர்தன அபேயவிக்கிரம நிசங்க (வைத்தியர் மாவட்ட ஆதார வைத்தியசாலை, ரிகில்லகஸ்கட மற்றும் சுகாதார சேவைகள் மாவட்ட பணிப்பாளர், நுவரெலியா)

(4) பிரதிபாணி ஸ்ரீ விஜயந்தி மொல்லிமெகாட (மருத்துவதாதி, ஆதார வைத்தியசாலை, எல்பிட்டிய)

(5) நளின் பிரசன்ன விஜேசேகர (மேலதிக சுகாதார வைத்தியர், பொதுச் சுகாதார பணிமனை அம்பலாங்கொடை)

**அஷ்ரப் ஏ சமத்...✍**

# ஊடகவியலாளர் பி.விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூல் வெளியீட்டுவிழா





யாழ் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் அனுசரணையில், பி.விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூலின் வெளியீட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்றது.





ஊடகத்துறையில் தனது ஐம்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வினை உள்ளடக்கி பி. விக்னேஸ்வரன் இந்நூலை உருவாக்கியுள்ளார். இலங்கையில் அவர் ஆற்றிய கலைப் பணிகள், வானொலியில் தயாரிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக ஆற்றிய பணிகள், தொலைக்காட்சித் துறையில் தயாரிப்பாளராக, பணிப்பாளராக பல் வகைமைச் சூழலில் அவருக்கிருந்த வாய்ப்புக்கள், எதிர்கொள்ளப்பட்ட சவால்கள், புலம்பெயர் நாட்டில் ஊடகப் பணிகள் எனப் பலதரப்பட்ட விடயதானங்களை ஒன்றிணைத்து ஊடகத்துறைசார் ஆவணமாக, ஆயிரம் பக்கங்களுக்கு அண்மித்ததாக இந்நூலை பி.விக்னேஸ்வரன் உருவாக்கியுள்ளார்.

ரொரன்ரோ 'தாய்வீடு' மாத இதழில் ஆறு ஆண்டுகளாக வெளிவந்த தொடரின் நூல் வடிவமாக இப்படைப்பாக்கம் விளங்குகின்றது.

நிகழ்வுக்கான தலைமையுரையை யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமும், வரவேற்புரையை ஊடகக்கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனனும், நூலுக்கான வாழ்த்துரையை யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கமும், அறிமுகவுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தாவும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு வைபவம் இடம்பெற்றதுடன் முதற்பிரதியை விக்னேஸ்வரன் வழங்க ஐ.பி.சி.தமிழ் நிறுவன உரிமையாளர் க.பாஸ்கரன் பெற்றுக் கொண்டார். முதற்பிரதியை தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கலும் நடைபெற்றது. சில பாடசாலைகளுக்கு நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

நூலுக்கான ஆய்வுரையை அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும், நயப்புரையினை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் எஸ்.விஸ்வநாதனும் வழங்கினர். ஏற்புரையை நூலாசிரியர் பி. விக்னேஸ்வரன் ஆற்றினார். நன்றியுரையை ஊடகக் கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் டினேஸ் கொடுதோர் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் ஊடகத்துறை சார்ந்தோர்,பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

**எஸ்.தில்லைநாதன்...✍**
(கரவெட்டி தினகரன் நிருபர்)
**பு.கஜிந்தன்...✍**

## வானொலி, தொலைக்காட்சி பத்திரிகைத்துறையில் 50 வருடங்கள்;

# சொற்கோ வி.என்.மதிஅழகனின் பொன்விழா கொழும்பில்



'சொற்கோ வி.என்.மதிஅழகன் தமிழ் ஒலிபரப்பில் ஒரு பொற்காலப் பதிவு' என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 06 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் விழாவிற்கு மூத்த ஊடகவியலாளர் அனந் பாலகிட்ணர் தலைமை தாங்குவார். புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிப்பார்.

'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் சாஹித்யரத்னா தி.ஞானசேகரன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

இலங்கை இந்து மாமன்றத் தலைவர் மா. தவயோகராஜா பிரதம விருந்தினராகவும், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் துரைமனோகரன், ஒலி, ஒளி பரப்பாளர் அருண் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் சமுகமளித்திருப்பர்.

கௌரவ விருந்தினர்களாக தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ்.சிறீகஜன், தினக்குரல் பிரதம ஆசிரியர் கே.பி.ஆர். ஹரன் ஆகியோர் பிரசன்னமளிப்பர். இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் எஸ்.விஸ்வநாதன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் எம்.இஸட். அஹம்மத் முனவ்வர், கொழும்பு சைவமங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி. அருந்ததி இராஜவிஜயன், கொழும்பு றோயல் கல்லூரி தமிழ்ப் பிரிவு அதிபர் திருமதி தங்கேஸ்வரி நந்தகுமார், கொழும்பு இந்துக்கல்லூரி பம்பலப்பிட்டி ஆசிரியரும் ஒலிபரப்பாளருமான திருமதி சுதர்ஷினி சிவரதன் ஆகியோரும் விழாவில் பங்குபற்றி உரையாற்றுவார். நூலாசிரியரின் விசேட அழைப்பின் பேரில் கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் விவாதக் குழு தலைவர் செல்வன் விகாஷ் சிதம்பரம் விசேட உரை நிகழ்த்துவார்.

மதிஅழகனின் ஒலிபரப்பு மாணவர்களில் ஒருவரான அக்கரைப்பற்று பிறை எஃப்.எம். கவிஞர் ரபீக் கவிமழை பொழியவிருப்பது விழாவின் சிறப்பம்சமாகும்.

எழுத்து, மின்னியல் ஊடகர் வி.என்.மதிஅழகனின் பொன் விழா ஆண்டினை முன்னிட்டு சென்னை காந்தளகம் பதிப்பகம் நூலை வடிவமைத்துள்ளது.

ஒரு நூற்றாண்டை எட்டும் இலங்கை ஒலிபரப்புத்துறையில் இத்தகைய பொன்விழா மலர் நூல் ஒன்று வெளியிடப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

## 'பொற்காலப் பதிவு' பொன்விழா மலரும் வெளியீடு

# அக்கரைப்பற்று அஸ்–ஸிராஜ் மகாவித்தியாலய புதிய அதிபரும், அபிவிருத்திப் பணிகளும்



அக்கரைப்பற்று அஸ்ஸிராஜ் மகாவித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) புதிய அதிபராக, இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தரும் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.ஜி. பஸ்மில் அண்மையில் கடமையேற்றுள்ளார். பாடசாலையின் பௌதீகவள அபிவிருத்தி, கல்வி மற்றும் இணைப்பாடவிதான அபிவிருத்தி என அனைத்து விடயங்களிலும் அவர் கவனம் செலுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது. பாடசாலையினதும், மாணவர்களினதும் நலன்கருதி புதிய அதிபர் பஸ்மில் பல்வேறு வேலைத்திட்டங்களை நம்பிக்கையுடன் நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

அதிபரின் பிரஸ்தாப வேலைத்திட்டங்கள், நல்ல பணிகளுக்குப் பின்னால் பாரிய மனித உழைப்பு, வழிகாட்டல்கள் உள்ளன. அதிபருடன் நல்ல உள்ளங்கள் பலர் இணைந்துள்ளனர்.

இதுவரை பின்வரும் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

★இம்முறை க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி விஷேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாணவர் பெறுபேற்றை அதிகரிப்பதற்கும், பாடங்களில் 40 இற்கும் குறைவான புள்ளிகள் பெறுவதிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

★ தரம் 06 முதல் 09 வரையான வகுப்பு மாணவர்களின் முதலாம் தவணைப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் அவர்களுக்கான மேலதிக மற்றும் விஷேட வகுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★தேசிய மட்ட வெற்றியை இலக்காகக் கொண்டு, இணைப் பாடவிதான செயற்பாடுகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

★ஆசிரியர்களின் வகுப்பறைக் கற்பித்தல் தொடர்பில் உள்ளக மேற்பார்வை மற்றும் மதிப்பீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

★ க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி, பெறுபேற்றை எதிர்பார்த்துள்ள மாணவர்களுக்கு, தகவல் தொழில்நுட்ப அறிவு தொடர்பான மேலதிக வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது.

★ வாரத்தின் செவ்வாய், வியாழன் இரு தினங்களில் மாணவர்கள் காலை உடற்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலை விளையாட்டு மைதானத்தை மாணவர்கள் தற்பொழுது பயன்படுத்தி வருகின்றனர்.

★ மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

★ பெருந்தொகையான மக்களின் பிரசன்னத்துடன் பாடசாலை அபிவிருத்திக் குழு மற்றும் பழைய மாணவர் சங்க கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. மேற்படி குழுக்களின் உச்சபட்ச உதவி எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதிபர் ஏ.ஜி.பஸ்மில் திறமையான அதிகாரி என்று பலரினாலும் அடையாளப்படுத்தப்பட்டவர் ஆவார்.

**முகம்மட் றிஸான்...✍**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# மு.கா முன்னாள் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் 23 ஆவது சிரார்த்த தினம் சாய்ந்தமருதில்

## எதிர்வரும் 16ஆம் திகதி வைபவம்; ஏற்பாடுகளை ஆராய கலந்துரையாடல்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவரான மறைந்த எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் 23 ஆவது சிரார்த்ததின நிகழ்வு எதிர்வரும் செப்டம்பர் 16ஆம் திகதி சாய்ந்தமருதில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் ஏற்பாட்டில் தேசிய நிகழ்வாக நடைபெறவுள்ள இந்நிகழ்வு சம்பந்தமாக சாய்ந்தமருது பிரதேச கட்சிப் பிரமுகர்களுக்கு தெளிவுபடுத்தும் ஆரம்பகட்ட கூட்டம் கட்சியின் தவிசாளர் அப்துல் மஜீத் (முழக்கம்) தலைமையில் கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹீப் இல்லத்தில் நடைபெற்றது.

மறைந்த அஷ்ரப் ஞாபகார்த்தமாக நடைபெறவுள்ள இவ்விஷேட நிகழ்வை விரிவாக நடத்துவது சம்பந்தமாகவும், ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் நடவடிக்கைகளை பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் எதிர்காலத்தில் வீரியமாக கொண்டு செல்வது சம்பந்தமாகவும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. இக்கட்சியில் சிறு சிறு காரணங்களுக்காக கட்சியை விட்டு விலகி நிற்பவர்களையும், கூடுதலான இளைஞர்களையும் கட்சியில் இணைத்துக் கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேசத்தில் ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் கட்சி எவ்வாறு செல்வாக்குப் பெற்றிருந்ததோ அவ்வாறு மீண்டும் கட்சியை முன்கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இதேவேளை இம்மாபெரும் நிகழ்வு தொடர்பான கலந்துரையாடலொன்று கலாநிதி சிறாஸ் மீராசாஹீப் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு கட்சியின் தேசியத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப்ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளதுடன் சிரார்த்ததின நிகழ்வில் நடைபெறவுள்ள விடயங்கள் தொடர்பாக அங்கு ஆராயப்படவுள்ளது.

இக்கூட்டத்திற்கு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் பீட உறுப்பினர்கள், சாய்ந்தமருது மத்தியகுழு, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், கட்சியின் பிரதேச முக்கியஸ்தர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் அழைக்கப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டாளர் சிராஸ் மீராசாஹீப் தெரிவித்தார்.

**எம்.எப்.றிபாஸ்...✍**
(பாலமுனை தினகரன் நிருபர்)





SUNDAY OBSERVER adz it's what you want
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

COLOMBO DISTRICT

**AVISSAWELLA** 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

**ANGODA** 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

**ATHURUGIRIYA** 011 2760479, 011 4876968
267, Godagama Road,

**BATHTHARAMULLA** 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

**BORALESGAMUWA** 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

**HANWELLA** 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

**HOKANDARA** 071 8685437
No. 501, North Hokandara,

**HOMAGAMA** 011 2892262, 077 7304046
'Aradanas', Senanayake Shopping Complex, Station Road,

**KADUWELA** 011 2579609
Nayana Bake House

**KADUWELA** 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

**KALUBOWILA** 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

**KESBEWA** 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

**KIRULAPONE** 071 5439396, 011 2514166
Ramani Book Shop, 27-A High Level Rd,

**KOTTAWA** 011 2842569, 071 2510950
Srisara Groceries, No. 101/2,

**MAHARAGAMA** 077 7686683, 011 2896373
Supermarket Complex, 88, High Level Rd,

**MALABE** 011 2791782
Kumudu Stores,

**MEEGODA** 011 2858290, 011 2831120
Nandana Stores, No. 635/3, Padukka Rd.,

**MORATUWA** 011 2647410, 077 5486719
Wijesekara Stores,

**MORATUWA** 0112 657326, 0114 212989
S.J.M. Fareed, 222, Egoda Uyana, Modera

**MT. LAVINIA** 011 2724820
Dayal Stores, Galle Rd,

**NUGEGODA** 077 3458785, 011 2811833
Ekwaththa Rd, Mirihana,

**NUGEGODA** 011 2846100, 077 1652800
No. 4, High Level Plaza, Delkanda,

**PADUKKA** 011 2859186, 011 5638677
No. 03, Hanwella Road,

**PILIYANDALA** 011 2619967, 072 8069487
No. 05, Seeko Gardens, Gedabuwana,

**PITAKOTTE** 011 2823960, 077 0858585
No. 435, Pothgula,

**RAJAGIRIYA** 011 2861338
No. 51/2A, Rajahewavitharana Road,

**RATHMALANA** 011 2626106, 011 2632006
Thusitha Newspaper Agency, Galle Rd,

**RAWATHAWATTE** 011 2655153, 071 4274689
No. 3, Soysa Road, Galle Road

**UDAHAMULLA** 077 6859780, 011 2810042
No 138, Station Rd,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380


# அறிவித்தல்

## சப்ரகமுவ மாகாண சபை

### 2024ஆம் ஆண்டிற்காக வாகன தகைமை சான்றிதழ் பத்திரங்களை விநியோகிப்பதற்காக கராஜ்களைப் பதிவு செய்தல்

பஸ் மற்றும் லொறி போன்ற மக்கள் சேவையில் ஈடுபடுகின்ற வாகனங்களுக்காக தகைமைச் சான்றிதழ் பத்திரங்களை விநியோகிக்கும் வேலையை பொறுப்பேற்பதற்கு சப்ரகமுவ மாகாண சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அரச துறை கராஜ்களிடம் இருந்து, வ/ப சப்ரகமுவ பஸ் கம்பனிக்கு சொந்தமான பஸ் டிப்போக்களில் மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழ் அல்லது கம்பனிகளை பதிவு செய்யும் சான்றிதழுடனான தனியார் துறை கராஜ்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பங்களை விநியோகித்தல்
சப்ரகமுவ மாகாண சபையின் மாகாண திறைசேரிக்கு வருகைதந்து ரூ. 2,000/- மீளளிக்கப்படாத விண்ணப்பப் படிவக் கட்டணத்தை செலுத்தி விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்களை 2023.09.01 முதல் 2023.10.02 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படுவதுடன் கட்டணங்களை கொடுப்பனவுகள் செலுத்தாமல் மேற்படி விபரபத்திரத்தை அந்த கால எல்லைக்குள் பரீட்சித்துப் பார்க்கலாம். விண்ணப்பத்துடன் ஏனைய விபரங்களுடன் விபரப் பத்திரமும் வழங்கப்படும்.

02. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல்
விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்து 2023.10.03ம் திகதிக்கு முன் மாகாண திறைசேரி, சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'தகைமை சான்றிதழ் பத்திரங்களை விநியோகிப்பதற்கான கராஜ்களை பதிவு செய்தல் - 2024' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 045-2233962 மற்றும் 045-2222893 தொலைபேசி இலக்கங்களில் விசாரித்தறியுங்கள்

**2023 ஓகஸ்ட் 31ம் திகதி**
**மாகாண திறைசேரி**
**சப்ரகமுவ மாகாண சபை**
**புதிய நகரம், இரத்தினபுரி.**

**மஹிந்த எஸ். வீரசூரிய**
**பிரதம செயலாளர்**
**சப்ரகமுவ மாகாண சபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

### டுவின் நூல் பந்துகள் மற்றும் விடைத் தாள்களை இணைக்கும் துண்டுகள் (Twine threads balls & Twine script tying) வழங்குவதற்கான பெறுகை – 2023

**ஒப்பந்த இல. 04/03/15/2023**

1. டுவின் நூல் பந்துகள் மற்றும் விடைத் தாள்களை இணைக்கும் துண்டுகளை வழங்கும் பெறுகைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய இதனையொத்த காகிதாதிகளை வழங்குவதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: / தொலைநகல்: 011-278 4393 அல்லது 011-2785219) மற்றும் 2023.09.20 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2023.09.01 ஆம் திகதியிலிருந்து 2023.09.20 திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 4,750 இலங்கை ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். (பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.)
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2023.12.20 ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் ஒரு இலட்சத்து ஐம்பத்தையாயிரம் இலங்கை ரூபாவிற்கானதாகவுமிருத்தல் (155,000.00 இ.ரூ.) வேண்டுமென்பதுடன் விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2024.01.19 ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 2023.09.21 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''Supply Twine Balls & Twine Script Tying Pieces - ஒப்பந்த இல.: 04/03/15/2023'' என குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
11. திணைக்கள பெறுகைக் குழுவானது எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு மற்றும் விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழித்து அனைத்து விலைமனுக்களையும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதனால் அதன் மூலம் பாதிக்கப்பட்ட விலைமனுதாரருக்கு அல்லது விலைமனுதாரர்களுக்கு திணைக்கள பெறுகைக் குழுவின் செயற்பாட்டிற்கான காரணத்தை தெரிவிப்பதற்கு எவ்வித பொறுப்பையும் கடப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.

**தலைவர்,**
**பிரதான பெறுகைக் குழு,**
**பரீட்சைகள் திணைக்களம் இலங்கை,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
01.09.2023


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

# விலைமனுக்கோரல்

**ஒப்பந்த இலக்கம் : PD/UDA/RTB/Toilet/M.Market/015/2023**

### பேலியகொட புதிய மெனிங் வர்த்தக கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள மலசலகூட அமைப்புக்களை மாதாந்த வாடகை அடிப்படையில் பராமரித்து நடத்திச் செல்வதற்காக செயற்பாட்டாளரைத் தேர்ந்தெடுத்தல்

01. நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள, பேலியகொட புதிய மெனிங் வர்த்தக கட்டிடத்தொகுதியில் அமைந்துள்ள மலசலகூட அமைப்புக்களை 05 வருட (ஐந்து) காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பராமரித்து நடத்திச் செல்லும் முகமாக செயற்பாட்டாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக பொறியிடப்பட்டட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இம்மலசலகூட அமைப்பு வர்த்தக கட்டிடத் தொகுதியின் 03 வெவ்வேறு இடங்களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
02. மலசலகூட அமைப்புக்கான அடிப்படை மாதிரி வாடகைக்கு 250,000/- ஆகும். செயற்பாட்டாளராக தேர்ந்தெடுக்கப்படுவது இவ் அடிப்படை பெறுமதிக்கு மேல் கிடைக்கும் விலைமனுக்களில் அதி கூடிய மாதாந்த வாடகை அடிப்படையிலாகும். தேர்ந்தெடுக்கப்படும் செயற்பாட்டாளர் அதிகார சபையுடன் வாடகை உடன்படிக்கைக்கு வரல் வேண்டும். அவரால் சமர்ப்பித்த மாதாந்த வாடகை தொகையுடன் அத்தொகைக்கு குறித்த அரச வரித் தொகையுடன் மலசலகூட அமைப்பின் உரிமையை ஒப்படைக்கும் தினம் முதல் தொடர்ந்து சகல மாதங்களிலும் 10ம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.
03. இதற்கான ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு குறித்த விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை, மீளளிக்கப்படாத ரூ. 2,500.00 + வரி செலுத்தி பத்தரமுல்ல, "செத்சிரிபாய" 7ம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் 2023 செப்டெம்பர் 01 முதல் 2023 செப்டெம்பர் 14 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். மேலும் மேற்படி நேரத்திற்குள் எந்தக் கொடுப்பனவும் இன்றி கேள்விப் பத்திரங்களைப் பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன், விலைமனுக்களை சமர்ப்பிக்கும் போது ரூ. 150,000.00/- பிணைத் தொகையை அதிகார சபையின் நிதிப் பிரிவிற்கு செலுத்தி அப்பற்றுச் சீட்டுக்களை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

    இப்பிணைத் தொகை தகைமையுள்ள செயற்பாட்டாளரைத் தேர்ந்தெடுத்ததன் பின்னர் விடுவிக்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் செயற்பாட்டாளரால் மூன்று மாத வாடகைக்குச் சமமான தொகையை வாடகைக்காலத்தின் இறுதியில் மீளளிக்கப்படும் பாதுகாப்பு வைப்பாக அதிகார சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
04. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2023 செப்டெம்பர் 15 பி.ப. 2.00 இற்கு முடிவுறும். விலைமனுக்களை பொறியிடப்பட்ட கடித உறையில் இட்டு குறித்த நேரத்திற்கு முன் தலைவர், வருமான கேள்விச் சபை (சிறிய), நகர அபிவிருத்தி அதிகார சபை, 6ஆம் மாடி, "செத்சிரிபாய" பத்தரமுல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் ஒப்படைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மெனிங் வாத்தக கட்டிடத்தொகுதியின் மலசலகூட அமைப்பிற்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
05. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் பத்தரமுல்ல, "செத்சிரிபாய", 6ம் மாடி, நகர அபிவிருத்தி அதிகார சபையில் நிதிப் பிரிவில் விண்ணப்பதாரிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
06. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, "செத்சிரிபாய", 7ம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையில், பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் : 011-3049008)

**தலைவர்,**
**வருமான கேள்விச் சபை (சிறிய)**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**6 மற்றும் 7ம் மாடி,**
**"செத்சிரிபாய", பத்தரமுல்ல.**

## கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

### 2023/2026ஆம் வருடங்களில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல்

கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபைக்குரித்தான கவரக்குளம் பொருளாதார நிலையத்தின் 08 கடை அறைகளை 03 வருட காலத்திற்கு 2023/2026ஆம் வருடங்களுக்காக இடங்களை குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுக்களை 2023-08-31ஆம் திகதி முதல் 2023-09-14ஆம் திகதி வரை வழங்கப்படும் என்பதுடன் குறித்த விலைமனுக்கள் மற்றும் நிபந்தனைகளை மேற்படி தினங்களுக்கிடையில் அரச அலுவலக நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 01.30 மணி வரை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2023-09-14ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும். மேலதிக விபரங்களை 025-2235581 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு அல்லது www.npe.ps.gov.lk எனும் இணைய தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

- ❖ ஒரு கடை அறைக்கு வருடாந்த ஆகக்குறைந்த கேள்வி 144,000.00 ரூபாவையும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகையாக 10,000.00 ரூபாவையும், கேள்விப் படிவக் கட்டணமாக 3,000.00 ரூபாவாகும். பாதுகாப்பு வைப்புத் தொகையாக 144,000.00 ரூபாவை வைப்புச் செய்தல் வேண்டும்.
- ❖ கிழக்கு நுவரகம்பலாத்த பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அவர்களின் வாழ்க்கைத் துணைகள் மற்றும் அவர்களை சார்ந்துள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
- ❖ கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கேள்விச் சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
- கவரக்குளம் 01ஆம் இலக்க புதிய கடை அறை (சிற்றுண்டிகள் மற்றும் ஐஸ்கிறீம் விற்பனை நிலையமொன்றிற்கு)
- கவரக்குளம் 02ஆம் இலக்க புதிய கடை அறை (மொத்த மற்றும் சில்லறை துணிமணி விற்பனை நிலையமொன்றிற்கு)
- கவரக்குளம் 03ஆம் இலக்க புதிய கடை அறை (மின்சார உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றிற்கு)
- கவரக்குளம் 04ஆம் இலக்க புதிய கடை அறை (மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையமொன்றிற்கு)
- கவரக்குளம் 05ஆம் இலக்க புதிய கடை அறை (இறைச்சி, மீன் விற்பனை நிலையமொன்றிற்கு)
- கவரக்குளம் 06ஆம் இலக்க புதிய கடை அறை (மருந்தகத்திற்கு)
- கவரக்குளம் 07ஆம் இலக்க புதிய கடை அறை (மொத்த மற்றும் சில்லறை பழங்கள் விற்பனை நிலையமொன்றிற்கு)
- கவரக்குளம் 08ஆம் இலக்க புதிய கடை அறை (மொத்த மற்றும் சில்லறை மரக்கறி விற்பனை நிலையமொன்றிற்கு)

**ஜே.ஏ.எஸ். உதயசிறி,**
**செயலாளர்,**
**கி.நு.ப. பிரதேச சபை,**
**விஜயபுர.**


# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

109

**மிற்சுபிஸி கார்கள் விற்பனைக்கு**

18-8330 MITSUBISHI LANCER 1994, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி , இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 4 5 4 295 8 . 054267



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

AAT-5196 BAJAJ 2014, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 054266


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பாகிஸ்தான், நேபாள அணிகள் ஒன்றாக இலங்கைக்கு வருகை

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் மற்றும் நேபாள அணிகள் நேற்று (31) இலங்கையை வந்தடைந்தன.

முல்தானில் நேற்று முன்தினம் (30) நடைபெற்ற முதல் போட்டியில் விளையாடிய பின்னர் தமது இரண்டாவது குழு நிலை போட்டியில் பங்கேற்றபதற்காகவே இந்த இரு அணிகளும் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தன.

முல்தான் நகரில் இருந்து யூ.எல் 1230 விமானத்தில் இலங்கை வந்த இந்த இரு அணிகளிலும் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் என மொத்தம் 80 பேர் இடம்பெற்றிருந்தனர். இதனையொட்டி கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.





ஆசிய கிண்ணத் தொடரின் முதல் போட்டியில் நேபாளத்தை பாகிஸ்தான் அணி 238 ஓட்டங்களால் வீழ்த்தியது. இந்நிலையில் பாகிஸ்தான் அணி நாளை (02) பல்லேகலவில் இந்திய அணியை எதிர்கொள்ளவுள்ளதோடு நேபாள அணி வரும் செப்டெம்பர் 4 ஆம் திகதி பல்லேகல சர்வதேச மைதானத்தில் இந்திய அணியுடன் மோதவுள்ளது.

இதற்காக கட்டுநாயக்க வந்தடைந்த பாகிஸ்தான் மற்றும் நேபாள அணிகள் கண்டியை நோக்கி புறப்பட்டுச் சென்றன.

# சர்வதேச டி20 கிரிக்கெட்டில் முதல் திருநங்கை அறிமுகம்



கனடாவின் டானியல் மக்காஹி முதல் திருநங்கை கிரிக்கெட் வீரராக உத்தியோகபூர்வ சர்வதேச கிரிக்கெட் பேட்டியில் விளையாடவுள்ளார்.

2024 ஆம் ஆண்டு பங்களாதேஷில் நடைபெறவுள்ள மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான தகுதிகாண் தொடருக்கு மக்காஹி கனடா குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளார்.

29 வயதான ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மக்காஹி ஆடவரில் இருந்து மகளிர் திருநங்கை வீரராவதற்கான சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் அனைத்து அளவுகோல்களையும் பூர்த்தி செய்துள்ளார். இந்நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் 4 தொடக்கம் 11 ஆம் திகதி வரை லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறும் தகுதிகாண் தொடரில் அவர் ஆடவுள்ளார்.

எனினும் தடகளம், சைக்கிளோட்டம், நீச்சல் மற்றும் ரக்பி உட்பட மற்ற விளையாட்டுகளில் மகளிர் அணியில் திருநங்கைகளை இணைப்பது குறித்து பிரச்சினை இருந்துவரும் நிலையிலேயே மக்காஹி சர்வதேச மகளிர் கிரிக்கெட்டில் அறிமுகமாகவுள்ளார்.

கடந்த 2020 பெப்ரவரியில் அவுஸ்திரேலியாவில் இருந்து கனடாவுக்கு குடியேறி இருக்கும் மக்காஹி 2020 நவம்பரில் ஒரு பெண்ணாக சமூக மாற்றத்தை பெற்று 2021 மே மாதத்தில் மருத்துவ ரீதியிலான பால் மாற்றத்தை ஆரம்பித்துள்ளார்.

# இஸ்ரேல் வீரருடன் நின்ற ஈரானிய வீரருக்குத் தடை



போலந்தில் நடைபெற்ற உலக மாஸ்டஸ் சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்ற இஸ்ரேலிய வீரருக்கு கைலாகு கொடுத்ததற்காக ஈரான் பளுதூக்கும் வீரர் முஸ்தபா ரஜாய்க்கு அந்நாட்டு பளுதூக்கும் சம்மேளனம் வாழ்நாள் தடை விதித்துள்ளது.

ரஜாய் தனது போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற நிலையில் அந்தப் போட்டியில் இஸ்ரேலிய வீரர் வெண்கலப் பதக்கம் வென்றார். இதனால் இருவரும் பதக்கம் வழங்கும் மேடையில் ஒன்றாக நின்றனர். இதனை அடுத்தே அவருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஈரான் வீரர்கள் இஸ்ரேலியர்களுடன் நேரடியாக போட்டிகளில் ஈடுபட ஈரானில் தடை உள்ளது. இதனால் இஸ்ரேலுக்கு எதிரான போட்டிகளை தவிர்க்க வீரர்கள் அந்தப் போட்டியை கைவிடுவது போன்ற உத்திகளை கையாண்டு வருகின்றனர்.

40 வயதான ரஜாய் இதற்கு முன்னர் 2015 ஆம் ஆண்டு தாய்லாந்தில் ஆசிய பளுதூக்கல் சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை குத்துச்சண்டை நாளை அக்குறணையில்



அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையிலான டி.பி. ஜாயா ஞாபகார்த்த 52ஆவது வருட குத்துச்சண்டைப் போட்டி கண்டி, அக்குறணை அஸ்ஹர் தேசிய பாடசாலை வளாகத்தில் நாளை (2) முதல் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி தொடர்பில் விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அஸ்ஹர் தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.எப்.எம். சிராஜ் தலைமையில் நேற்று (31) இடம் பெற்றது.

இந்த போட்டியின் 52 ஆண்டு வரலாற்றில் முதன் முறையாக ஒரு முஸ்லிம் பாடசாலை போட்டியை ஒழுங்கு செய்திருப்பது முக்கிய அம்சமாகும் என்று அவர் இதன்போது தெரிவித்தார்.

அகில இலங்கை பாடசாலைகள் குத்துச்சண்டை சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்தப் போட்டியில் மொத்தம் 296 போட்டியாளர்கள் பங்கேற்கவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

# இலவன் செலக்ஷன் வெற்றி

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்



பொத்துவில் அறுகம்பையில் நடைபெற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதைப்பந்தாட்ட வீரர்களைக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைப்பந்தாட்டக் கண்காட்சிப் போட்டியில் அறுகம்பை இலவன் செலக்ஷன் அணி வெற்றியீட்டியது.

பொத்துவில் ஆட்டோ சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்காட்சிப் போட்டி இரவு நேர மின்னொளியில் இடம்பெற்றது. இதில் அறுகம்பை பகுதியில் உள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைச் சேர்ந்த கால்பந்தாட்ட வீரர்களைக் கொண்டு வேல்ட் இலவன் அணியும், பொத்துவில் அறுகம்பை பகுதியில் உள்ள முன்னணி கால்பந்தாட்ட வீரர்களைக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட அறுகம்பை இலவன் செலக்ஷன் அணியும் பங்கேற்றன.

அண்மையில் நடந்த இந்தப் போட்டியில் அறுகம்பை இலவன் செலக்ஷன் 3–1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

# தென்னாபிரிக்க அணியை துவம்சம் செய்தது ஆஸி.



தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டி20 போட்டியில் அவுஸ்ரேலிய அணி 111 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.


டர்பனில் நேற்று முன்தினம் (30) நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 226 ஓட்டங்களை பெற்றது.

அதிரடியாக ஆடிய அணித் தலைவர் மிச்சல் மார்ஷ் 49 பந்துகளில் 13 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 92 ஓட்டங்களை பெற்றார். அதேபோன்று டிம் டேவிட் 28 பந்துகளில் 64 ஓட்டங்களை விளாசினார். தொடர்ந்து பதிலெடுத்தாட வந்த தென்னாபிரிக்க அணி 15.3 ஓவர்களில் 115 ஓட்டங்களுக்கே சுருண்டது. ஆரம்ப விரர் ரீசா ஹட்ரிக் மாத்திரம் 43 பந்துகளில் 56 ஓட்டங்களை பெற்றார். அவுஸ்திரேலியா சார்பில் டன்வீர் சிங்கா 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்த வெற்றியுடன் மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடரில் அவுஸ்திரேலிய அணி 1–0 என முன்னிலை பெற்றுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டி20 போட்டி இன்று டர்பனில் நடைபெறவுள்ளது.

# கபோனில் இராணுவத்தின் புதிய தலைவர் நியமனம்



கபோன் நாட்டில் இராணுவ சதிப்புரட்சி மூலம் கடந்த புதன்கிழமை (30) ஆட்சியை கைப்பற்றிய இராணுவம் இடைக்காலத் தலைவராக ஜெனரல் பிரிஸ் ஒலிகுய் நுகுமாவை நியமித்துள்ளது.


முன்னதாக ஜெனரல் நுகுமாவை அவரது இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தலைநகர் லிப்ரவில்லேவில் வெற்றிக் கொண்டாட்டத்துடன் அழைத்து வந்தனர்.

பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி அலி பொங்கோ தனது வீட்டில் இருந்து வீடியோ ஒன்றில் தோன்றியுள்ளார். அதில் தனக்காக குரல் கொடுக்கும்படி உலகெங்கும் உள்ள நண்பர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

முன்னாள் பிரான்ஸ் காலனி நாடான கபோன் ஆபிரிக்காவின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஒன்றாகும்.

பொங்கோ குடும்பத்துடன் நெருக்கம் கொண்ட பிரான்ஸுடன் ஐக்கிய நாடுகள் சபை, ஆபிரிக்க ஒன்றியம் இந்த இராணுவ சதிப்புரட்சிக்கு கண்டனம் வெளியிட்டுள்ளன.

# இத்தாலியில் ரயில் மோதி ஊழியர் ஐவர் உயிரிழப்பு



இத்தாலி ரயில் நிலையம் ஒன்றில் அதிவேக ரயில் ஒன்று ரயில்வே பணியாளர்கள் மீது மோதிய விபத்தில் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு நகரான டூரினில் ரயில் தண்டவாளத்தின் பாகங்களை மாற்றிக் கொண்டிருக்கும்போதே ரயில் வண்டி மோதியுள்ளது. இதில் 22 மற்றும் 52 வயதுக்கு இடைப்பட்ட ஊழியர்களே கொல்லப்பட்டுள்ளனர்.

டூரின் மற்றும் மிலானுக்கு இடைப்பட்ட ரயில் பதையில் இவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்த வேளை பயணிகள் இன்றி அந்த ரயில் மணிக்கு 160 கிலோமீற்றர் வேகத்தில் வந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நகர மேயர் போலோ பொடோனி தெரிவித்துள்ளார்.

இதன்போது இரு ஊழியர்கள் காயமடையாதபோதும் அவர்கள் மருத்துவ சோதனைக்காக உடன் வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். ரயில் ஓட்டுநர் அதிர்ச்சியுற்ற நிலையில் சிகிச்சை பெற்று பின்னர் வீட்டுக்கு திரும்பியுள்ளார். அவர் விபத்துத் தொடர்பில் பின்னர் விசாரணைக்கு முகம்கொடுக்கவுள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# தென்னாபிரிக்காவில் 5 மாடி கட்டடத்தில் தீ: 73 பேர் பலி



தென்னாபிரிக்காவின் ஜொஹன்னஸ்பர்க் நகரில் உள்ள ஐந்து மாடி கட்டடத்தில் ஏற்பட்ட தீயில் சிறுவர்கள் உட்பட 73 பேர் உயிரிழந்திருப்பதோடு மேலும் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

நகர மையத்தில் உள்ள இந்தக் கட்டடத்தில் நேற்று (30) ஏற்பட்ட தீ பரவுவதற்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஏழு சிறுவர்கள் இருப்பதோடு அதில் மிகக் குறைந்த வயதாக ஒரு வயது குழந்தை ஒன்றும் இருப்பதாக கூறப்படுகிறது. பலர் தீயிலிருந்து தப்புவதற்காக கட்டிடத்திலிருந்து பாய்ந்தவேளை காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பல உடல்கள் முற்றாக எரிந்துபோயுள்ளதால் அவற்றை அடையாளம் காணமுடியாத நிலை காணப்படுவதாக தென்னாபிரிக்க ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

கட்டிடத்திலிருந்து வெளியாகும் உடல்கள் அடையாளம் காணப்பட முடியாதவையாக காணப்படுகின்றன என தெரிவித்துள்ள அந்த ஊடகம் தீயினால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களின் உடல்களாக அவையிருக்கலாம் எனவும் தெரிவித்துள்ளது.

கட்டடத்தில் இருந்த சில குடியிருப்பாளர்களை தீயணைப்பு படையினரால் வெளியேற்ற முடிந்ததாக அவசர சேவைகள் பிரிவின் பேச்சாளர் ரொபர்ட் முலவுட்ஸி குறிப்பிட்டுள்ளார். தீயினால் அந்த கட்டடம் சேதமாகி இருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்களை தேடும் மீட்பு நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

“சடலங்களை மீட்பதற்காக நாம் ஒவ்வொரு தளமாக தேடுதலில் ஈடுபட்டு வருகிறோம்” என்று உள்நாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு முலவுட்ஸி தெரிவித்தார்.

தீயில் கருகிய கட்டடத்திற்கு அருகில் சடலங்கள் வரிசையில் வைக்கப்பட்டிருக்கும் படங்கள் சமூக ஊடகத்தில் பரவியுள்ளன.

கட்டடம் ஒரு ஒழுங்கற்ற வடிவமைப்பில் இருந்ததால் தீ விபத்து நேரிட்டபோது பலரும் கட்டடத்துக்குள்ளேயே சிக்கி வெளியேற முடியாமல் போயிருப்பதாகக் கூறப்படுகிறது.

தென்னாபிரிக்காவின் வர்த்தக மையமாக உள்ள ஜொஹன்னஸ்பேர்க்கின் முன்னர் வர்த்தக மாவட்டம் என்று அறியப்படும் பகுதியிலேயே இந்தக் கட்டடம் அமைந்துள்ளது. இந்த கட்டடம் ஒரு முறையற்ற குடியேற்றமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் முறையான ஆவணங்கள் இல்லாத குடியேறிகளால் பயன்படுத்தப்பட்டிருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இங்கு மற்ற ஆபிரிக்க நாடுகளில் இருந்து வந்தவர்கள் தங்கியிருந்ததாக கூறப்படுகிறது.

ஒவ்வொரு மாடியிலும் சிறுசிறு குடில் அமைத்து தங்கியியுள்ளனர். சுமார் 100க்கும் மேற்பட்டவர்கள் 15க்கும் மேற்பட்ட குடில்களில் தங்கியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 1ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

NSB
National Savings Bank

## விலைமனு அறிவித்தல்

## மோட்டார் பைசிக்கள்களை பாவனையிலிருந்து அகற்றல்

**NSB/PT/2023/13**

கீழே விபரிக்கப்பட்டவாறு தேசிய சேமிப்பு வங்கிக்கு உரிமையான (முதலாவது உரிமையாளர்) 16 பாவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களை பாவனையிலிருந்து அதற்றுவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | வணிக உரிமைப் பெயர் | இலக்கம் | வணிக உரிமைப் பெயர் |
|---|---|---|---|
| HM – 4412 | TVS – Victor 110cc | Wd - 6976 | Bajaj – Pulsar 220cc |
| HM -4421 | TVS –Victor 110cc | MM – 7056 | Bajaj – Discovery 125cc |
| MM- 7094 | Bajaj – Discovery 125cc | MM – 7102 | Bajaj – Discovery 125cc |
| MM- 7072 | Bajaj – Discovery 125cc | MY – 8620 | Bajaj – Discovery 125cc |
| MM- 7078 | Bajaj – Discovery 125cc | MY – 8628 | Bajaj – Discovery 125cc |
| MM- 7101 | Bajaj – Discovery 125cc | MY- 8633 | Bajaj – Discovery 125cc |
| MY- 8613 | Bajaj – Discovery 125cc | MY – 8639 | Bajaj – Discovery 125cc |
| MZ- 1012 | Bajaj – Discovery 125cc | MZ – 2458 | Bajaj – Discovery 125cc |

1. மோட்டார் பைசிக்களை கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் தலைமையலுவலக இடப்பரப்பில் பரீட்சிக்கலாமென்பதுடன் உரித்தான ஆவணங்களை 2023.09.01 ஆம் திகதியிலிருந்து 2023.09.21 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே இடப்பரப்பில் அமைந்துள்ள போக்குவரத்து பிரிவில் பார்வையிடலாம்.
2. மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக 500 ரூபாவையும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையாக 1000 ரூபாவையும் வங்கியின் தலைமையலுவலக கிளையில் செலுத்தப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் நிபந்தனைகள் 2023.09.21 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் வழங்கல் பிரிவிலிருந்து பணவைப்புத் துண்டை சமர்ப்பிப்பதன் மூலம், கையேற்கப்படலாம்.
3. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Invitation of Bids for Disposal of Motor Bicycles" என குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023.09.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு முன்னராக வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
4. ஒரு மோட்டார் பைசிக்களுக்கு மேற்பட்ட முன்வைப்புக்களை சமர்ப்பிக்க விரும்பும் விலைமனுதாரர்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 2023.09.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு திறக்கப்படுவதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.
6. மேலதிக விபரங்களை வழங்கலுக்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டாண்மை பெறுகைக் குழு - பிரதானமானது,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

---

பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு
மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (JEDB)

## 2023 ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையில் தேயிலைக் கொழுந்து விற்பனை மற்றும் இறப்பர் பால் விற்பனைக்கான கேள்வி

➤ **பின்வரும் தோட்டங்களிலிருந்து மூன்று மாத காலத்திற்கு (2023 ஒக்டோபர் முதல் டிசம்பர் வரை) தேயிலைக் கொழுந்து விற்பனைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.**

| தோட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2023 ஒக்டோபர் | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2023 நவம்பர் | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2023 டிசம்பர் | கேள்வி ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) - ரூபா. சுதம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| போபிட்டிய | 27,900 | 27,900 | 27,900 | 5,000.00 | 100,000.00 |
| தெல்தொட்ட | 25,000 | 26,500 | 27,000 | | |
| கலேபொத்த | 23,800 | 25,400 | 23,410 | | |
| ஹந்தான | 50,500 | 59,300 | 54,700 | | |
| கண்தல்ஓய | 16,000 | 16,000 | 18,200 | | |
| மவுண்ட் ஜின் | 22,451 | 20,699 | 22,451, | | |
| நாகஸ்தென்ன | 27,100 | 21,000 | 18,000 | | |
| ரஹதுன்கொட | 36,800 | 41,200 | 36,600 | | |
| ரொக்வூட் | 63,000 | 73,000 | 60,000 | | |

2023 செப்டெம்பர் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து கேள்வி ஆவணங்களும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''தேயிலைக் கொழுந்து விற்பனை'' எனக் குறிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட உறையில் பதிவுத் தபாலில் தலைவர் - கேள்விக் குழு, மக்கள் தோட்டங்கள் அபிவிருத்தி சபை, 55/75, வொக்ஷால் ஒழுங்கை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

➤ **பின்வரும் தோட்டங்களிலிருந்து மூன்று மாத காலத்திற்கு (2023 ஒக்டோபர் முதல் டிசம்பர் வரை) இறப்பர் பால் விற்பனைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.**

| தோட்டங்கள் | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2023 ஒக்டோபர் | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2023 நவம்பர் | மதிப்பீடு செய்யப்பட்ட விளைச்சல் - 2023 டிசம்பர் | கேள்வி ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) - ரூபா. சுதம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூபா சதம் |
|---|---|---|---|---|---|
| குமாரவத்த | 21,964 | 20,501 | 32,758 | 5000.00 | 100,000.00 |
| தியலும | 3,700 | 3,000 | 3,200 | | |

2023 செப்டெம்பர் 20ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனைத்து கேள்வி ஆவணங்களும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''இறப்பர் பால் விற்பனை'' எனக் குறிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட உறையில் பதிவுத் தபாலில் தலைவர் - கேள்விக் குழு, மக்கள் தோட்டங்கள் அபிவிருத்தி சபை, 55/75, வொக்ஷால் ஒழுங்கை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைக்கோரல்களைச் சமர்ப்பிப்பதற்கான விலைமனு படிவங்கள் அடங்கிய நிபந்தனைகளுடனான கேள்வி ஆவணங்களை 2023 செப்டெம்பர் 20ஆம் திகதி வரை ஆவணக் கட்டணமான 5,000.00 ரூபாவை (ஐந்தாயிரம்) எந்தவொரு வேலை நாளிலும் கொழும்பு-02, வொக்ஷால் ஒழுங்கை, 55/75ஆம் இலக்கத்திலுள்ள ஜனதா தோட்டங்கள் அபிவிருத்தி சபையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கோரல் பிணையான 100,000.00 ரூபாவை ஹைட் பார்க் இலங்கை வங்கியில் பேணப்படும் 2327555 என்ற எமது கணக்கிலக்கத்திற்கு வரவிட்டு செலுத்தலாம் அல்லது ரொக்கப் பணத்தில் JEDB தலைமையலுவலகத்திற்கு ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் வரவுத் துண்டை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

கேள்விகள் 2023 செப்டெம்பர் 20ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு JEDB தலைமையகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் கேள்விக் குழுவின் முன்னிலையில் திறக்கப்படும் என்பதுடன் கொள்வனவாளர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கேள்விகள் திறக்கும் வேளையில் கலந்துகொள்ளலாம். JEDB ஆனது தாமதமாகும் விலைமனுக்கோரல்கள் தொடர்பான எந்தவொரு பொறுப்பையும் ஏற்க மாட்டார் என்பதுடன் பெறுகைக் குழுத் தலைவர் கேள்வியை இரத்துச் செய்வதற்கான உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளார்.

(எந்தவொரு தகவல்களுக்கும் 011 - 4758708, 0714408296 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக நுகர்வோர் முகாமையாளரை தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்)

**தலைவர்,**
**மக்கள் தோட்டங்கள் அபிவிருத்தி சபை.**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

## இலங்கை மதுவரித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இலங்கை மதுவரித் திணைக்களத்திற்கு காக்கி சீருடைத்துணிகள், காலணிகள் மற்றும் காலுறைகள் வழங்குவதற்கான கொள்முதல்

1. இலங்கை மதுவரித் திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் தேசிய போட்டி ஏலம் (NCB) நடைமுறையின் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி | பொருட்கள் | அண்ணளவான எண்ணிக்கை (மீட்டர்கள்/ஜோடிகள் |
|---|---|---|
| A | காக்கி சீருடை துணிகள் | 5,700 (M) |
| B | காலணிகள்-அதிகாரி-ஆண்கள் | 315 |
| | - அதிகாரி-பெண்கள் | 05 |
| | - ஏனைய அதிகாரி-ஆண்கள் | 646 |
| | - ஏனைய அதிகாரி-பெண்கள் | 46 |
| C | காலுறைகள் | 3,036 |

தேவைகள் மற்றும் விவரக்குறிப்புகள் பற்றிய விரிவான விளக்கம் மனு ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

2. தகுதியான மனுதாரர்கள் மனு ஆவணங்களைச் சேகரிப்பதற்கு முன், 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண்.03 இன் விதிமுறைகளின் கீழ் பதிவு செய்வதற்கான தேவையை பூர்த்தி செய்திருக்க வேண்டும் மற்றும் மனுக்கள் வழங்கப்பட்ட பிறகு, அந்தச் சட்டத்தின் கீழ் ஒப்பந்தத்தைப் பதிவு செய்ய வேண்டும்.
3. ஆர்வமுள்ள மனுதாரர்கள் தலைமைக் கணக்காளர், நிதிப் பிரிவு, இலங்கை மதுவரித் திணைக்களம் இல.353, கோட்டே வீதி, இராஜகிரிய என்ற முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2023.09.18** ஆம் திகதி **0900** மணி முதல் **1500** மணி வரை (தேசிய விடுமுறை நாட்கள் தவிர) அலுவலக நேரங்களில் மனு ஆவணங்களை பரீசீலனை செய்ய முடியும். தொலைபேசி இலக்கம் **011-2045073**
4. ஆர்வமுள்ள மனுதாரர்கள் வியாபார பதிவுச் சான்றிதழுடன் எழுத்துபூர்வ விண்ணப்பத்தை **2023.09.20** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு முன்பாக மதுவரித்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பித்து ஆவணங்களின் முழுமையான தொகுப்பை (ஆங்கில மொழியில் மாத்திரமே உள்ளது) பெற்றுக்கொள்ளலாம். மேலும் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா.5,000.00 (ஐயாயிரம்) இனை** இல.353, கோட்டே வீதி, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மதுவரித்திணைக்களத்தின் நான்காவது மாடியிலுள்ள கணக்காளர் கிளையில் செலுத்த வேண்டும்.
5. விலைமனுக்கள் கொள்முதல் குழுவின் தலைவருக்கு **2023.09.21** ஆம் திகதி **10.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது தலைமை கணக்காளர் அறை நிதிப் பிரிவு, 4வது மாடி, இலங்கை மதுவரித் திணைக்களம் இல.353, கோட்டே வீதி, இராஜகிரிய எனும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியல் இடுதல் வேண்டும்.

   தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும். ஏனைய முறைகளில் அல்லது மின்னணு முறையில் அனுப்பப்படும் மனுக்கள் ஏற்கப்படாது.
6. மனுதாரர்கள் அனைத்து ஏலப் பொருட்களையும் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட ஏலப் பொருட்களையும் விலைக்கோர முடியும், இருப்பினும் ஒரு மனுதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளை சமர்ப்பித்தால், மனுப் பாதுகாப்பின் மொத்த தொகையாக ஒரு மனுப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். அனைத்து மனுக்களுக்கும் நிபந்தனையற்ற **"மனுப்-பாதுகாப்பு"** வங்கி உத்தரவாதத்தின் வடிவத்தில் இருக்க வேண்டும், இது மனு ஆவணத்தில் பந்தி 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்புக்கான வடிவத்தில் இணைக்கப்பட்டுள்ளது. மனுப் பாதுகாப்பு **2023.09.21** ஆம் திகதி முதல் **2024.01.17** ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

| தொகுதி | பொருட்கள் | மனுப் பாதுகாப்பு தொகை (ரூ.) |
|---|---|---|
| A | காக்கி சீருடை துணிகள் | 100,000.00 |
| B | காலணிகள்-அதிகாரி-ஆண்கள் | 120,000.00 |
| | - அதிகாரி-பெண்கள் | |
| | - ஏனைய அதிகாரி-ஆண்கள் | |
| | - ஏனைய அதிகாரி-பெண்கள் | |
| C | காலுறைகள் | 15,000.00 |

7. மனு சமர்ப்பிப்பதற்கான கடைசி திகதியிலிருந்து **91 நாட்கள் செல்லபடியாகும். (2023.12.20** ஆம் திகதி வரை**)**
8. முறைப்படி பொதியிடப்பட்டு முத்திரையிடப்பட்ட மாதிரிகள் **கொள்முதல் ஆவணங்களுடன் தலைவர், திணைக்கள கொள்முதல் குழு, இலங்கை மதுவரித் திணைக்களம், இல.353, கோட்டே வீதி, இராஜகிரிய** என்ற முகவரிக்கு மனு சமர்ப்பிப்பின் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பரிசோதனை அறிக்கைகளைப் பெறுவதற்கான மாதிரிச் சோதனைக் கட்டணங்கள் மதுவரி ஆணையாளர் நாயகத்திடம் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியினை மனுவுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். வேறு எந்த கட்டண முறைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

   கொள்முதல் நிபந்தனைகளுடன் இணங்காத மாதிரிகள் நிராகரிக்கப்படும் மாதிரிகள் தர கட்டுப்பாட்டு சோதனைக்கு சமர்ப்பிக்கப்படாது மற்றும் பரிசோதனைக் கட்டணங்கள் திருப்பி அளிக்கப்படும். கொள்முதல் நிபந்தனைகளுடன் இணங்கும் மாதிரிகள் தர பரிசோதனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, வைப்புத்தொகையிலிருந்து கட்டணங்கள் கழிக்கப்படும், மேலும் ஏதேனும் இருப்பு இருந்தால், அதுவும் திருப்பி அளிக்கப்படும்.

   தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர்களுக்கான இறுதி ஒப்பந்தக் கட்டணத்திற்கு முன்னர் மாதிரி தரப் பரிசோதனை நடத்தப்படும், மேலும் மாதிரிச் சோதனைக்கான செலவு ஒப்பந்தக் கட்டணத்திலிருந்து கழிக்கப்படும்.

| தொகுதி | பொருட்கள் | அலகுகளின் எண்ணிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் மாதிரி (மீட்டர்கள்/ஜோடிகள்) | மாதிரி பரிசோதனை கட்டணம். (ரூ.) |
|---|---|---|---|
| A | காக்கி சீருடை துணிகள் | 02 (M) | 41,200.00 |
| B | காலணிகள்-அதிகாரி-ஆண்கள் | 01 | No |
| | - அதிகாரி-பெண்கள் | 01 | No |
| | - ஏனைய அதிகாரி-ஆண்கள் | 01 | No |
| | - ஏனைய அதிகாரி-பெண்கள் | 01 | No |
| C | காலுறைகள் | 02 | No |

9. மனுக்கள் சமர்ப்பிப்பதற்கான நேரம் முடிந்தவுடன் உடனடியாக திறக்கப்படும். மனுதாரர்கள் மற்றும் / அல்லது அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில், பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரில் பங்கேற்கலாம்
10. மனு தயார்படுத்தல் அல்லது விநியோகம் தொடர்பாக மனுதாரர்களால் ஏற்படும் எந்தவொரு செலவுக்கும் மதுவரித் திணைக்களம் பொறுப்பாகாது.

**தலைவர்,**
**கொள்முதல் குழு**
**இலங்கை மதுவரித் திணைக்களம்,**
**இல : 353, கோட்டே வீதி,**
**இராஜகிரிய.**
**2023.09.01**

---

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER
adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for
Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

பரீட்சைகள் திணைக்களம்

## 2023/ 2024 ஆம் ஆண்டிற்கு சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவையை வழங்குவதற்கான விலைமனுக்களின் அழைத்தல்

**Bid No.: (4/6/8/2023)**

1. பரீட்சைகள் திணைக்களத்திற்கு ஒரு வருட காலத்திற்கு சுகாதார துப்புரவேற்பாட்டு சேவையை வழங்குவதற்காக நிகரான சேவைகளை வழங்குவதில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவமுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பரீட்சைகள் திணைக்கள பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்கள, 3 ஆம் மாடியிலுள்ள வழங்கல் கிளையின் வழங்கல்களுக்கான உதவி ஆணையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொடர்பு தொலைபேசி : 011-2784393)
4. 2023.09.01 ஆம் திகதியிலிருந்து 2023.09.20 ஆம் திகதி வரையும் (இரண்டு நாட்களும் அடங்கலானது) வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 4,600 ரூபாவை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்கள 3 ஆம் மாடியின் வழங்கல்களுக்கான உதவி ஆணையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
5. 2023.09.08 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பரீட்சைகள் திணைக்களத்தில் விலைமனு முன்னோடிக்கூட்டம் நடந்தேறும்.
6. விலைமனுக்கள் 90 நாட்களுக்கு (2023.12.20 ஆம் திகதி வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 145,000 ரூபா பெறுமதியுள்ளதும் இலங்கையில் செயற்படும் புகழ்பெற்ற வர்த்தக வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரியில் தயாரிக்கப்பட்டதுமானதும் விலைமனுக்களைத் சமர்ப்பிக்கும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2024.01.19 வரையும்) செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணைமுறியொன்றுடன் இணைக்கப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2023.09.21 ஆம் திகதியன்று பிப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் வழங்கல் பிரிவு, 3 ஆம் மாடி, பரீட்சைகள் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அவைகளை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''சுகாதார துப்புரவேற்பாட்டுச் சேவைக்கான ஏற்பாடு - 2023/2024 - ஒப்பந்த இல.: 4/6/8/2023'' என குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. திணைக்கள பெறுகைக் குழுவானது எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கு மற்றும் விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழித்து அனைத்து விலைமனுக்களையும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதனால் அதன் மூலம் பாதிக்கப்பட்ட விலைமனுதாரருக்கு அல்லது விலைமனுதாரர்களுக்கு திணைக்கள பெறுகைக் குழுவின் செயற்பாட்டிற்கான காரணத்தை தெரிவிப்பதற்கு எவ்வித பொறுப்பையும் கடப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**

01.09.2023

# கேள்வி அறிவித்தல்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்

### அபாயகரமான மற்றும் பலகை அறுவைக்கான மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்காக கேள்வி கோரல்

**கேள்வி இல. EPL/PL/TB/T-05/2023 – Timber**

எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் பின்வரும் தோட்டங்களிலுள்ள மரங்களை வெட்டி அகற்றுவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் கோரப்படுகின்றன.

| தோட்டம் | மர வகை | மரங்களின் எண்ணிக்கை | ஏனைய விடயங்கள் | லொட் இலக்கம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| ஹுணுகல | கிரவிலியா | 29 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 01 | 25,000.00 |
| ஹுணுகல | கிரவிலியா | 33 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 02 | 25,000.00 |
| ஹுணுகல | சபு | 51 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 03 | 25,000.00 |
| ஹுணுகல | சபு | 21 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 04 | 25,000.00 |
| ஹுணுகல | சபு | 34 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 05 | 25,000.00 |
| எல்கடுவ | யூகலிப்டஸ் | 35 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 06 | 50,000.00 |
| நாலந்த | பலா | 04 | வீழ்ந்துள்ள மற்றும் இறந்த மரங்கள் | 07 | 20,000.00 |
| நாலந்த | இறப்பர் | 78 | மீள் பயிரிடுவதற்காக அப்புறப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மரங்கள் | 08 | 25,000.00 |
| பிட்டகந்த | யூகலிப்டஸ் | 17 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 09 | 50,000.00 |
| பிட்டகந்த | யூகலிப்டஸ் | 18 | வன முகாமைத்துவத்திற்கு திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 10 | 50,000.00 |

கேள்விப் படிவங்கள் மற்றும் நிபந்தனைகளை 2023-09-01ஆம் திகதி முதல் 2023-09-14ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரையில் குறித்த தோட்ட அலுவலகத்தில் அல்லது இல. 320, ஜனவது பியஸ, டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரியில் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் உப அலுவலகத்தில் அல்லது 2023-09-01ஆம் திகதி முதல் 2023-09-15ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரை ரத்வத்த, உக்குவளையில் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதான அலுவலகத்திற்கு 2000.00 ரூபா பெறுமதியான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூரணப்படுத்தி முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் 2023-09-15ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தின் ரத்வத்த உக்குவெலயில் அமைந்துள்ள தலைமை அலுவலக கேள்விச் சபையின் தவிசாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அவை 2023-09-15ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு கேள்விதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

- திருப்திகொள்ள முடியாத அதிக விலைக்கோரல்களைச் சமர்ப்பித்துள்ள சகல கொள்வனவாளர்களுடன் கலந்துரையாடும் அதிகாரத்தை தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்,**
**செயற்பாட்டு அலுவலகம்,**
**ரத்வத்த,**
**உக்குவளை.**

**தொலைபேசி இலக்கம்:**
**066-2242522 - தலைமை அலுவலகம்**
**066-3682755 - நாலந்த தோட்டம்**
**066-3682457 – பிட்டகந்த தோட்டம்**
**066-3133355 – எல்கடுவ தோட்டம்**
**066-3682458 - ஹுணுகல தோட்டம்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Repeat Your ad For Better Offers

# அறிவித்தல்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

கிழக்கு மாகாண சபை

தகைமைச் சான்றிதழ் வழங்கலுக்காக

**ஊர்திச்சாலைகளை அங்கீகரித்தல் – 2024**

(மோட்டார் வாகன நியதிச்சட்ட இல. (அத்தியாயம்) 203

**2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம் பகுதி 18 மற்றும் 53**

கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் லொறி, பாரமற்ற மோட்டார் லொறி, பாரமான மோட்டார் லொறி, மோட்டார் கோச்சு, பாரமற்ற மோட்டார் கோச்சு, பாரமான மோட்டார் கோச்சு, மோட்டார் பிணவண்டி அல்லது அம்பியூலன்ஸ் ஆகியவற்றுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும் பணியை நிறைவேற்றுவதற்கு வியாபாரமொன்றாக தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ள மற்றும் குறித்தவரி செலுத்துவது தொடர்பாக ஆதாரங்களை முன் வைக்க முடியுமான கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள கராஜ் உரிமையாளர்களிடமிருந்தும் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான டிப்போக்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**01. விண்ணப்பதாரரால் கீழ்காணும் தகைமைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்**

**I. தேவையான தகைமைகள் (பௌதீகம்)**

(அ) 20 அடி நீளமும் 2 1/2 அடி அகலமும் 4 ½ அடி ஆழமும் உடைய வாகனங்களை பரீட்சிக்கும் குழியொன்றை அல்லது அதற்கு ஈடான வசதியை வழங்கும் மேடை அல்லது தூக்கி (Hoist) ஒன்று இருத்தல் வேண்டும்.

(ஆ) பிரேக்கைப் பரிசீலனை செய்யும் உபகரணம்.

(இ) பிரதான விளக்கை பரீட்சிக்கும் உபகரணம்.

(ஈ) வாகனத்தின் அடிப்பகுதி துருப்பிடித்தலை பரீட்சிக்கக்கூடிய உபகரணங்களும் திருப்பு உளிகள், சுழற்றும் கருவி, சுத்தியல் போன்ற உபகரணங்களும் கேபிள், தடுப்புக்குழாய்கள், உந்துகல் முட்டுக்கள் போன்றவற்றை பரீட்சிக்கும் கருவிகளை உடையனவாய் இருத்தல் வேண்டும்.

**ii. தனிப்பட்ட தகைமைகள்**

**சான்றிதழ் வழங்கும் அலுவலர்களாக கீழ்காணும் தகைமை பொருந்திய நபர்கள் கராஜில் சேவைக்காக நியமிக்கப்பட வேண்டும்.**

(அ) மோட்டார் போக்குவரத்து பொறியியலாளர் விஞ்ஞான பாடம் தொடர்பாக விசேட தேர்ச்சியுடன் அல்லது இயந்திர பொறியியல் விஞ்ஞானம் தொடர்பாக தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் அல்லது கனிஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் சான்றிதழினைப் பெற்று மோட்டார் வாகன பொறியியல் துறையில் 05 (ஐந்து) வருட அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) மொரட்டுவ, இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் மோட்டார் இயந்திர விஞ்ஞானம் தொடர்பாக 04 (நான்கு) வருட பாடநெறியை பூர்த்தி செய்து சித்தியடைந்திருத்தல் அல்லது இதனுடன் தொடர்புபட்ட வேறு தகைமைகளுடன் மோட்டார் வாகன பொறியியலாளர் துறையில் 08 (எட்டு) வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

**02. விண்ணப்பத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.**

(அ) விண்ணப்பப்படிவம் (பிரதேச செயலகங்கள் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், கிழக்கு மாகாணத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.)

(ஆ) விண்ணப்பத்துடன் பின்வரும் பத்திரங்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(1) நகரசபை அல்லது பிரதேச சபை உத்தியோகத்தர்களால் 2023 ஆம் ஆண்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்திய வியாபாரச் சான்றிதழின் பிரதி.

(2) ஊர்திச்சாலை அமைந்துள்ள சரியான இடத்தினை தெரிவித்து பரிசோதகர் சென்று பார்வையிடுவதற்கு வசதியாக நகரத்தின் மத்தியிலிருந்து சென்றடையக்கூடிய பாதையை எடுத்துக் காட்டும் வரைபடம் ஒன்று.

(3) அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்களின் தகைமைப் பத்திரங்களின் புகைப்படப் பிரதிகள், மற்றும் வாகன அனுமதிப்பத்திர புகைப்படப் பிரதிகள் சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) மீளளிக்கப்படாத வைப்புத் தொகையான ரூபா.2,000/= இற்கு பெறப்பட்ட காசுக் கட்டளை ''ஆணையாளர் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், கிழக்கு மாகாணம்'' எனும் பெயரில் பெற்று அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "வாகன தகைமைச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான ஊர்திச்சாலை பதிவு செய்தல் - 2024" எனக் குறிப்பிட்டு ஆணையாளர் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், கிழக்கு மாகாணம், புனித அந்தோனியார் வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2023.10.02 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஆணையாளர்**
**மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்**
**கிழக்கு மாகாணம்**

# திரப்பனே பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

01. திரப்பனே பிரதேச சபைக்குச் சொந்தமான திரப்பனே நகர மத்தியில் உள்ள விவசாய உற்பத்தி சந்தை கட்டிடத்திற்குச் சொந்தமான 5 கடை அறைகளை 2023.·.2026 வரை 3 வருடங்களுக்கு குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. கேள்வி விண்ணப்பங்கள் 2023.09.01 முதல் 2023.09.14 பி.ப.3.00 வரை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் 2023.09.15 பி.ப.2.00 இற்கு முடிவடைவதுடன் அன்றே கேள்விப்பத்திரங்கள் திறத்தல் பி.ப.3.00 இற்கு திரப்பனே பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும்.
03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உரியது. கடை அறைகள் காணப்படும் நிலையிலேயே கேள்வி கோரப்படும். குறித்த கேள்வி நிபந்தனை கோவை மற்றும் ஏனைய விபரங்களை அலுவலக நேரங்களில் திரப்பனே பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
04. குறித்த வரித்தொகைக்கு மேலதிகமாக நீர், மின்சார சிட்டைகள் வரிக்கட்டணத்தொகை, திரப்பனே பிரதேச சபையினால் விதிக்கப்படும் ஏனைய வரித்தொகையையும், குறித்த வரிக்காலத்திற்காக செலுத்த வேண்டியதுடன் அதனோடு இணைந்த உடன்படிக்கைக்கு வரல் வேண்டும்.
05. கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக கடை அறைகளை வழங்கிய பின் பாதுகாப்பு பிணைத் தொகையாக ரூபா ஒரு இலட்சம் பிணைத்தொகையை திரப்பனே பிரதேச சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
06. திரப்பனே பிரதேச சபையின் அதிகாரிகள், ஊழியர்கள் அவர்களது கணவன், மனைவி அவர்களில் தங்கியிருப்போர் அல்லது உறவினர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியாது.
07. கடை அறைகளை குத்தகைக்கு விடல் 03 வருடங்களுக்கு மாத்திரம் இடம்பெறுவதுடன் குறித்த ஒப்பந்த காலம் முடிவடைந்தவுடன் அக்கடை அறைகள் இருக்கின்ற நிலையிலேயே திரப்பனே பிரதேச சபைக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
08. கேள்விதாரர்கள் சமப்பிக்கப்படும் மாதாந்த கட்டணத்தின் பிரகாரம் பொருத்தமான விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
09. கடை அறைகள் ஒன்றிற்கு மேல் விண்ணப்பிப்பதாயின் அதற்காக வேறுவேறாக கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடை அறையின் இலக்கத்தை விண்ணப்பப்பத்தில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும் அத்துடன் அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**அட்டவணை**

| தொடர் இல | கடை அறை இலக்கம் மற்றும் விபரம் | கடை அறையின் அளவு | குறைந்தபட்ச கேள்வித் தொகை ரூ. (மாதாந்த கட்டணம்) | கேள்விப் பிணைத் தொகை ரூ. மீளளிக்கப்படும்) | காகிதாதிக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கடை அறை இல 1 (பிரதான வீதியில் இருந்து முதலாவது கடை அறை) | 15'0"X11'6" | 8,500.00 | 6,120.00 | 2,500.00 |
| 02 | கடை அறை இல 2 (பிரதான வீதியில் இருந்து முதலாவது கடை அறை) | 15'0"X11'6" | 8,500.00 | 6,120.00 | 2,500.00 |
| 03 | கடை அறை இல 3 (பிரதான வீதியில் இருந்து முதலாவது கடை அறை) | 15'0"X11'6" | 8,500.00 | 6,120.00 | 2,500.00 |
| 04 | கடை அறை இல 4 (பிரதான வீதியில் இருந்து முதலாவது கடை அறை) | 15'0"X11'6" | 8,500.00 | 6,120.00 | 2,500.00 |
| 05 | கடை அறை இல 5 (பிரதான வீதியில் இருந்து முதலாவது கடை அறை) | 15'0"X11'6" | 8,500.00 | 6,120.00 | 2,500.00 |

10. கேள்வி கோரல் மாதிரி பத்திரக் கட்டணம் மற்றும் கேள்விக்கான பிணை வைப்பு மேற்கண்டவாறு அமையும்.
11. கேள்விகோரல் சம்பந்தமான இறுதித்தீர்மானம் திரப்பனே பிரதேச சபை கேள்வி கமிட்டிக்கு உரியது. இது சம்பந்தமாக ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவையாயின் 025-2055209 என்ற தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள்.

**எம்.டபிள்யூ.பிரேமலால் விமலேந்தர**
**செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**திரப்பனே பிரதேச சபை**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want




- Auto Focus

adz Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் | திகதி | முகவரி |
|---|---|---|
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 124, காலி வீதி, தெகிவளை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 84 A, காலி வீதி, தெகிவளை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 51A, W.A. சில்வாமாவத்தை, கொழும்பு 06. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 18, கெசல்வத்த, பாணந்துறை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 358/D, மதுக்கம வீதி, தர்கா நகரம். |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 534, காலி வீதி, வாட்டுவ. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 25, யட்டியந்தோட்ட வீதி, அவிசாவளை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 24/A, பிரதான வீதி, கன்வெல்ல. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 25A, பிரதான வீதி, ஹெலியகொட. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 755/1, பன்னிப்பிட்டியவீதி, பத்தரமுல்ல. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 434, E.W.பெரேரா மாவத்தை, கோட்டை வீதி, பிடகோட்டை. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட. |
| 02/09/16/23 | ஒக்டோபர் 2023 | இல. 595, உயர்மட்ட வீதி, கங்கொடவில, நுகேகொட. |
